Q6 : 417
N29
149045



திருக்குடும்பந்துணை

# அர்ச்சியசிஷ்ட
# மரிகருதம்மாள் அம்மானை

இஃது
பழையகாலத்துப்
பிரதிகளைக்கொண்டு பிழையறத்திருத்தி
அச்சிடப்பட்டது

பிரசுரக்கர்த்தர் :
அருள் அண்டு கம்பெனியார்,
தபால் பெட்டி 294
மதராஸ்.
MADRAS.
August 1929.

# அர்ச்சியசிஷ்ட மரிகருதம்மாளின்
# சரித்திரச் சுருக்கம்

---

(ஸ்ரீமான் ச. செல்வராஜு ரெட்டியார், பி.ஏ., எல்.டி.
அவர்களால் வரையப்பெற்றது.)

அர்ச். மரிகருதம்மாள் என்னும் கன்னியர் திலகம் நீர்வளம் நிலவளம் நிறைந்த பிசிதியா வென்னும் நாட்டின் தலைநகராகிய அந்தியோக்கியா பட்டணத்தில் பிறந்தவள். அவளுடைய பெற்றோர் அஞ்ஞானிகள். மரிகருதம்மாள் பிறந்த சின்னாட்கெல்லாம் அவள் தாய் மரணமடைந்தனள். தந்தையாகிய தேயோதேசி யென்பான் கிறீஸ்துவ மாதாகிய செவிலித்தாய் ஒருத்தியைக் கொண்டு தன் மகளை வளர்ப்பித்து வந்தான். அந்தச் செவிலித்தாய் கிறீஸ்துவள் என அவனுக்குத் தெரிந்திருக்காதென்றே யூகித்தல் வேண்டும். ஏனெனில் அங்ஙனந் தெரிந்திருந்தால், அவன் தன் குமாரத்தியை வளர்க்க அம்மாதை யமர்த்தியிரான் என்பது அவன் பின்னால் தன் மகளிடம் நடந்து கொண்ட விதத்தைக் கொண்டு நிச்சயமாய்ச் சொல்லலாம்.

## கிறீஸ்துவப் பயிற்சி

மரிகருதம்மாள் அஞ்ஞானியாகிய தாயை இழந்தது அவளுடைய நன்மைக்கென்றே சொல்ல வேண்டும். தேவ சித்தமே மாதாவை யிழந்த மகளுக்கு ஒரு கிறீஸ்துவமாதைச் செவிலித்தாயாகச் சேர்த்ததுபோலும். தேவதா பக்தியிற் சிறந்த அப்புண்ணிய மாது மரிகருதம்மாளைத் தன் வயிற்றுதித்த மகளெனக் கருதி, அவளுக்கு வேண்டியனயாவும் குறையறச்செய்து வளர்த்து வந்தாள். குழந்தையின் சரீர வளர்ச்சியைமட்டுங் கவனிப்பதில் அவள் காலங் தள்ளாமல், அதன் ஞான வளர்ச்சியின் மட்டிலும் கண்ணுங் கருத்துமாயிருந்தாளானபடியால், சிறுவந் தொடங்கியே மரிகருதம்மாள் சத்திய வேதக் கொள்கைகளை அவளிடங் கற்றுணர்ந்து, அவற்றை விரும்புவாளாயினள். செவிலித்தாய் அவள் இருதயத்தில் ஊன்றிய ஞானவிதை நாளடைவில் நற்பலனளிக்கலாயிற்று. அதிகஞ் சொல்வானேன்? மரிகருதம்மாள் குழந்தைப் பருவம் நீங்கி மங்கையர் பருவம் எய்தா முன்னமே ஞான தீட்சைபெற்றுக் கிறீஸ்துவளானதுமன்றி, அவள் தன் கன்னிமையைத் தனது ஆத்தும நாயகராகிய நமதாண்டவருக்கு அர்ப்பணஞ் செய்தாள். அவளைச் சூழ்ந்திருந்த அஞ்ஞான ஆபாசங்களை அலகையின் ஆரவாரங்களென அவள் வெறுத்து, உலகைத் துறந்து உத்தமியாய் வாழ வேண்டுமென்

னுங் கருத்துடையவளாய், ஜெபத்தியானத்திலும் ஒறுத்தல் உபவாசத்திலும் தன் காலத்தைக் கழித்து வந்தாள்.

## தந்தையின் அவல மரணம்

அவள் தந்தையாகிய தெயோதேசி அஞ்ஞானி யென்றோம். அவன் அலகையின் உருவங்களாகிய அஞ்ஞான தேவதைகளை வணங்கி வந்ததோடு, அவைகளுக்குத் தூபதீப நைவேத்தியங்கள் செய்யும் பிரதான குருவாகவு மிருந்தான். அவன் மதவைராக்கியங் கொண்டவன். தனது மதந்தவிர்த்து வேறெந்த மதமுங் கூடாதென்னுங் கொள்கையன். அஞ்ஞான மதத்தின் அனுச்சாரங்களையெல்லாம் முற்றிலுமறிந்து, அவற்றை ஜனங்களுக்குப் போதித்து, அதனால் பெருமையுற்று வாழவேண்டு மென்னுங் கருத்துடையவன். இத்தகைய குணமுங் கொள்கையுமுடைய தெயோதேசி தன் மகள் அஞ்ஞானத்தை விட்டு மெய்ஞ்ஞானத்தைத் தழுவினதாகக் கேள்விப்பட்டபோது, அவனுக்குண்டான ஆத்திரமும் அங்கலாய்ப்பும் எவ்வாறிருந்திருக்கு மென இதை வாசிப்போரே யூகித்துக்கொள்ளலாம். அவன் உடனே மரிகருதாளை யழைத்து விசாரித்தான். அப்பெண்மணியோ தகப்பன் கோபத்துக் கஞ்சாமல் தான் மெய்யங்கடவுளை யறிந்து, பொய்த் தேவதைகளைப் புறக்கணித்து, சத்திய மறையைத் தழுவிய உண்மை வரலாற்றை ஒன்றும் ஒளிக்காமல் சொல்லிவிட்டாள். தெயோதேசி அதைக் கேட்டுச் சினங்கொண்டு, நயத்திலும் பயத்திலும் அவளைத் தன் வழி திருப்ப முயன்றான். ஆனால் உண்மை யொளியைக் கண்டானந்தமுற்ற அந்நங்கையர்நாயகம் அவன் சொற்படி கேளாததுடன், மெய்ம்மறைச் சத்தியங்களை அவனுக் கெடுத்தோதி அவனை மனந்திருப்பப் பிரயாசைப்பட்டாள். ஆயினும் மூர்க்கனாகிய தெயோதேசி அவள் எடுத்துக் கூறிய நியாயங்களொன்றையுங் கவனியாமல், அலகை வழிப்பட்டு, இறுதியில் நோயுற்று அவலமாய்ச் செத்தான்.

## அரசன் இச்சைக் காளாதல்

தந்தை யிறந்தபின் சின்னாள் மரிகருதம்மாள் சத்திய மறையின் உத்தம நெறியில் நித்த மொழுகி, பக்தியிற் சிறந்து, புண்ணிய சாங்கோபாங்கத்தில் வளர்ந்தேறி வந்தாள். அவள் சாதாரணமாகத் தினந்தோறும் தனக்குச் சொந்தமான ஆடுகளை யோட்டிக்கொண்டு பட்டணத்துக்கு வெளியிலிருந்த கானகத்தில் மேய்த்து வருதல் வழக்கம். அச்சமயத்தில் அவள் நேரத்தை வீணே கழிக்காமல் ஜெபத்தியானத்தில் செலவிடுவாள். உலகப் பற்றில்லாத உத்தம மங்கை யாதலால், கானக வாழ்க்கை யவளுடைய மனநிலைக் கேற்றதாயிருந்தது. இங்ஙனம் அவள் நிம்மதியாய்க் காலங்கழிக்கையில், ஒரு நாள் அவ்வூரை யாண்டிருந்த ஒலிவோர் என்னும் அதிகாரி வேட்டையை நாடி அக்கானகம் வர நேர்ந்தது. மனித சஞ்சாரமில்லாத

அவ்வனத்தில் பதினறு அல்லது பதினெட்டு வயதிருக்கும் என்று சொல்லத் தகுந்த அழகிய மங்கை யொருத்தி ஆடு மேய்த்துக்கொண் டிருப்பதைக் கண்டு, அவள் மேலாசைகொண்டு, சேவகரை யனுப்பி அவளை யழைத்து வருமாறு ஆக்கியாபித்தான். அங்ஙனமே ஏவலர் சென்று மரிகருதம்மாளை ஒலிவோரிடம் அழைத்து வந்தனர். அதிகாரி அவள் பூர்வோத்திரத்தைக் கேட்க, மரிகருதாள் தான் சத்திய வேத மென்னுங் குலத்தைச் சேர்ந்தவ ளென விடை பகர்ந்தாள். அவன் அக்கன்னிகை யூதர்குலத் தாளாக்கும் என்றெண்ணி, விபரத்தை வினவ, அவள் தன் தந்தை சேசுக்கிறீஸ்துநாத ரென்றும், அவர் கற்பித்த வேதநெறி யொழுகுதலே அவள் குலமர பென்றும் சொல்லி விட்டாள். ஒலிவோர் பொய்த் தேவதைகளை வணங்கும் அஞ்ஞானி. உலக மாய்கையிற் கிடந்துழன்று ஒதரிய அக்கிரமங்களைப் புரிந்து வந்த உன்மத்தன். அவன் சத்தியவேத மெனக் கேட்டதும் காதில் நாராசங் காய்ச்சி யூற்றியதுபோல் கடுகடுத்துக் கண் சிவக்க, அக்கன்னியரை முனிந்து, அவளைக் கண்டபடி யேசி, கிறீஸ்துவை வணங்குவதை விட்டுத் தனது தேவர்களைக் கும்பிடுமாறு கூறினன். அங்ஙனம் செய்யாவிடில் சித்திரவதை செய்து கொல்வதாகப் பயமுறுத்தினன். கன்னிகையோ காவலன் கோபத்துக் கஞ்சாமல் தனது கர்த்தராகிய சேசுபிரானை மனதில் தியானித்து, சத்தியவேதச் சரிதையை விபரமா யெடுத்துரைத்து, அதில் தான் சேர்ந்திருத்தல் முற்றும் நியாய மெனக் காட்டினள். மூர்க்க குணம் படைத்த அதிகாரி அவள் கூறியவைகளைக் கேட்டுக் கோபங்கொண்டு மெய்ம்மறையைப் பழித்து தேவதூஷணங்கக்கி, அவளை எந்த விதத்திலாவது தன் வசமாக்க வேண்டு மென முயன்ருன். அக்கன்னியர் திலகமோ அவன் கூறியவை யனைத்தையுங் கண்டித்துக் கிறீஸ்து வேதத்தின் மாட்சிமையை நிலை நாட்டினள். ஒலிவோரின் ஆட்டம் அவளிடம் பலிக்கவில்லை.

## சிறைவாசம்.

அதுகண்ட ஒலிவோர் அவள் கால்கைகளுக்கு விலங்கிட்டு, சிறைச்சாலையில் அடைத்து வைக்கும்படி உத்திரவளித்தான். அங்ஙனமே அவள் சிறைவாசஞ் செய்கையில், பாவியாகிய தான் சர்வேசுவரனுக்காக நிந்தை யவமானங்களை அனுபவிக்க நேர்ந்ததற்காக சந்தோஷித்து, அவரையே சதா தியானித்துக்கொண் டிருந்தாள். சின்னள் சென்றபின் அவளை வரவழைத்து அவள் மனப்பான்மையைச் சோதிக்க, அதன்கண் மாற்ற மொன்றுமில்லை யெனக்கண்டு அவளைச் சக்கரத்தில் வைத்தாட்டிச் சித்திரவதை செய்யுமாறு கட்டளை யிட்டான். மரிகருதம்மாள் சக்கரத்தில் சித்திரவதையுற்றுக் குறுதிமயமாய் மீண்டும் ஒலிவோர் முன்கொண்டு வரப்பட்டாள். அப்போது ஒலிவோர் அவளைத் தன் தேவர்களைக் கும்பிடுமாறு கேட்டான். அதற்கு அவள் தன்னுயிர் போனலும்

கிறீஸ்துவை மறுதலிப்பதில்லையென உறுதியாய்ச் சொல்லிவிட்டாள். அதன்மேல் அவளை இன்னும் அதிக கொடிய சித்திரவதைக்குள்ளாக்கினார்கள். அவள் ஒன்றுக்கும் அசைந்திலள் எனக் கண்ட ஒலிவோர் தாதியர் சிலரையனுப்பி அவளுக்குப் புத்திசொல்லி அவள் மனதை மாற்றுமாறு ஏவினான். அங்ஙனமே தாதியர் சென்று கூறிய நயமொழிகளனைத்தும் மரிகருதாளிடம் காட்டிலெரித்த நிலவு போலாயின. அதன்பின் ஒலிவோர் தான் வணங்கும் தேவதைகளாகிய அலகைகளை ஏவி அவளைப்பயமுறுத்தி மனந்திருப்புமாறு அனுப்பினான். மரிகருதம்மாள் தன் உறுதியான விசுவாசத்தாலும் நம்பிக்கையாலும் தேவசினேகத்தாலும் அவைகளை வென்று ஜெயசீலியாய் நிற்கவே, அவைபயந்து நடுங்கி ஓட்டம் பிடித்தன. மரிகருதம்மாள் அலகையினொட்டம் ஒடுங்க உதவியருளிய தன் ஆத்தும நாயகருக்கு நன்றிபுரிந்தாள்.

## அவளால் வேதசாட்சியானவர்கள்

என்ன செய்தும் மரிகருதம்மாள் தன்னிலை மாறாதிருத்தலைக் கண்டு கடுஞ்சினமுற்ற ஒலிவோர் எரியும் பந்தங்களால் அவள் சரீரத்தைச்சுட்டு வதைசெய்யும்படியாய் ஆக்கியாபித்தான். அங்ஙனமே கொலைப்பாதகர் அவளுடைய துகிலுரிந்து சரீரத்தைச் சுட்டெரிக்கையில் அம்மாதரசி வாதையைப் பொருட்படுத்தாமல் சர்வேசுவரனைப் பார்த்து மன்றாடிய வண்ணம் நிற்பதைக் கண்டு, அவளைச் சுற்றி நின்றவர்கள் பலவாறு பேசி, அவளுக்குப் புத்திசொல்லி, பிடிவாதத்தை விட்டு ஒலிவோரை மணந்துகொள்ளும்படியாக வற்புறுத்தினார்கள். அவளோ அவர்கள் வார்த்தைக்குச் செவிகொடாமல் சரீர நிலையாமையைக் குறித்து அவர்களுக்குப் போதித்தாள். பின்னர் அவளைக் குளிர்ந்த ஜலம் நிறைந்த கொப்பறையில் போட்டார்கள். ஆனால் சர்வேசுரனுடைய கிருபையால் கன்றிக்கருத்துக் காயங்கள் நிறைந்திருந்த சரீரமானது எப்போதும் போல் பூரண சுகம்பெற்று விளங்குவதைப் பார்த்தவர்கள் அதிசயம், அதிசயம் எனக் கூவி அதிகாரியிடம் ஓடி நடந்தவைகளைச் சொன்னதுமன்றி, தாமும் அம்மாது வணங்கும் மெய்யங்கடவுளையே தங்கள் தேவனென விசுவாசிப்பதாகச் சொல்லவே, அதுகேட்டு ஒலிவோர் கோபாவேசங் கொண்டு அவர்களைப் பிடித்துச்சிரச்சேதஞ் செய்யுமாறு கொலைஞரை ஏவினான். அங்ஙனமே அவர்கள் செய்ய, மரிகருதாளின் போதனையாலும் சாதனையாலும் பலர் வேதசாட்சிகளாயினர்.

## வேதசாட்சி முடிபெறுதல்.

இது நிகழ்ந்தபின், ஒலிவோர் இனி மரிகருதாள் உயிருடனிருந்தால் பட்டணத்திலுள்ள மாந்தரை மயக்கித் தன்வழி திருப்பிக் கொள்வாள் என்றஞ்சி அவளைக் கொண்டுபோய்ச் சிரச்சேதஞ் செய்யக்கட்டளை யிட்டான். கொலைஞர் அவளை யழைத்துச்சென்று

கொலைக்களம் நிறுத்த, பக்திநிறைந்த அவ்வுத்தமிச் சிறுமிக்கு மன்னுயிர்க்காக இன்னுயிரைத் தந்திரட்சித்த ஏக பரிபூரண சத்திய தேவனுக்காகத் தன்னுயிரைத்தந்து, அவருண்டாக்கிய சத்திய மறைக்குச் சாட்சி பகரும் பாக்கியத்தை யருள வேண்டுமென மன்றாடி நின்றாள். அதன்பின் கொலைஞர் அவள் தலையை வெட்டினர். இந்த மகத்தான காட்சியைப் பார்த்துநின்ற வானதூதர் அக்கன்னியர் திலகத்தின் தூய ஆத்துமத்தைக் கரத்தேந்தி மோட்சலோகங் கொண்டு சேர்த்தனர். இங்ஙனம் அர்ச். மரிகருதம்மாள் மோட்சமுடி பெற்று யாவராலும் போற்றப்படும் கன்னியும் வேதசாட்சியாயுமாயினள். ஒலிவோர் ஏவிய அலகைகளை அடக்கிக் யாண்டு அகலவே துரத்தி ஜெயசீலியாய் நின்றமையால் அர்ச். மரிகருதம்மாள் நரகப் பேய்களை யடக்கியாளும் வல்லமையுள்ளவள் என நம்பி, அலகைகளால் பீடிக்கப்பெற்று அவதியுறும் மாந்தர்க்காக அப்புண்ணிய மாதை வேண்டிக்கொண்டு அவள் உதவியை நாடுதல் கிறீஸ்துவர்களுக்குள் வழக்கமாயிருந்து வருகிறது.

## முடிவுரை.

மேற்கூறிய சரிதை கிறீஸ்துவர்களுக்குள் ஆதிகாலந் தொட்டுப் பாரம்பரியமாய் வழங்கி வருவதாகும். இது சரித்திரப் பூர்வமான தென்றாவது திருச்சபையி னங்கீகாரம் பெற்றதென்றாவது சொல்வதற்கில்லை. அவளுடைய திருச்சரீரம் தஸ்கனி நாட்டில் மோன் தேபியாஸ்கோனே என்னு மிடத்தில் பூசிதமாக அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறதாம். திருச்சபையானது இந்த அர்ச்சியசிஷ்டமாதின் திருநாளை ஜூலைமாதம் 20-ந்தேதி கொண்டாடி வருகிறது. அர்ச் மரிகருதம்மாளே எங்களைக் காக்க வேண்டிக்கொள்ளும்.

✠

அநாதி நம.

# ஆர்ச்சியசிஷ்ட

# மரிகருதம்மாள் அம்மாவணை.

## காப்பு.

வெண்பா.

சந்த மரிகருதம்மாள் தர்மச் சரித்திரத்தைப்
பைந்தமிழால் அம்மானை பாடுதற்கே—இந்தரையில்
ஆரணத்தைக் காட்டமனு வாய்த்துயரம் பூண்டிறந்த
காரணரின் பொற்பாதங் காப்பு.

## தேவமாதா ஸ்துதி.

செய்ய மரிகருதம்மாள் சீர்சிறந்த காதைநலம்
வையகத்திற் பாவாய் வழங்குதற்குத்—துய்யதவப்
பன்னிரண்டு மன்மரபின் பைந்தொடியாங் கற்புநிறை
கன்னிமரி பொற்பதமே காப்பு.

## சூசையப்பர் ஸ்துதி.

பார்மேல் மரிகருதின் பாடுபட்ட நிர்ணயத்தைச்
சீர்சேர்அம் மானையெனச் செப்பவே—நேர்சேரும்
பண்பரவு சூசைமுனி பாவிற் குறைமேவாக்
கண்பரவி நிற்கவே காப்பு.

## தேவ ஸ்துதி.

அம்மானை.

சீராருஞானஞ் சிறந்தோனைநெஞ்சில்வைத்துப்
பாராரும்வாழப் பகருவேன்அம்மானை
முன்னவனேயேக முகனேமுடிவில்லானே
தன்னிகரில்லாதவனே தானுயிருப்போனே
வந்துதவியிக்கதைக்கு வாகுறநல்வாக்கருளும்
எந்தைசருவேசுரனே எவ்வுயிர்க்குங்கர்த்தாவே
மாதுதவக்கன்னி மரிகருதம்மாள்கதையைத்
தீதுநிறைபொல்லாச் சிறியேன்யான்பாடுதற்குத்
தந்திடுவீர்நல்வாக்குத் தாதாவேவேதாவே
உந்தனருள்பெற்றகன்னி ஒலிவோரின்கையாலே

கற்புநெறிகுன்றாமல் காசினியில்பாடுபட்டு
அற்புதமாயும்முடைய ஆனந்தமோட்சமதில்

சென்றுமுடிபெற்ற திருச்சரிதையான்பாட
நன்றெனவேவந்துதவும் நானிலத்திலிக்கதைக்கு

அஞ்சலிசெய்தேத்துகின்றேன் ஆதியந்தமில்லானே
தஞ்சமெனவந்தடைந்தேன் தற்காக்கவேணுமையா.

## அர்ச்சியசிட்டர் துதி.

பத்துவசனப்படியே பாருலகுள்ளோர்நடக்க
முத்திவழிகாட்டும் முனிவோர் திருச்சரணம்

ஆதாரமாக அடைக்கலமாய்நெஞ்சில்வைத்துப்
பாதாரவிந்தம் பணிந்துரைப்பேனம்மானே

வேதாகமத்தை விரித்துயான்பாடுதற்கு
மாதாவே தேன்போல வாக்கருளுந்தாயாரே.

## அவையடக்கம்.

அம்புவியில்மேற்கலைகள் ஆராய்ந்துகற்றவரே
எம்பெருமானுக்கே இணங்கும்பெரியோரே

அறியேன்பலகலைகள் ஆராய்ந்துபாடிடவே
அறியேன்தமிழால் அறையும்பிழைபொறுப்பீர்

ஓராண்டுசென்ற ஒருமழலைக்கொத்தமொழி
பார்பூண்டவென்வசனம் பற்றுமோபற்றாது

அரசர்முடிக்குமணி ஆரமிட்டஆணிமுத்து
திரைகடலிற்சங்குமணி சேர்த்திணக்கிலொப்புளதோ

ஆனதொருவாறதுபோல் அறியாதானென்பாடல்
தேனமிர்தம்போலே தெரிந்தேற்றுக்கொள்வீரே.

## பாயிரம்.

மாதுமரிகருதாள் மங்கையவள்காதைநலம்
போதவுரைக்கும் புதுமைதனைக்கேட்டருளும்

சுத்தமகுடமுடி சூடரசர்கோலோச்சும்
அத்திசையிலேயிருக்கும் அந்தியோக்கியாநகரில்

புகர்நிறைந்தவஞ்சகத்தான் புல்லன்தேயோதேசி
நகரமதிக்க நவைபெற்றுவாழ்ந்திருந்தான்

தகைபெறவேயன்னவனுந் தையலுடனேவாழ்ந்து
மகளெனவேயிந்த மரிகருதைப்பெற்றெடுத்தான்

செகமகிழப்பேரோங்கித் திரைகப்பேயினங்கள்
புகழ்சேரிவள்தகப்பன் பூதமதத்துள்ளவனும்

குருவாயறுசமயக் கொண்டாட்டக்காரனுமாய்
எரிவாய்நரகில் இருக்கும்பசாசழைப்பான்

திளைத்தபில்லிசூனியத்தால் தீதாய்வெகுபகைகள்
விளைத்துவெகுபாவம் மிக்கபூசைவேள்விசெய்வான்

பில்லிவிடுப்பான் பெருகிடுதீட்சைவைப்பான்
நல்லமடமங்கையரை நானிலத்திற்கற்பழிப்பான்

பொற்புடையமங்கையர்க்குப் புல்லன்மருந்திடுவான்
இப்படியேசெய்துவரும் ஈனமுள்ளகாலமதில்

பொற்கொடியைப்பெற்றவனை போய்நரகிலேவீழ்ந்தாள்
மற்கபடன்பொல்லாத வஞ்சன்தெயோதேசி

இன்னஞ்சிலகேடுகளும் ஈனன்செய்துவந்தவகை
மன்னுலகிலேவாழும் மாந்தர்களேகேட்டருளும்

மருந்திடுவான்கைமை மயக்கியேகற்பழிப்பான்
விருந்திடுவான்நஞ்சால் விடுவான்பசாசுகளை

விடுகைவிடுப்பான் மிகுத்தசத்திபூசைசெய்வான்
நடுமனையிலேயிருக்க நல்லமடமங்கையர்கள்

மங்கையரைக்கொண்டு வரவேவல்செய்திடுவான்
சங்குசக்ரஞ்சூலம் சமைப்பான்சடுதியிலே

பேயைவிடுவான் பெருஞ்சடைசூலத்துடனே
நாய்போல்வடிவுகொள்ள நாடியனுப்பிடுவான்

அனுப்பியேயெல்லவர்க்கும் அங்கங்கேபுத்திசொல்வான்
நினைப்பகற்றியாவரையும் நேராய்மயக்கிடுவான்

விடுவான்பசாசுகளை வெஞ்சினச்சிங்கம்போல
கடுவாய்ப்புலிபோல் கருங்குரங்குநாய்போல

பன்றியரவம்போல பறவைமிருகம்போல
ஒன்றெலிஆமை உயர்நெருப்புத்தூண்போல

நெருப்பெரியும்வன்னரக நிஷ்டூரப்பேய்களுக்கு
திருக்கிட்டபூசைபண்ணிச் சேவிப்பானெழுத்தால்

அஞ்சுமூன்றெட்டெழுத்தால் அன்பத்தோரட்சரத்தால்
மிஞ்சுசித்துவித்தையெல்லாம் மேல்விதமாய்ச்செய்திடுவான்

செய்வனிந்திரஜாலவித்தை தீரைகப்பேயாலே
மைவிழியாரைக்கெடுக்க மதனநூல்வித்தையெல்லாம்

இப்படியேசெய்வான் இருநிலத்திலுள்ளளவும்
செப்புகின்றவன்பாவி தேயோதேசியென்பவன்றான்

தேயோதேசிபயின்ற திருமகளாம்அர்ச்சியசிஷ்ட
தூயமரிகருதாஞ் சுத்ததிருநற்றவஞ்சேர்

பொற்கொடியைப்பெற்றவனை போய்நரகில்வீழ்ந்ததுவும்
மற்கபடஞ்சேர்தகப்பன் வன்னரகில்போனதுவும்

மின்னுமரிகருது மெல்லியரைவேறொருத்தி
அன்னகரிற்கொடுபோய் அன்பாய்வளர்த்ததுவும்

ஒருத்திவளர்க்கையிலே ஓதரியசத்தியத்தைத்
திருத்தமுடனவளுந் தேர்ந்தேயறிந்ததும்

அறிந்துகன்னியாஸ்திரியா யருந்தவசுபண்ணியதும்
சிறந்தவந்தியோக்கியிலே சித்திரநல்ரூபமுள்ள

கன்னியரைத்தானொலிவோர் கற்பழிக்கக்கேட்டதுவும்
உன்னியவன்தனக்கே உத்தரங்கள்சொன்னதுவும்

சொற்கொண்டுகன்னிமின்னாள் துறந்துரைத்தசாஸ்திரத்தால்
தர்க்கம்பண்ணியேயவனைத் தையலாள்வென்றதுவும்

மட்டற்றபொல்லாத மன்னன்மனஞ்சலித்து
வெட்கமுற்றுக்கன்னியரை மிக்கபாடுகள்படுத்தி

அக்கரையாக அரிவைமரிகருதைத்
துக்கமிகவடையச் சூழ்ந்தவிருளடர்ந்த

நீடுஞ்சிறைவீட்டில் நிட்டூரமாகமனம்
வாடும்படிஒலிவோர் வன்காவல்வைத்ததுவும்

வைத்தபின்புதான்வணங்கும் வன்னரகப்பேயைவிட்டுப்
புத்திசொல்லஏவினதும் பூவைபசாசுதனைப்

பிடித்துச்சடையிழுத்துப் பின்காலாலேமிதித்து
அடித்துத்துரத்தவது அழல்நரகிற்போனதுவும்

போனதன்பின்தானொலிவோர் பூவையரைச்சூளையிலே
தானேநிறுத்தினதுந் தையலுடல்வெந்ததுவும்

வெந்தபின்புசீவன் விடாதேயிருந்ததுவும்
மந்தமுறும்பொல்லாத மாபாவியானவன்தான்

குளிர்ந்தநீர்க்கொப்பரையில் கோதையரைப்போட்டதுவும்
எழுந்துநின்றுநற்றவத்தாள் ஏர்சுடர்போல்நின்றதுவும்

நின்றபுதுமைகண்டு நேசமுற்றுமண்ணுலகோர்
நன்றெனவே யெல்லோரும் நாதன்மறைசேர்ந்ததுவும்

வேதமதில்வந்தவரை வெஞ்சினங்கொண்டேயொலிவோர்
தீதுறவேவெட்டினதும் செல்வர்கதிபெற்றதுவும்

கதியடையப்பாடுபடக் கருதுமனக்கற்புடைய
மதிவளரும்மங்கையரின் வன்னமுறுசிரசை

ஒலிவோரினுத்தரவால் ஒருபாவிவெட்டினதும்
பொலியுங்கிருபை பொருந்துகர்த்தன்றன்னிடமாய்

மட்டில்லாமோட்சமதில் மங்கைகன்னிஆத்துமமும்
ஒட்டோலகமாக உம்பர்கதியிற் சேர்ந்ததுவும்

தானும்பரஞ்சோதி சர்வேஸ்வரனுடைய
தேனூர்முகமுகமாய் தினம்வீற்றிருப்பதுவும்

முத்தியுறிக்காதைதனை முகனைமுடிவுவரை
சித்திரமாயம்மானை செப்புகிறேன் கேட்டருளும்

செப்புகிறேனிப்புவியில் திறலோ னெழுதிவைத்த
ஒப்பரியபுத்தகத்தில் உரையொழுங்குதப்பாமல்

பார்த்தடியேன் பாடுகிறேன் பாவலரேயிக்கதைக்குள்
ஏற்றகுற்றமுண்டானல் இசையத்திருத்திடுவீர்.

## நாடு நகரச் சிறப்பு.

கார்கொண்டமேகம் கடல்சூழ்ந்த நன்னகரின்
சீர்கொண்டநாட்டின் திருவளமையான்துணிந்து

முந்தியுரைக்க முறைமையாய்க்கேட்டருளும்
அந்தியோக்யாவென்னும் அழகார்திருநகரில்

அரசர்க்கரசனெனும் அண்ணலொலிவோருமன்னன்
திருநகரையாண்டிருக்குஞ் சீருடையநாளையிலே

பட்டணத்தைத்தானடத்தும் பாங்கதனைக்கேட்டருளும்
மட்டலருந்திண்புயத்தான் வளமதனைக்கேட்டருளும்

நகர்நாட்டினிலிருக்கும் நற்சிறப்புமங்கிருக்கும்
வகையாங்குடிச்சிறப்பும் வாஞ்சையுறக் கேட்டருளும்

மூட்டுமழல்வன்னரகில் மொய்த்தழுந்தும்பேய்களுக்கு
நாட்டிலெங்குங்கோபுரங்கள் நல்லமணிவேலைசெய்து

வேலையதுசுற்றுமதில் மேலேயுருப்படுத்திக்
கோலமிட்டுமாடுசிங்கம் குரங்குபன்றிநாயெலிகள்

எலியும்பெருச்சாளி யானைமுகப்பாம்புமயில்
மெலியும்சடைமுடியும் வெஞ்சினச்சூலம்பிடித்துச்

சூலத்துடன்தடியும் தொங்திப்பெருவயிறும்
சேலைத்துகிலுரிந்து சேருநிருவாணமுமாய்

இப்படியேசுற்றுமதில் எங்குமேவேலைசெய்து
அப்படியேரதமெங்கும் அதின்மேல்விசித்திரங்கள்

செம்பொற்றகடடித்துச் சிறந்தவயிரமதால்
கம்பமெனவேநாட்டிக் காளாவிளக்கேற்றிக்

காளையுடன்ரிஷபம் கல்லதனுனுண்டாக்கி
நீளச்சிகரகும்பம் நீண்டமணிக்கோபுரமேல்

சிகரக்குடைமுடிமேல் செம்பொற்றகடடித்துப்
பகருவிதங்களெல்லாம் பாம்புபெருச்சாளியுடன்

பெருச்சாளிசிங்கமுகம் பெருவயிறுயானைமுகம்
கருச்சாரும்பன்றி கருங்குரங்கோடேபருந்து

கூகைகருங்காக்கைக் கோலமெல்லாஞ்சித்திரித்து
மாய்கைபலபுரியும் வஞ்சியர்கள்கூத்தாட

ஆடற்பலப்பெண்கள் அலங்கரித்துக்கூத்தாடப்
பாடல்நயத்தால்மோக பாவம்வெகுவாய்வளர

வளருமிராச்சியத்தில் மன்னர்மன்னர்வீதியெல்லாம்
கிளருமறுகானமெல்லாங் கெம்பீரமாயிருக்கும்

இருமருங்குநாலுதிக்கும் எங்கெங்கும்மண்டபங்கள்
பருமரங்களுந்தேரும் பணிச்சித்திரமான

வேலையிட்டுத்தேரோட வேசியர்கள்கூத்தாடக்
கோலமிட்டுவீதியெல்லாங் குத்துவிளக் கேற்றிடுவார்

ஏற்றரியமேடைமச்சு இரத்னமணிமண்டபங்கள்
சாற்றரியவுப்பரிகைத் தாழ்வாரப்பந்திகளும்

மாடமுடன்சவுக்கை மணியாசனமுயர்த்திக்
கூடமுகடுகம்பம் கோட்டைமதில்கொத்தளமும்

கொத்தளமேல்சாலைகளும் கோட்டைப்பெருவாயிலுறச்
சித்திரஞ்சேர்வாவிகரை செந்நெல்வளர்ந்தோங்க

ஒங்குசத்ர சாலைதர்மம் ஒழுங்காகவேவகுத்து
பாங்குடனேயப்பதியோர் பருத்தமாடாடுபன்றி

பண்ணரியதீநரகில் பரங்தெரியும்பேய்களுக்கு
நண்ணிப்பலியிடுவார் நாதமென்றுங்கும்பிடுவார்.

கொடியசெடிலாடிடுவார் கும்பிடுவார்தெண்டனிட்டுப்
படியில்சருகுதின்பார் பாங்குடனேகுட்டிடுவார்

தின்பார்மலஜலங்கள் சேர்த்து அரிகண்டமதை
வன்பாகவேகழுத்தில் வயிரமுடன்பூண்டிருப்பார்

பூண்டபில்லிசூனியத்தைப் புதைத்திருப்பார்நெஞ்சகத்தில்
நீண்டசடைவளர்த்து நிருவாணராய்த்திரிவார்

தெரிவையருமாடவருஞ் சிலேகளேயேயுரிந்து
எரிவாய்ப் பசாசுகட்கு இனியசத்திபூசைசெய்வார்

பூசைபலாதியுடன் பொருந்துகள்ளுச்சாராயம்
தோசைபலகறியும் சோறும்படைத்தபின்னர்

எல்லாருங்கூடியொன்று யெச்சில்கலங்தேகுடித்துப்
பொல்லாதமோகசங்கம் போதவெறிகொண்டுசெய்வார்

செய்வாரவரவர்கள் சிவலோகஞ்செல்லவென்று
நைவார்கடுநரகில் நடுங்கிவிழுந்தேயலறி

அலறும்பெருநரகில் அழல்சேர்பசாசினுக்குப்
பலரும்வெகுபூசைபண்ணிப் பத்திமுத்திகொண்டிடுவார்

செய்வார்திறப்பாய்த் தெருவையலங்கரித்து
நைவார்வெகுபசியால் நல்லுடலைத்தாமொறுத்து

ஒறுத்துவெகுபசியால் உலர்ந்தசருகுதின்பார்
வெறுத்துலகவாசைவிட்டு விரதம்பிடித்திடுவார்

இருப்பார்மடமாதர் இப்படியேயங்நகரில்
கரைப்பார்கள்தங்களுடல் கடியதபசுபண்ணி

இப்படியேதீநரகில் எரியும்பசாசினுக்கே
அப்படியேதான்நடக்க அந்தியோக்கியநகரில்

அந்தியோக்கியநகரில் அண்ணலொலிவோருமன்னன்
மந்தமுறும்புத்தியில்லான் வளமைதனைக்கேட்டருளும்

கேளும்பசாசினுக்குக் கீர்த்திதரவேண்டுமென்று
நீளும்பெருமையுடன் நேர்ந்துவிழாக்கொண்டாடித்

தேரோட்டம்பூசையுடன் திருநாள்நடத்திடுவான்
பாராட்டிமோகவிதம் பலஸ்திரீகள்கூத்தாட

ஆடற்பலப்பெண்கள் அவன்வணங்குந்தேவதைக்கு
நாடெல்லாங்கோயில்கட்டி நரகமதுபோலிருக்க

நரகப்பெரும்பாதை நாடகச்சாலையாடல்
விரகத்துடனே விருப்பமாய்ப்பார்த்திருப்பான்

இருப்பான்பசாசினுக்கு எந்நாளும்பூசைவைத்துத்
துரைத்தனராய்ப்புத்திகெட்டுச் சொல்லரியவன்குருடாய்க்

குருடரிலும்புத்திகெட்ட குருடனெனலிவோரும்
திருடர்வெகுதப்பறையோர் செப்பரியபொய்யுடையோர்

பொய்வயிறுதான்வளர்க்கும் புல்லருடன்கூடி
நையவணங்கிடுவான் நரகப்பசாசுகளை

நரகப்பேயைவணங்கும் நண்பனெனலிவோரும்
விரகமுடன்மோக விதங்கள்கொண்டுபாடல்செய்வான்

சொல்லரியவன்குருடர் ஜோசியஞ்சொல்சாஸ்திரிகள்
எல்லையில்லாதப்பறைகள் எப்பொழுதுமேமொழிவார்

மறையோதும்ப்ராமணரும் வஞ்சமனத்தாசிகளும்
திறைசேரொலிவோரை ஜெயஜெயவென்றேபுகழ்வார்

புகலரியவன்னரகில் பொங்கியெழும்பேய்கள்
சகலதப்பறைப்புதுமை தான்காட்டுமிந்நகரில்

நகரியந்தியோக்கியிலே நாடியிடுமாயவித்தை
பகரில்வெகுசூழ்ச்சியுடன் பலபிணிகள்தான்பிறக்கும்

மாயவித்தையால்மரித்த மாயோகிமெத்தவுண்டு
காயமதைநொருக்கிக் காட்டிவிடுந்தீநரகைத்

தீர்க்கும்பலநோய்கள் தீநரகப்பேய்களங்கே
ஆர்க்குந்தெரியாதுகண்டீர் அலகைசெய்யும்மாயவித்தை

இப்படியேகண்ணிவைத்து இந்தவிதத்தாற்பிடித்து
அப்படியேவன்னரகில் அனைவோரையுங்கொடுபோய்

வெப்பமுறவேயதனில் வேதனைக்குள்ளாக்கிவிடும்
தப்பறையந்தியோக்கியிலே தான்நடக்கும்வாறிதுவே

இந்தமயக்கமதை எண்ணுமலேகுருடாய்
அந்தியோக்கியாநகரில் அழிந்திடுவார்மானிடர்கள்

இவ்வளவேபட்டணத்தில் எந்நாளும்அந்நீதம்
செவ்வைவழியானதென்று செய்துகொண்டுதான்வருவார்

வருவார்சகலருமே மணியகாரக்குருக்கள்
தரைமிசையிலேயவர்கள் தங்கள்தங்களுக்குரிய

மங்கையர்களோடுபின்னும் வைப்பாட்டிகள்கூடச்
சங்கைகெட்டுப்பூதலத்தில் தானடப்பார்பின்னுகை

அங்கமுள்ளஆடவர்கள் அக்கினியிலேகுதிப்பார்
பங்கப்படுத்தும் பசாசுகள்கொக்கரித்துப்

பின்பவர்களாத்துமத்தைப் பேய்கள்கொண்டுபோய்நரகில்
வன்புகொண்டுவாதைசெய்து வன்னரகிற்போட்டுவைக்கும்

போட்டுவைத்துச்செத்தமன்னர் போலேயுருவெடுத்து
வாட்டமுடன்வந்துநின்று வானவர்கள்தானெனவே

தானேகனவில்வந்து தந்திரங்களாற்பகட்டி
மானமுறும்புத்தியில்லா மானிடரைப்பேயாக்கி

மானிடரைத்தான்மயக்கி மாபெரியகோபுரங்கள்
ஈனமுறக்கட்டுவித்து எண்ணரியசாலமுடன்

தந்திரங்களுண்டுபண்ணித் தாறுமாறாகவேதான்
மந்திரமாரோடுதுரை மணியகாரக்குருக்கள்

தனக்கானதந்திரத்தால் சகலரையும்தான்மயக்கிக்
கனத்தெரியுந்தீயலகை கண்ணிவைத்துத்தான்பிடிக்கும்

பிடிக்கும்புலவோர்மறையோர் பெரியோர்கள்பாடல்கண்டு
படிக்கும்பலபெயர்கள் பங்கிவிருந்தெல்லவர்க்கும்

எல்லையில்லாத்தந்திரங்கள் இப்படியேவன்னரகில்
சொல்லரியபேய்களுமே சூழ்ச்சியுள்ளகண்ணிகொண்டு

தானேஅந்தியோக்கனிலே தானடத்துமிவ்வளமை
நானேயதையறிந்து நவிலுகிறேனெல்லவர்க்கும்

விருத்தம்.

புல்லரெனும்அந்தணரும்அறிவில்லாத
புலவர்களும்மறையவரும்புரையுள்ளோரும்
நல்லறிவுபொறுமைதயவிரக்கமில்லா
நகர்நாட்டுக்குடிகளொடுநடத்துநீதி
வல்லமைசேர்ஒலிவோராம்மன்னன்கூட
வஸ்தேதென்றறியாமல்மருண்டுநித்தம்
வல்லிருளேநிறைந்துநகராண்டுஞான
வழிதெரியாதிருவிழியுமறைந்தான்மன்னே.

## மரிகருதாள் திருமறைசேர்தலும்
## தந்தைக்குப் புத்திசொல்லலும்
## அவனது அவல மரணமும்.

அம்மானை.

வாராழிசூழ்ந்திலங்கும் வையப்பூமண்டலத்தில்
போகவேவிளங்கும் பீனயுள்ளமாநகரில்

நகர் அந்தியோக்கியிலே நாணமில்லாதேயிருப்போன்
சிகரநகரக்குருவாம் தேயோதேசியென்பான்

தேயோதேசிமகளாம் திறஞ்சேர்மரிகருதாள்
தாயார்மடிந்திறந்து தாழ்நரகில்போனளே

போனதின்பின்தன்மகளைப் புல்லன்தேயோதேசி
தானேயொருத்திகையில் தான்வளர்க்கவேகொடுத்தான்

கொடுபோய்மடமாதைக் கோதைவளர்க்கையிலே
அடைவாகநல்லபுத்தி அரிவையர்க்குவந்தபின்பு

வந்தனைசேர்மாமறையை மரிகருதுதான்தேடி
தந்தைசருவேசுரனர் தன்னுகமநெறியை

அறிந்துபரன்தீட்சை அவள்பெற்றபின்புநல்ல
சிறந்தஒருசந்தியுடன் செபத்தியானங்கள்செய்வாள்

செய்யமரிகருதாள் செகதலத்தினைவிட்டுத்
துய்யசருவேசுவரனைத் தோத்திரிப்பாள்நித்தியமும்

பத்திவைத்துநேரொழுங்காய்ப் பரம்பொருள்தான்வீற்றிருக்கும்
உத்தமவானேக்கி ஒழுங்காய்ச்செபம்புரிவாள்

கொண்டறிவின்கண்ணுலே கோதைகன்னிமோட்சமுற
அண்டபிண்டமுங்கடந்து அப்பால்அருளொளியாய்

இருக்கும்பரஞ்சுடராம் ஏகசருவேசுவரனைக்
கருத்தினிற்ருனறிந்து கற்பனைகட்கேற்றவழி

அறிவாலறிந்துகொண்டாள் ஆத்துமத்துக்கானநன்மை
சருவேஸ்வரனுடைய சத்தியவேதப்பொருளை

போதப்பராபரன்றன் புண்ணியமாமெய்வேதம்
ஓதுகின்றகற்பனையில் உறுதிகொண்டுகெற்புடையாள்

நித்தியசர்வேசுவரனை நித்தமுமனத்திலுன்னி
சுத்தமரிகருதாள் தோத்திரிப்பாளம்மானை

இப்படியேமாதவத்தாள் எண்ணியிதயமதில்
அப்படியேபூவுலகில் ஆசைவழியொழித்து

இருந்துபலசாஸ்திரங்கள் எல்லாம்அறிந்துணர்ந்து
திருந்துமரிகருதாள் சித்திரரூபம்போன்ற

கன்னிகையாள்கற்பியலைக் காத்தினியகாவலதாய்
உன்னிவரும்பாவவழி உள்ளனவெல்லாமகற்றி

அடைத்திடுவாள்கண்காது ஐம்பொறியின்வாயில்களைக்
கெடுத்திடுவாள்தன்னுடலைக் கதியடையவேணுமென்றே

என்றுமரிகருதாள் இருக்குமந்தநாளையிலே
மன்றலருந்தகப்பன் வளமையெல்லாமுற்றறிந்து

தொடுத்தானேபுத்திசொல்லத் தூயமின்னாரைச்சினந்து
கெடுத்தாளேயென்பிழைப்பைக் கர்வமிஞ்சியேயிவள்தான்

மிஞ்சியபுத்தியினால் வேறுவழியேநடந்து
அஞ்சாமலென்மகள்தான் ஆகடியம்பண்ணுகிறாள்

பண்ணரியநம்முடைய பலசமயசாஸ்திரத்தை
எண்ணுமற்றட்டுகிறா ளென்றுசொல்லியேசலித்தான்

பதினென்புராணமொடு பன்னரியநால்வேதம்
விதிமுறையின்சாஸ்திரத்தை விழலெனவேபேசுகின்றாள்

ஏசுகிறாள்தேவர்களை எரிநரகப்பேயெனவே
பேசுகிறாள்நம்முடைய பெருமையுள்ளதேவர்களை

எல்லாமறைநூலும் இயம்புகின்றதேவர்களை
அல்லாமல்வேறுமொரு ஆண்டவருண்டாமெனவே

சொல்லுகிறாளென்செய்வேன் தோகையிவள்என்றன்;
நல்லமகளெனவே நானிலத்திற்பெற்றேனே

என்றுமனங்கலங்கி இருந்துசலித்ததந்தைக்
கன்றுமரிகருதாள் அலர்வாய்மலர்ந்துரைப்பாள்

தாதாவேயீன்றெடுத்த தந்தையரேநீர்கேளும்
வேதாப்பிதாவான மெய்ப்பொருளாந்தற்பரனார்

தானாயிருந்தபிரான் சருவாதிகாரணனார்
ஆனவொருநொடியில் ஆகெனயாவும்படைத்தோன்

பிறப்புமிறப்புமில்லான் பேரொளியாயெங்குமுள்ளான்
மறுக்கறுப்பொன்றில்லாதான் மனோவாக்குகெட்டாதான்

ஊழிமுடிவில்லான் ஒருகுறையுமில்லாதான்
ஆழிபுவிக்குள்ளடங்கான் ஆக்கையிலான்மூப்புமிலான்

எல்லையில்லாத்தெய்வீகன் எங்கும்நிறைந்தவனும்
வல்லபரஞ்சோதியைத்தான் வாகுபெறநான்தொழுவேன்

சொல்லுமையா தந்தையரே சுருதிமறைஆகமங்கள்
எல்லாம்வருத்தருளும் இறைவனாந்தெய்வீகன்

எங்கேயிருப்பமென்று எண்ணிமனங்கொண்டறிவீர்
அங்கேமனதுருகி ஆண்டவரைக்கண்டிருப்பீர்

என்றுமரிகருதாள் இப்படியேதந்தையர்க்கு
ஒன்றுபடஇவ்விதமா யுத்தரங்களையுரைத்தாள்

சீர்தூக்கிப்பாருமுங்கள் தேவர்களின் நிர்ணயத்தை
நேர்தூக்கிப்பாரும் நிலைகளுண்டோ சொல்லிடுவீர்

பெற்றெடுத்ததந்தையும்நீர் பெருமைமகள்தன்னுரையை
உற்றுணர்ந்தேகேளும் உயரறிவின்கண்ணுலே

தந்தையரேநீர்வணங்குஞ் சங்கையற்றதேவர்கள்தாம்
நிந்தையுறப்பெண்கள்வைத்து நிகழ்மோகபாவமதால்

லீலைசெய்துபெண்க ளினைநிருவாணமதாய்ச்
சீலைதனையுரிந்து தீதுமிகச்செய்தார்கள்

தொய்வோடுபெண்கடனைச் சுமந்துதிரிந்தார்கள்
ஐயோபல்சாதிகளாய் அழிந்தார்களம்புவியில்

அம்புவியிலும்முடைய ஆகடியத்தேவர்களை
நம்பினல்மோட்சமுண்டோ நாணமில்லாதேயுமது

வேதார்பில்லி வஞ்சனைக்கும் சித்துவித்தைமோகினிக்கும்
ஆவதெனிற்பொல்லாத ஆகடியத்தேவரல்லோ

என்றுசொல்லித்தந்தையர்க்கு இப்படியேயுத்தரங்கள்
ஒன்றுபடச்சொன்னதன்பின் உறுபாவிவெட்கமுற்றுன்

வெட்கமுற்றுத்தன்னறிவு மேவாததந்தையரும்
நற்பொறைகளில்லாமல் நாணமுற்றுப்போகலுற்றுன்

போனதன்பின்தந்தையரும் பொங்கழல்சேர்கூளிகளாய்
ஈனமுற்றுவன்னரகி லிருக்கின்றபொல்லாத

பேய்கள்குலத்துடனே பெருவாயிற்றீயெரிய
மாயவித்தைகற்றவனை வன்னரகிலேகொடுபோய்

சித்துவித்தைமோகினியாற் சேர்குறளிசெய்தவனைத்
தத்திவிழித்தீநரகில் தான்கொண்டுபோவதற்கு

இறுக்கிப்பிடித்து இகழ்தேயோதேசிதனை
அறுக்கையுடனே அழல்நரகிற்போட்டனவே

விருத்தம்.

தந்தையும்இசலியாடித் தழல்நரகடைந்தபின்னர்
முந்தையாய்நின்றஆதி முதல்வனையிறைஞ்சிநோக்கிச்
சிந்தைநொந்திரந்துவேண்டிச் சிறந்தழகுடையமாதாம்
பைந்தொடிவளர்த்ததாயின் பக்கலிலிருந்தாளன்றே

## மரிகருதம்மாளின் சுகிர்த நடக்கை.

### அம்மானை.

தந்தைஇறந்து தழல்நரகில்வீழ்ந்தபின்பு
சந்தமரிகருதம்மாள் தன்னைவளர்த்தாளிடமாய்ச்

சீருஞ்சிறப்புமுறச் செய்யமரிகருதம்மாள்
நேருடனேவாழ்ந்திருந்த நீர்மையினைக்கேட்டருளும்

பெற்றெடுத்ததாயினிலும் பேர்பெரியதாய்போல
உற்றசெல்வபாக்கியத்தோ டொண்டொடியும்வாழ்ந்திருந்தாள்

வாழுமரிகருதம்மாள் வாய்மைசெறிபேரழகை
நீழுலகிலொப்பிடவோர் நிகருண்டோவம்மானை

காரலைபோல்கூந்தல் கலாநிதியைப்போலமுகம்
சீர்பிறையைப்போன்றநுதல் தேர்ந்தவில்லைப்போற்புருவம்

கெண்டையெனவிழியும் கிளர்குமிழ்போல்மூக்கதுவும்
*தொண்டைஇதழும் †துவர்வாய்‡மணிநகையும்

வள்ளையிருசெவியும் வழங்குமொழிநிறைந்த
கிள்ளைமொழியுங் கிளர்ந்தசிறப்புடைய

கமுகம்நிகர்கழுத்தும் கமலமலர்போற்கரமும்
இமிழ்தருவான் மின்னிடையும் இசைந்தஅன்னம்போல்நடையும்

தோகைமயில்போலழகும் துறவிகளைப்போற்குணமும்
நாகரீகசெல்வமெல்லாம் நானுரைக்குந்தன்மைய தோ

இத்தொகையோடேயிருந்து இறையவனைத்தஞ்சமென்று
நற்றவத்தாள்ஞானமெனும் நன்னெறியையுற்றுணர்ந்து

மண்ணாசைதனையொழித்து மாற்றுக்கதித்திடுபொன்
தன்னாசையையொழித்துச் சதிசெய்யுடலாசை

வீணாசையென்று வெறுத்துத்தவத்தாசை
பூணாசைபற்றியிந்தப் பூதலத்தின்ஆசையெல்லாம்

நீர்மேற்குமிழி நெருப்பிலிடும்பஞ்செனவே
ஓர்மையுடனறிந்து உடலொறுத்துமெய்த்தவத்தைச்

செய்யத்தொடர்ந்து செகமீதுறுவாழ்வு
பொய்யாமெனநிதமும் புத்திதெளிவாகி

ஐம்பொறியின்வாசல் அடைத்துக்கபாடமிட்டு
வம்பினையுடறுத்து வாக்குமனக்காயமதை

---

* தொண்டை—கோவை. † துவர்—முத்து. ‡ மணி—பவளம்.

நன்னெறியிலேயடக்கி நாடோறுமெய்யொறுத்து
தன்மனெநறிபூண்டு தவத்துறுதிகொண்டனளே

ஆறுலட்சணக்கடவுள் அன்றுரைத்தமெய்ம்மறையின்
கூறுபாடானவெல்லாங் கொள்ளமனமுள்ளினளே

கற்பனைகள்பத்தையுந்தன் கருத்திலெழுத்தாக
நற்பிரியமுற்று நயந்துதரித்தனளே

திருச்சபையின்கற்பனையைத் தேடரியமாலையென
உருச்செறிந்தமுத்தியென ஓங்கணியாய்ப்பூண்டனளே

தேவதிரவியத்தைத் தேடிப்புதைத்துவிட்டுப்
பாவத்திரவியத்தைப் பதரெனவேதூற்றினளே

மூன்றுமுயற்சியைத்தான் முன்கையணியாகத்
தேன்றுளிக்கும்வாயாள் சிறக்கவணிந்தனளே

பத்திவிசுவாசமொடு பகர்நம்பிக்கைமூன்றும்
வைத்தபதக்கமென மனத்துள்ளிருத்தினளே

பொறுமைதயவிரக்கம் போற்றரியநல்லொழுக்கம்
திறமையுறுமாட்சி செய்கைநலமுள்ளினளே

கற்புநிலைபொற்புநிலை காட்சிநிலைமாட்சிநிலை
விற்பனத்திலோங்கி விளங்கியுயர்ந்தனளே

ஏழைபரதேசியர்க்கும் இடருள்ளஆதுலர்க்கும்
பேழைநிறைந்த பெருநிதியுமாயினளே

இப்பரிசாயநகரில் இருஞ்செவிலித்தாயிடமாய்ச்
செப்புமரிகருதாள் செழுமையுடனேவளர்ந்து

ஓங்குமிவள்வயது ஒன்றிரண்டுமூன்ருகி
தேங்கநாலைந்தாறேழ் சிறந்தவயதெட்டாகி

நவமாகிப்பத்தாகி நல்லவயதீராருய்
உவமையடங்காதவய தோங்கிமங்கையாள்பருவம்

நடக்குமந்தகாளையிலே நாரியரைத்தான்வளர்த்த
மடக்கொடியாளென்னு மறுசெவிலித்தாயிடமாய்

ஆடுகிடாயோடுமறி ஆனதுவுமேவெகுவாய்
நீடிவெகுபந்தையுண்டு நீணகரிலம்மானை

வளர்த்தெடுத்ததாயார்க்கு மனதுமகிழ்ச்சியுறத்
திளைத்தபெருமந்தைகளைச் சீருறவேதான்வளர்த்து

ஆட்டுமந்தைமாட்டுமந்தை யானபெருமேதிமந்தை
நீட்டுகடாமந்தைகளைச் செப்பமுடனேமேய்த்து

நகர்க்கடுத்தமாவனத்தில் நங்கைமரிகருதாள்
†தகர்க்கடாமந்தைகளைத் தான்மேய்த்துக்கொண்டிருந்தாள்

மேய்த்திருக்கும்போது வென்றியொலிவோரரசன்
வாய்த்தபெருஞ்சேனையுடன் மந்திரிமார் தாம்சூழச்

சதுரங்கசேனையுடன் தளத்துடனேவேட்டைபுக்க
உதிரக்கறைவேலோன் ஓங்குவனந்தானணுகி

வந்திடுமவ்வேளையிலே மங்கைமரிகருதாள்
அந்தவழிதனிலே ஆட்டுமந்தைமேய்த்திருந்தாள்

வேண்டுதல் விருத்தம்.

ஆற்றுமம்பரமலோக வருள்தனையடையவேண்டி
ஏற்றுவாள்தியானங்கொண்டு இறைவனையறிவின்கண்ணால்
நாற்றமேயெழும்புமீன வுடலெனநகைத்துத்தேவைப்
போற்றுவாள்காட்டிற்சுற்றிப் புருவைமேய்த்திருக்குங்கன்னி.

## மரிகருதாளை அரசன் இச்சித்தல்.

அம்மானை.

கன்னியரைக்கண்டொலிவோர் காமவெறிமிகுந்து
சென்னிதனக்கேறித் தியங்கிமதிமயங்கி

ஊறுபட்டமோகவெறி உற்றெழுந்துமெய்சோர்ந்து
தாறுமாறாகிமிகு சத்தியொடுபித்தமுமே

கொண்டுவெகுசோபமுற்றுக் கோதையர்மேலேநினைவாய்
அண்டவொண்ணுத்தாகம் அதிமயக்கங்கொண்டாளே

வந்தநினைவுகெட்டு மருவிரகமிஞ்சிமன்னன்
சந்ததம்வாழுங்கொலுப்போய்த் தனக்கினியசேவகரைக்

கூவியருகழைத்துக் கூறலுற்றான்மன்னவனும்
தாவிநாமெல்லோருந் தருவனத்தில்காணநின்ற

ஆடதுமேய்த்தங்கிருந்த அரிவையின்பால்நீங்கள்சென்று
தேடரியவென்பெருமை செப்பியவட்கிதமாய்த்

தேற்றியுரைத்தெனது சீர்சிறப்பைத்தான்காட்டி
மாற்றியவள்மனத்தை வாகாயெனக்கிணக்கும்

பேர்பெரியகோத்திரத்தில் பிறந்தவளேயாமாகில்
ஆரபாரத்துடனே அவளேயேமணம்புரிவேன்

† செம்மறிக்கடா.

ஈனமுறும்வங்கிஷத்தில் எழுந்தவளேயானாலும்
நானேயரண்மனையில் நாடியேவைத்திருப்பேன்

வைத்திருப்பேனெந்நாளும் வைப்பாகவேயவளைச்
சத்திமாய்ச்சொல்லுகிறேன் தையலையிங்கேயழையும்

என்றவுரைகேட்டவுடன் இடும்பரெனுஞ்சேவகர்கள்
அன்றுகண்டமாதிருக்கும் அருங்கானகத்தணுகிக்

கன்னியிருக்குமிடங் கண்டறிந்துவேந்தனுரை
உன்னியேசேவகரும் உரைக்கலுற்றாரம்மானை

கன்னியேபெண்மானே காணக்கிடைக்காத
அன்னமேமின்னே அழகேயழகுருவே

தேனேயமுதே தெவிட்டாதசெங்கரும்பே
பானேயழகிலங்கும் பைங்கிளியேமாங்குயிலே

சித்திரக்கன்னிகையே சேயிழையேஆயிழையே
மற்றுநிகரொவ்வாத மரகதமேவச்சிரமே

அரசர்திறையளக்கும் அந்தியோக்கியாநகரின்
வரிசைபுகழோங்குகின்ற மன்னனொலிவோரும்

உன்னையரண்மனைக்கு உடனேயழைத்துவரச்
சொன்னார்காண்பெண்ணரசே தோகையரேவாருமென்றார்

என்றமொழிகேட்டு இசைந்தமரிகருதம்மாள்
நின்றுதியானங்கள்செய்து நீதியசரீரியனை

என்னையொலிவோர் இசைந்தேயழைத்ததென்ன
மன்னியேநீர்துணையாய் வாருமென்றுமுன்நடந்தாள்

நடந்தாளரண்மனைக்கு நல்லகன்னிமாதவத்தாள்
அடர்ந்துநின்றசேவகரும் அரண்மனையிற்கொண்டுசென்றார்

கொண்டுசென்றுவிட்டதன்பின் கோதையொலிவோரின்முன்னே
அண்டியென்னைக்காவலர்க ளழைத்துவந்தவாறேது

காரியத்தைச்சொல்லிடுவீர் காவலனேயென்றுரைத்தாள்
சீரியல்பில்லாதவந்தச் செல்வனொலிவோரும்

பெண்ணேமடக்கிளியே பேதையரே பெண்ணரசே
கண்ணேயெனக்கினிய கமழ்பூவேதீங்கனியே

ஊரேதுபேரேது உன்றகப்பனுமேது
யாருடையகோத்திரம்நீ அறிந்திடநான்சொல்லுமென்றான்

இன்னவுரைகேட்டவுடன் ஏந்திழையாங்கன்னிசொல்வாள்
மன்னவனேயென்குலத்தை மாண்புறநீகேட்டதென்ன

கேட்டதுவும்நல்லதுதான் கேளுமெனதுகுலம்
நாட்டமுடன்சொல்லுகிறேன் நானுரைக்கக்கேளுமன்னு

அத்தியந்தநித்தியனுர் அருள்வேதகற்பனையின்
சத்தியவேதக்குலமாம் தார்பதியேயென்குலந்தான்

என்றமொழிகேட்டு இசைந்தொலிவோரேதுசொல்வான்
மன்றலருங்கன்னியின்மேல் மாமோகங்கொண்டெழும்பி

சருவேசுவரனுடைய சத்தியவேதத்திலுள்ள
திரமானகோத்திரமோ தேனேயூதர்மரபோ

ஆரணங்கேநீயெனக்கு அறியநீசொல்வையென்ருன்
சீரணியும்பூங்குழலாள் தேவபலங்கொண்டுசொல்வாள்

மண்ணுலகும்விண்ணுலகும் மற்றுஞ்சராசரமும்
எண்ணியொருநொடியில் இமைக்குமுன்னேபடைத்த

யேசுக்கிறிஸ்துவெனும் எம்பெருமான்என்தகப்பன்
பேசுமொழிநிசமாம் பேதமருவாத

அரியசருவேசுவரனுர் ஆகமத்தின்தீட்சைபெற்று
வரிசைபெறுமோட்ச வழிநடத்தலென்குலந்தான்

அண்டபிண்டமுங்கடந்த வகண்டசருவேசுவரனுர்
விண்டுரைசெய்தேவளரும் வேதமதிலேபெருமை

மரிகருதாளென்னுநல்ல மாண்புடையபேரெனக்கு
அரியதிருமெய்ஞ்ஞான அர்த்தமிதுகொண்டிருக்கும்

என்றுகன்னிசொல்லிடவே ஏங்கியொலிவோருமன்னன்
மன்றில்என்னைமிஞ்சியிவள் வாயேற்றங்கொள்ளுகிருள்

பரிகாசஞ்சொல்லுகிருள் பாருமிவளிடும்பை
அரியாசனத்திருக்கும் அண்ணலென்றுபாராமல்

கற்றவித்தைபேசுகிருள் கண்டீரோஎன்சபையில்
உற்றிருக்கும்பேர்பெரிய உண்மையுள்ளவித்தைகற்றுத்

தூண்டுசினப்புலிபோல் சொல்லரியகோபமுடன்
காண்டுமரிகருதைக் காதலுறுமொலிவோர்

பொறிகொண்டெழும்பிமிகப் பொங்கிவிரகமதால்
வெறிகொண்டெழும்பிமன்னன் மிகச்சீறிக்கண்சிவந்து

மாதிவளைப்பார்த்து மதிமயங்கியேதுரைப்பான்
காதலுறவென்னைநீ கல்யாணஞ்செய்துகொள்ள

வேணுமெனவொலிவோர் மெல்லியரைப்பார்த்துரைத்தான்
தோணுதபுல்லனவன் சொல்லுமுறையைக்கேட்டு

அரியதவக்கொழுந்தாள் அப்பொழுதங்கேதுரைப்பாள்
வரிசைநெறிமன்னவனே வாள்வேந்தேநீர்கேளும்

உன்னுடையராச்சியத்தின் உன்குடிகளானவர்நாம்
மன்னவனேநின்றனக்கு மக்களல்லோநாங்களெல்லாம்

ஆதாரமற்ற வகுதிபரதேசிகளை
மாதாவைத்தானிழந்த மதலைச்சிறுவர்களை

தந்தையில்லாதவரைத் தரித்திரமானவரை
மைந்தரெனக்காப்பாற்றி வளர்ப்பதல்லோவுன்பெருமை

கன்னிமடமங்கையர்கள் கற்புடமைகாப்பதுவும்
நன்னீதிச்செங்கோல் நடக்கையதுவாகுமல்லோ

புருஷன்தனையிழந்த பூவைமார்தங்களுக்கு
வருநிசிதம்போக்கி வளர்ப்பதுன்மாட்சியல்லோ

நீதியல்லோவுன்பெருமை நீள்புவியிலேவிளங்கும்
சோதிமணிமார்பாகேள் சொல்லுகிறேனின்னமொன்று

தன்மகளைப்பெற்ற தகப்பன்றுனைகொண்டு
துன்மோகமுற்றுத் துணைமணந்தான்செய்வதுண்டோ

வன்புகொண்டுதன்குடியை மன்னர்துரைமந்திரிகள்
தன்பலத்தாலேகொடிய தவறுகளைச்செய்குவரோ

வேலிபயிர்காத்தால் விளையும்பயிர்செழிக்கும்
வேலிபயிரழித்தால் விளைவதுண்டோவப்பயிர்தான்

அத்தன்மைபோலநான் அடியாளொருபயிர்தான்
உற்றிடுமுன்வேலிதனில் ஒதுங்கினேன்மன்னவனே

மன்னவனேநானுனக்கு மகளல்லோநின்மதியில்
அன்னையுநீதந்தையுநீ அடியாளைக்காப்பதுநீ

என்றுகன்னிசொல்லிடவே ஏந்தலொலிவோர்வெகுண்டு
கன்றிமனம்பொங்கிக் கடுங்கோபமுற்றுரைப்பான்

பாருமிவளென்னெதிரே பஞ்சைமொழிபேசுகிறுள்
ஆருமிவளழகுக் கம்புவியிலொப்புளதோ

பரமபதிநற்பொருளாம் பரஞ்சோதியாங்கிறீஸ்து
உரமிகுந்தவேதமதில் உயர்ஞானதீட்சைபெற்று

மோக்ஷவழிநடந்து முத்திபெறும்ஜாதியென்றும்
தாக்ஷியுடன்சொல்லுகிறுள் சபையில்நின்றுகூசாமல்

சொல்லுகிறுள்வெட்கமற்றுத் தோகையிவளைப்பாரும்
விள்ளுகிறுள்எப்பேச்சும் வெகுஞானங்கற்றவளாய்

ஐயோகிறீஸ்து அருள்வேதந்தன்னிலுற்று
மையார்குழல்போன மயக்கமென்னவென்றதற்பின்

சருவேசனென்றுரைப்போன் தன்னாகமநெறியைத்
திறமாகச்சொல்லுகிறாய் சித்திரமேநீகேளாய்

விண்ணுலகமோக்ஷமதை விட்டிறங்கித்தேவனென்று
மண்ணுலகிலுள்ள மனுவுருவைக்கொண்டதென்றும்

செருசலையில்வாழ்யூதர் சிலுவைமரமானதிலே
குருதிசொரிந்திடவே கொலைகள்செய்துகொன்றதென்றும்

கேட்டதுண்டுங்கள் கிளர்வேதப்புத்தகத்தில்
தீட்டினதைப்பார்த்ததுண்டு சீரறுமுன்தேவநிலை

அவனியெங்குமுந்தனைத்தான் ஆகடியம்பண்ணுதற்கு
இவனுடையவேதமதில் எப்படித்தானீபோனாய்

என்றாலிவோர்சொன்னதன்பின் இளங்கொடியுமேதுரைப்பாள்
வென்றியுறுமன்னவனே மேதினியையாள்வேந்தே

மண்ணாசைகொண்டவர்க்கும் பொன்னாசைகொண்டவர்க்கும்
பெண்ணாசைகொண்டவர்க்கும் பேருலகிலென்மறைதான்

பகைபழிபோற்காணும் பலவருத்தமேயுறுத்தும்
வெகுகடினமென்வேதம் விதிமுறையில்நல்லொழுக்கம்

ஆனாலதற்கோர் அடைமானஞ்சொல்லுகிறேன்
தேனார்மதுரகுணச் சீரரசேகேட்பீரால்

கண்ணோயுடையவர்க்கும் கட்டையுறுத்தும்விழிக்கும்
விண்ணொளியுந்தோன்றாது மிகவருத்தமுண்டாகும்

அன்னவைபோல்யாவருமே ஆத்துமத்தின்கண்ணொளியின்
உன்னதத்தைக்கண்டால் உயர்ஞானகண்ணினொளி

பால்போலுந்தேன்போலும் பகர்ந்தமொழிகொள்வரல்லோ
நூல்முறையாய்ப்புல்லர்கட்கு நூறுதரஞ்சொன்னாலும்

வெந்தபுண்ணைக்கோலாலே மேவிக்கிளறலொக்கும்
அந்தவிதம்போல்நீ அதிகசினங்கொள்ளாமல்

மெஞ்ஞானச்சோதியின்றன் வேதாந்தநல்லொளியை
அஞ்ஞானமேயகற்றி அன்புடனேகாணரசே

பராபரமதான பரமசருவேசுவரனார்
தராதலத்தைத்தான்சமைத்துத் தனதுவலத்தாலணைத்தும்

---

‡ வசு=பொன்.

சராசரமுமற்றச் சகலவுயிரும்படைத்து
நிராமயமாய்நின்ற நிரஞ்சனனுமிவ்வுலகில்

சீர்பூத்தபூதலத்தில் சீர்சிறப்பையுண்டாக்கி
ஏர்பூத்தஆதமுடன் ஏவாளிருவரைத்தான்

உண்டாக்கிநால்வாமும் உய்த்ததன்பின்தீயவளின்
மன்ருட்டினலே மகிமைதனைமறந்து

விலக்குமரத்தின்கனியை வெறியலகைசொற்கிணங்கி
மலக்கமுறத்தின்று மாபாதகராகி

நின்மலனுக்கோராத நிஷ்டூரராகியவர்
தன்கொடியசாபமதால் தருவனத்தைவிட்டேகி

வறுமையிரக்க மலிந்தவராய்த்திரிந்து
பெறும்பிதிர்களோரங்கியே பேருலகிலேயிருந்தார்

இவர்கள்பழம்பழிக்காய் இவர்கள்பிதிரெல்லவரும்
பவமேசுரந்து பாராபரத்துக்கேருமல்

தீநரகுக்கேகுவதைத் தேவசுதன்சித்தமதில்
மாவிரக்கம்பூண்டு மனுப்பிணைகொண்டேயுலகில்

கன்னிமுகிவில்லாத கற்புநிறைமாமரியின்
தன்னுதரத்துற்பவித்துச் சற்குருவாயிப்புவியில்

வந்துபிறந்து வளர்முப்பதாண்டிருந்து
இந்தரையின்மக்களுக்கு எல்லையில்லாப்புத்திசொல்லிக்

காட்சிப்புதுமை கனதவத்தினல்லொழுக்கம்
மாட்சியுறவுமிக்க வான்கதியைச்சேருதற்குச்

சூழ்ச்சிவழிகாட்டச் சுருதிமறையைவிதித்து
ஆட்சிபெறத்தான்நடந்து அவ்வழிகொண்டெல்லவரும்

மோட்சவழிகாண முடிவில்லாநேதியபின்
தாழ்ச்சியுடனிருந்து தற்காக்கமானிடரைத்

திருவளமேயுற்றெழுந்து தேவபிதாச்சித்தமதில்
ஒருவலமாய்த்துணிந்து ஒங்குஞ்செருசலையில்

சூதர்கையிற்சிக்கவவர் சொல்லரியவாதைசெய்து
தீதொன்றில்லாதவர்மேல் சிலுவைதனைச்சுமத்தி

முள்ளால்முடிபுனைந்து முனையுருவவேசிரசில்
கள்ளரிருபேர்நடுவே கபாலமலையிற்கொடுபோய்க்

காங்காலில்ஆணிதைத்துக் கர்த்தருடல்குலுங்க
மாங்குலுங்க வேகுழியில் வஞ்சயூதர்நாட்டிப்பின்

தாகமென்றுகேட்டவுடன் தரும்பிச்சசைதக்கலக்கி
வேகமுடனீயவதை விமலனுந்தானேகுடித்து

நீதப்பிதாவை நினைத்துருகிவேண்டல்செய்து
போதவிதர்செய்பிழையைப் பொறுமென்றேதானிரந்து

தன்னுவியைவிடுத்தார் சகலமனுவானவர்க்காய்ப்
பின்னுமொருமூன்ரும்நாள் பேருலகிலேயுயிர்த்து

நாற்பதுநாளிருந்து நண்புசெறியூதர்களுக்
கார்ப்பரிப்பாய்ப்புத்திசொல்லி அன்புடையதாய்விளங்கும்

தேவதிரவியத்தின் செய்யமுறைகாட்டி
மேவுமினிமேல்நாம் விளங்குநடுத்தீர்வையிலே

வருவோமெனவோதி மாட்சிமிகுமோட்சமதில்
குருபாரமென்தேவன் கோதறவேயேறினர்காண்

ஒன்னார்சிரந்துணிக்கும் ஒங்கலெனவேலேந்தும்
மன்னுஇதைநீ மறைத்திழிவுசொல்வதென்ன

இப்பரிசால்மாந்தருக்காய் எண்ணில்பலவாதையுற்று
ஒப்பில்ரத்தஞ்சிந்துகின்ற ஓதரியதேவனைத்தான்

இப்படிநீர்புத்திகொண் டிங்கிழிதகவாயெண்ணிச்
செப்பினீர்தூஷணங்கள் சிலுவையிற்செத்தானெனவே

### விருத்தம்.

ஆதியோடந்தமற்ருேன் ஆதனேடேவைசெய்த
தீதெனும்பவத்தினுலே திருவுருக்கொண்டவாறும்
மேதினிதனிலொன்னுரால் மிகுதுயரடைந்தவாறும்
பூதலத்திறந்துமீண்டும் பொற்புறஉயிர்த்தவாறும்

உயிர்த்தவருலகில்நாற்ப துறுபகலிருந்தவாறும்
நயப்புறச்சீஷருக்கு நன்முறைவிதித்தவாறும்
வியப்புறுநடுத்தீர்வைக்கு மேனின்றுவருமவ்வாறும்
செயிப்புறமன்னன்கேட்டுத் திரும்பவுஞ்சொல்லுவானே.

### அம்மானை.

மாதர்சிகாமணியே வல்லிக்கொடியிடையே
காதலுறுநாயகியே கண்மணியேகாஞ்சனமே

மண்ணுலகந்தோன்றிபின்நாள் மட்டாகவென்னுடைய
திண்ணமுள்ளதந்தையருஞ் செகத்திறந்தமுன்னோரும்

அந்தணரும்வேதியரும் அங்குருக்களானவரும்
முந்தியதிலிருந்த மூதுணர்ந்தோரானவரும்

பேர்பெரியசாஸ்திரரும் பிரபுக்களுந்தாம்வணங்கும்
நேர்மையுள்ளதேவர்களும் நீதிமுறைசாஸ்திரமும்

பதினெண்புராணமொடு பலகலையுமென்சமய
விதிமுறையும் பொய்யோ விழலோவிவர்களுக்கு

நரகசொர்க்கமுண்டோ நலமுண்டோதீங்கதுண்டோ
உரைவிண்டுசொல்லெனக்கு உண்மையறியாதவள்நீ

பரசமயந்தானே பயன்கொடுக்கும்மோக்ஷவழி
தெரிவையேநீயும் தெரியாமற்செப்புகிறாய்

என்னபுத்திபெண்மதியால் இப்படிநீயெண்ணுகிறாய்
உன்னுடையதேவன் உயர்ந்தவொருசிலுவை

தன்னிலிறந்தானவனைச் சாற்றுகிறாய்தேவனென்று
இன்னம்உனக்கு இயம்பநாவுண்டோவென

அப்பொழுதுகன்னி அவன்றனையேபார்த்துரைப்பாள்
இப்போதுனதுபுத்தி இன்னதெனத்தோற்றுதிங்கு

செப்புகிறேன்கேளுமன்னா திறமாகவுன்றனக்கு
ஒப்புவமையில்லாத ஓதரியநீதிபரன்

ஆதிமுடிவில்லான் அனைத்துயிர்க்குந்தாபரமாய்
நீதிநிறைஞானம் நிறைந்தசருவேசுவரனாய்

தானாயனாதியுமாய்ச் சரீரமில்லாதவனாய்
வானாதிமூவுலகும் வல்லமைகொண்டேந்தினனாய்

ஆக்குமழிக்கு மதைக்காக்குமுத்தொழிலும்
தேக்கியவீரமுள்ள சீர்சிறந்தமெய்க்கடவுள்

தன்னொழுக்கநீதி தனைமறுத்தபாதகரை
வன்னிக்கிரையாக்கும் வல்லமைசேர்மெய்க்கடவுள்

நன்னினைவாய்த்தன்னொழுக்கம் நன்கடைந்தநல்லவர்க்கு
சென்னிமுடிசூட்டிச் சீர்கதிசேர்க்குங்கடவுள்

அளவற்றநீதி அளவில்லாமெய்ஞ்ஞானம்
அளவற்றரக்ஷணியம் ஆனதிருக்கடவுள்

இவரேதானாக இருக்கும்பரப்பொருள்தான்
இவரேபுவிபடைக்கு முன்னிருந்தவேகபரன்

இவரேசகலநன்மை எல்லாம்நிறைந்தவராம்
இவரேயெங்கெங்கும் இசைபொருளினுள்ளுறைந்தோன்

இவரேசுயம்பரமாய் எங்கும்நிறைந்திருந்தோன்
இவரேதிரிபுவனம் எல்லாம்படைத்தளித்தோன்

இவரேசகலபொருள் எல்லாம்வகுத்தளித்தோன்
இவரேமனுக்குலத்தை ஈடேற்றவந்துதித்தோன்

இவரேமனுப்பவத்தால் இப்புவியில்வாதையுற்றோன்
இவரேதிருச்சிலுவை யினிலுயிரையேவிடுத்தோன்

இவரேமூன்றுநா ளேதமறவேயுயிர்த்தோன்
இவரேபிரளயத்தால் இவ்வுலகைத்தானழித்தோன்

இவரேபெருநெருப்பால் இகலைம்புரியெரித்தோன்
இவரேமோயீசனுக்கைந் திருகற்பனையளித்தோன்

இவரேபார்வோனிடத்தில் ஏற்றநவம்புரிந்தோன்
இவரேயிஸ்ருயேல்சிறை இடுக்கமதைநீக்கிவைத்தோன்

இவரேகடல்பிரித்து ஏற்றவழிகாட்டிநின்றோன்
இவரேதொடர்ந்தவரை யெழுமாழியில்மடித்தோன்

இவரேமன்னவமுதை இன்பமுடனேயளித்தோன்
இவரேகற்பாறையிலே எழுஞ்சலத்தையேகொடுத்தோன்

இவரேயிரவினிலே எரிநெருப்புத்தூணளித்தோன்
இவரேயினிமேற்றான் ஈறுந்தகாலமதில்

இவரேநெருப்பாலே இப்புவியைத்தானழிப்போன்
இவரேசகலரையும் இப்புவியிலேயெழுப்பி

இவரேயெழுந்தருளி எங்கும்நடுக்கேட்பவராம்
இவரேகணக்கெடுத்து இப்புவியிற்பாதகரை

இவரேயுடலுயிரோ டெரிநாகில்தள்ளுபவர்
இவரேதமக்குகந்த எண்ணரியநல்லவரை

இவரேபாகதியில் ஏற்றிமுடிதரிப்பார்
இவரேயெல்லாவுயிர்க்கும் என்றும்படியளப்போர்

இவரருளேயென்னுயிரும் இவரருளேயென்னுடலும்
இவரருளேயென்னினைவும் இவரருளேயென்மனமும்

இவரருளேயென்மதியும் இவரருளேயென்னிலையும்
இவரருளேயென்திடமும் இவரருளேயென்னூரமும்

இவரருளேயென்கிரியை இவரருளேயென்நடக்கை
இவரருளேகற்புநிலை இவரருளேயென்னுறுதி

தவறில்லாமன்னவனே சாற்றுமுறைகேளும்
கவனமுடனறிந்து காவலனாநீருமிப்போ

அரியபரம்பொருள்தான் அம்புவியில்மாந்தருக்கு
வரிசைசெறிமோக்ஷ வழிநடக்கநன்மைதின்மை

பாவபுண்ணியமறியப் பத்துமொழிக்கற்பனையை
நாவதினாலேயோதி நானடக்குந்தன்மையது

போதுவித்தவாசகத்தைப் புகல்வேனதையறிந்தால்
நீதிமுறைதப்பாது நெறிநிற்பாயென்றுரைத்தான்

## விருத்தம்

காசினிமாந்தர்பரகதியேறக் காரணமாகக்கண்ணியமாய்த்
தேசுறுவோனோர்பத்தெனுநெறியைச் செய்தளித்தவ்வழிநடந்தால்
பேசியதமதுராச்சியமதனில் பெரும்பலனடைவரென்றுரைத்துக்
காசிலாவேதக்கற்பனையதனைக் காட்டினர்கவினுறமன்னா.

## அம்மானை

சொன்னமொழிக்கப்போது தோன்றலொளிவோருரைப்பான்
கன்னல்மொழிக்கன்னிகையே கட்டுரைநீநான்கேட்க

எங்கள்சமயத்தொழுங்கு மெங்கள்மறைச்சாஸ்திரமும்
மங்கையேதப்பிதமோ வகுத்தறியவேணுமென்றான்

உற்றுக்கேள்மன்னவனே உம்பரிறையாங்கடவுள்
பத்துமொழிக்கற்பனையைப் பாங்குடனேசொல்லுகிறேன்

சர்வபொருளும்படைத்த தந்தைசர்வேஸ்வரனார்
உறுமனுஷர்புத்தியினால் உற்றறியத்தம்மையுந்தான்

முந்தினகற்பனையின் மூதுரையிலோதிவைத்தார்
புந்தியற்றமாந்தருக்குப் பூதலத்திலெஞ்ஞான்றும்

தம்மையல்லால்தேவனிந்தத் தாரணியிலில்லையென்று
செம்மையுடன்துதிக்கத் தேர்ந்தெழுதிவைத்தனர்காண்

சந்திரனைச்சூரியனைச் சார்ந்தபஞ்சபூதியத்தை
இந்தரையில்நாம்வணங்கா திருக்கவெழுதிவைத்தார்

உற்றிரண்டாங்கற்பனையை ஓர்ந்துதயவாய்க்கேளும்
நித்தியனார்நாமமதை நேர்ந்தாசரித்தொழுக

முற்றெழுதிவைத்தனர்காண் மூதிர்மூன்றாங்கற்பனையில்
கர்த்தர்திருநாட்பூசை கடமையுள்ளநாளதனை

ஆசரிக்கவேணுமென்று அம்புவியின்மாந்தருக்கு
நேசமுடன்வரைந்தார் நிறைநாலாங்கற்பனையில்

தந்தைதாயானவர்க்குத் தங்கள்தங்கள்மைந்தர்கள்தாம்
வந்தடையுஞ்சங்கைசெய்ய வகுத்தெழுதிவைத்தனர்காண்

அஞ்சாகுங்கற்பனையில் அறைந்ததனைக்கேளுமன்று
நெஞ்சாரவஞ்சகொலை நீள்புவியிற்செய்யாமல்

பெருத்தகிருபைக்கடலோன் பிரித்தெழுதிவைத்தனர்காண்
திருத்தாறுங்கற்பனையைச் செப்பவினிக்கேளரசே

மோகபவஞ்செய்யாமல் மூதிர்நினைவுகொள்ளாமல்
ஏகாதிகாரணனும் இசைந்தெழுதிவைத்தனர்காண்

ஏழாகுங்கற்பனையை எடுத்துரைக்கக்கேளுமன்று
பாழாங்களவாகப் பரபொருள்கைப்பற்றிடுதல்

அளவிலாத்துரோகமென வன்றெழுதிவைத்தனர்காண்
உளவெட்டாங்கற்பனையை உற்றுரைக்கக்கேளரசே

அழிவழக்குப்பொய்ச்சாட்சி ஆனவவதூறுரைக்கா
தொழுகுவதேநன்மையிதென் றற்றெழுதிவைத்தனர்காண்

ஒன்பதாங்கற்பனையை ஓதவினிக்கேளரசே
தன்தாரமல்லாமல் தவறாய்ப்பிறதாரமதை

அபேட்சைசெய்யவொண்ணாதென் றன்றெழுதிவைத்தனர்காண்
நிபட்சபத்தாங்கற்பனையை நீயுணர்ந்துகேளரசே

ஒருத்தர்பொருள்தனக்கும் உற்றாசைவையாமல்
விரித்தேதெளிந்தறிய விரைந்தெழுதிவைத்தனர்காண்

இப்பத்துக்கற்பனையை இரண்டாகுங்கற்பனையாய்
செப்பமுடனேயடக்கித் தேர்ந்தெழுதிவைத்தனர்காண்

எல்லாத்தையும்பார்க்க இறைவர்தனையாசரித்து
வல்லதவநேசமுற வரைந்தெழுதிவைத்தனர்காண்

தன்னைச்சினேகிப்பதுபோல் சார்ந்தமற்றியாவரையும்
உன்னிச்சினேகிக்க உவந்தெழுதிவைத்தனர்காண்

இந்தவிதிபோல இவ்வுலகிலேநடந்தால்
சந்ததமுமோட்சத்தில் சதாகாலமும்வாழ்ந்து

பந்திதனில்வீற்றிருந்து பங்கடைந்துபாக்கியராய்
வந்திப்பாரென்றமலன் வகுத்தெழுதிவைத்தனர்காண்

விருத்தம்.

அப்பொழுதொலிவோர்சொல்வான் அரிவையைச்சினந்துநோக்கி
இப்படிமனுவோர்மண்ணில் யாவர்தான்நடப்பார்சொல்வாய்
ஒப்பறுன்வேதந்தானென் றுலகத்தில்வந்துதோன்றி
தப்பறுமெமதுவேதச் சமயத்தைத்தள்ளலாமோ.

## மரிகருதாள் அஞ்ஞானத் தப்பறையைக் கண்டித்தல்.

அம்மானை.

இறைவனொலிவோரும் எண்ணியெண்ணிவர்மமுற்று
அறைவானிடிபோலே அன்னமின்னாளைப்பார்த்து

ஈரிரண்டுவேதமுடன் இருமூன்றுசாஸ்திரங்கள்
ஓரொருமூவாறு ஓங்குபுராணங்களுடன்

அறுபத்துநாலுகலைக் கியானமடார்தத்துவங்கள்
மறுவற்றசாஸ்திரங்கள் வகைவகையாய்க்கட்டிவைத்துப்

பூருவகாலந்துவக்கிப் பூதலத்திலேநடந்து
சீருறவேவாருதெங்கள் தேவர்களுங்கோபுரமும்

எந்தவிதம்வந்ததென இப்போதேசொல்லுமென்றான்
அந்தமொழிகேட்டு அரிவைசிரோமணியும்

சொல்லத்தொடுத்தாளே தொடுத்தசரம்போல
வெல்லத்தொடுத்தாளே வேந்தனொலிவோரின்முன்னே

எங்கள்வேதத்தொழுங்கை யானுமக்குச்சொல்லிவந்தேன்
உங்கள்வேதத்தொழுங்கை ஓதவும்நீர்கேட்டிலையோ

ஓதவும்நீகேளரசே ஒருநான்குவேதமுண்டு
தீதாறுசாஸ்திரமும் செய்பலபுராணமுண்டு

அறுபத்துநாலுகலை யானதுண்டுதத்துவங்கள்
பிறவுமுண்டாமத்தொகையைப் பேசவினிக்கேளரசே

சத்தியேதெய்வமென்றும் சதாசிவனேதெய்வமென்றும்
உற்றிசைத்துச்சொல்லுகின்ற உங்கள்மறைவேதமதால்

பராசத்தியென்பவளும் பாவிகள்போல்மோகமுற்று
நிராகரித்துற்பவமாய் நீதிவழுவாகவவள்

பிர்மவிஷ்ணுருத்திரனைப் பிள்ளையெனப்பெற்றதன்பின்
கர்மதிரிமூர்த்திகளைக் கண்டவர்மேலிச்சைவைத்து

மோகவெறிகொண்டுசத்தி மூவரையுந்தான்புணர்ந்த
ஏகசத்தியென்றெழுதி இருக்குதுகாணுன்வேதம்

கண்டகியென்னுமொரு காமக்குரோதமுள்ள
ஒண்டொடியாம்வேசி உறுகற்பழித்திடவே

திரிமூர்த்திமூவருந்தான் சென்றிழிவுசெய்தவளை
ஒருமூர்த்திவிட்டுமவள் ஒங்குமஞ்சமீதினிலே

வயிறுகழிந்ததென்றும் வல்லியதைச்சகித்து
பயமடைந்தேகண்டிகையைப் பகருநதியாய்ச்சமைத்து

மூவராம்மூர்த்திகளும் மூன்றுவகைக்கல்லுகளாய்ப்
பாவநதியானதிலே படிந்ததெனுமுன்வேதம்

அத்ரிமுனிபெண்டீர் அனுசூயையென்றொருத்தி
மெத்தவெகுகற்பினளாய் வீற்றிருக்கும்நாளையிலே

திருட்டுமும்மூர்த்திகளும் தெரிவையரைக்கற்பழிக்க
மருட்டுரிஷிவேஷமுற்று வந்தவளைப்பிச்சையென

வந்தவர்க்குப்பிச்சையிட வந்தவளைமூவரும்பார்த்
திந்தப்பிச்சைபிச்சையல்ல எதிரில்நிருவாணமதாய்

நின்றுபிச்சையேகொடுத்தால் நிலைத்தபிச்சையாகுமது
என்றுரைக்கக்கேட்டவளும் இனியில்லாக்கோபமுற்று

தீர்த்தமிறைத்தேசாபம் செய்துசிறுபாலகராய்
வேர்த்தழுங்கச்செய்தாளென்று மேலுலகத்தேவரெல்லாம்

இரந்தவளைமன்றாடி இடுஞ்சாபம்நீக்கியபின்
தெரிந்ததிரிமூர்த்திகளாய்த் திரிந்துழன்றாரென்றுசொல்லி

அஞ்ஞானமுள்ள அறிவிலங்கியேவிளங்கும்
விஞ்ஞானசாஸ்திரத்தில் விள்ம்புதுகாணுன்வேதம்

சிவன்தேவிபார்வதிமேல் தீவிரமாய்மோகமுற்றுக்
கவனமுடன்கூடிக் கலந்தானெனவறிந்து

ஐந்துதலைபிர்மாவை யன்றேயொருதலையைப்
பிய்ந்திடக்கிள்ளினதாய்ப் பேசுதுகாணுன்வேதம்

பிர்மாமகளாகும் பெண்ணும்சரஸ்வதியைத்
துர்மார்க்கனும்பிர்மா சொல்லுகின்றபெண்டீராய்

நாவதனில்வைத்ததென்று நகைத்துப்பழிக்கவிகம்
மேவநல்லதேவனென்று விள்ளுதுகாணுன்வேதம்

சதாசிவத்தைக்காணவென்று தவசிபற்பமாசுரனும்
சதாகாலந்தோத்திரிக்கும் தவரிஷிமுன்புசிவன்

வந்துநின்றுகேட்ட வரந்தருவேனென்றுரைக்க
அந்தரிஷிசொல்வானும் ஆர்சிரசையுங்கரத்தால்

தொட்டாலெரிந்துவிடச் சொல்லிவரந்தாருமென
இட்டமுடனேகொடுக்க இதைப்பரீட்சைசெய்யரிஷி

சிவனைத்தொடநினைக்கச் சிவனோடவேரிஷியும்
கவனமுடனெவருங் கண்டுமயக்கமுற

அவனைத்தொடர்ந்தோட ஐவேலிக்காயதனில்
சிவனொளித்துக்கொள்ளுவதைத்தெரிந்து விஷ்ணுமோகினியாய்

வந்துரிஷியைப்பசப்பி வாமமுறச்செய்தவன்கைத்
தந்திரத்தினால்ரிஷியும் தலைதொட்டெரிந்தழிய

ஒளித்தசிவனும் உபாயமுடனேகுதித்து
பிழைத்தனனென்றோதிப் பிதற்றுதுகாணுன்வேதம்

கலைமானுய்ப்பிர்மாவும் கருதுஞ்சரஸ்வதியும்
நிலைமானுய்வேஷமுற்று நின்றனுபோகங்கள்செய்து

துலையாப்பெரும்பவத்தைத் தோஷமுறச்செய்தவந்தப்
புலையார்தொழிலைப் புரிந்தவசுசியுள்ள

பாதகத்தால்பூசைபலி பாங்குறுதேர்நற்றிருநாள்
போதகற்றிவிட்டதென்று புகலுதுகாணுன்வேதம்

சிவன்பெண்டீர்வேணுமெனச் சேர்ந்தோர்மலையிடத்தில்
தவசுமிகச்செய்ததினால் சயிலமிவன்செய்தவத்தை

கண்டறிந்துபார்வதியைக் காதலுடனீந்ததென்றும்
பெண்டீரொன்றுபோதாமல் பேதைகங்கையைச்சிவன்றான்

கொண்டபெண்டீர்காணமல் கூறுஞ்சடாமுடியில்
கண்டறியாதேயொளித்துக் காத்ததென்றுஞ்செட்டியைப்போல்

வேடமெடுத்தேவளையல் விற்றுத்திரிந்தோர்வீட்டில்
நீடுவெகுபெண்கள்கற்பை நீசமுறவேகெடுக்கக்

கண்டறிந்துகேட்கவரன் காரிகைகளேழ்வரையும்
கொண்டுமணஞ்செய்தானென்றுங் கூடைகொண்டுமண்சுமந்து

அறுபத்துநாலுவிளை யாட்டுகள்தான்செய்ததென்று
மறுவுற்றுச்சொல்லுதுகாண் வகையில்லாவுன்வேதம்

சங்கரனும்மோகவெறி தானெடுத்துமெய்த்தவஞ்செய்
துங்கரிஷிமார்கள்முன்போய்ச் சொல்லரியசேஷ்டைசெய்ய

அந்தரிஷியானவர்கள் அகோரசினங்கொண்டெழுந்து
வந்தசிவன்லிங்கமற மாசாபமேகொடுக்க

அற்றுவிழும்லிங்கமதை அவனியோர்கொண்டாடி
உற்றதலைமேலும் உயர்கழுத்திலும்பூண்டு

பூசைநைவேத்யமிட்டுப் பூசிதமாகத்துதித்துத்
தேசமெங்குமேவழங்கித் திரியுதுகாணுன்வேதம்

தவருனவிஷ்ணுவுந்தான் தரையில்பலவேடமதாய்
அவதாரங்கொண்டதுபத் தானதைநீகேளரசே

பலிச்சக்கிரவர்த்தியென்று பராக்ரமுள்ளராக்ஷதனுல்
அல்லற்படத்தேவரெல்லாம் அவன்கீழ்ப்படிந்திருந்து

சிலகாலம்போனதின்பின் தெரிந்துவிஷ்ணுயோசனையால்
வலுமகாமேருவைத்தான் மண்ணோடேதான்பிடுங்கி

எடுத்துச்சமுத்திரத்துக் கேகிடும்போதேசுமையைத்
தடுக்கமாட்டாதிருந்து தத்தளித்துத்தேவரெல்லாம்

விஷ்ணுசகாயத்தால் விளங்குகின்றபாற்கடலில்
நட்டுமந்தரமென்ன நவில்மலையைமத்தாக்கி

ஆதியினிற்சேடனென்ற அழிபாம்பில்சுற்றியதில்
மோதிக்கடைந்தாரென்றும் முன்னீரிலேமலையும்

மிதந்ததென்றுதேவரெல்லாம் விசனப்பட்டாரென்றும்
அதமானகாலமென்றும் அம்முனிவர்வாடிடவே

அப்போதுவிஷ்ணுவுந்தான் ஆமைவடிவுகொண்டு
செப்புமந்தமந்தரத்தைத் தீர்த்தமதிலேமுழுகித்

தூக்கிநிறுத்தினதாய்ச் சொல்லிவெகுசித்திரமாய்
வாக்கில்வழங்கி வருகுதுகாணுன்வேதம்

பிர்மாவளப்பதால் பேணிநித்திரைபண்ணிவிட
கர்மமுள்ளவவனிடத்தே காணுதுன்றன்வேதமெல்லாம்

அப்புறத்தேபோக அலைந்துவரும்வழியில்
செப்புசோமுகாசுரனும் தீர்க்கமுள்ளராக்ஷதனும்

வேதமெல்லாந்தான்திருடி மேவுஞ்சமுத்திரத்தில்
தீதாயொளித்தானென்றுஞ் சிறுமீன்வடிவெடுத்து

கடற்சோமுகாசுரனைக் கண்டுபிடித்தேசெயித்து
உடன்வேதத்தைக்கொணர்ந்தே ஒங்குபிர்மாகையளித்து

இந்தடைவாகவிஷ்ணுவும் ஏற்றவவதாரமெடுத்
திந்தரையிலேதிரிந்தா ரென்குதுகாணுன்வேதம்

இரணியராக்ஷதனை இகல்புரிந்துகொல்வதற்கு
தரணிதனில்விஷ்ணுவென்போன் தன்னுருவைமாற்றியொரு

பன்றிவடிவெடுத்துப் பாய்ந்தானென்றும்ராக்ஷதனை
அன்றிரக்கமர்யென்றும் அறையுதுகாணுன்வேதம்

இரணியனைக்கொன்றபழிக் கிளையகசிபனெனும்
முரணுடையராக்ஷதனும் முதிர்ந்தவிஷ்ணுவைத்தேடிப்

பார்க்குமிடத்தில் பகர்விஷ்ணுதானொளித்தான்
ஆர்க்குந்தெரியாமல் அவனொளித்தவேளையிலே

வென்றிசொல்லிராக்ஷதரும் மேவியேதேவர்களை
ஒன்றுபடத்தாமே ஒடுக்கிவருங்காலமதில்

கசிபனெனுமரக்கன் காதலுடன்விஷ்ணுவின்மேல்
உசிதபத்திவைத்தானென்று உண்மையறிந்தேயரக்கன்

பிரகலாதனனெனவே பெயருற்றபிள்ளையைத்தான்
திரமிகுத்துக்கொன்றுணவே செய்யநினைந்தானெனவும்

அவ்வேளையானதிலே ஆனவிஷ்ணுசிங்கமதாய்
ஒவ்வாவடிவதுகொண் டோங்கியேராக்ஷதனைக்

கொன்றானென்றுமிவ்விதமாய்க் கூவிக்குழறியிந்த
மன்றினிலின்னமின்னம் வழங்குதுகாணுன்வேதம்

பலியென்னுமிராக்ஷதன்முன் பகர்தேவர்யாவரையும்
வலிமையினாற்கீழ்ப்படுத்தி வைத்திருக்கவிஷ்ணுவுந்தான்

அந்தணனைப்போல்வடிவாய் அணுகிரிஷிதன்னருகில்
வந்துவெகுவாய்ப்புகழ்ந்து வலிமையுள்ளராக்ஷதனை

உபதானதானமதாய் ஒருமூன்றடிநிலந்தான்
சுபதானமாயீயச் சொல்லிவெகுவாயிரந்து

அளந்தெடுத்தவோரடியால் அம்புவியும்விண்ணுலகும்
இளந்தீரடியாக்கி இன்னமொருவடிக்காய்ச்

சேரும்பலியுடைய சிரத்தைவிஷ்ணுமூன்றடியால்
யாருமறியாப்பா தலத்திருத்தினனென்று

பாருலகமீதில் பல்லோருங்கண்டறிய
சீராய்ப்புராணமதில் செப்புதுகாணுன்வேதம்

சமதக்கினியென்பவர்க்கும் தழுவுமிரேணுகைக்கும்
தமபுத்ரனனவிஷ்ணு சால்பரசிராமனென

வடிவெடுத்தானென்றும் வளர்சமதக்கினியென்போன்
விடுபசுவாய்ப்பரசுராமன் விழைந்தோடிப்போனதென்றும்

அப்பசுவைவிஷ்ணுவும் ஆம்பரசிராமனுந்தான்
வெப்பமுடனேவெகுண்டு வீரபராக்கிரமமுடன்

அரிச்சுரனேடியுத்த மாடியவனேச்செயித்துத்
திருப்பசுவையோட்டிவந்து சேருசமதக்கினிகை

ஒப்புவித்தானென்று ஒழுங்குமுறையில்லாத
தப்பறைகளேவெகுவாய்ச் சாற்றுதுகாணுன்வேதம்

தெசாதனமன்னனுக்குந் தேவிகௌசலேக்கும்
நிசரூபனுகவிஷ்ணு நிலேராமனுய்ப்பிறந்து

சீதையென்னும்பேர்படைத்த சிறுமிதனைப்புணர்ந்து
மாதைமகிழ்வுடனே வைத்துச்சுகத்துடனே

அயோத்திநகர்வரும்போ தரும்பரசுராமனென்போன்
உயித்தங்கள்செய்ததென்றும் உறுராமன்தேவியென்னும்

மாதவளேராவணனும் மாமோகமுற்றுனென்றும்
சீதையைராவணனுஞ் சென்றெடுத்துப்போனுனென்றும்

குரங்கின்சகாயமதால் கூறுகின்றசீதையைத்தான்
இருக்குமிடங்கண்டானென்றும் இணையில்லாவானரத்தைக்

கூட்டியோராமனுந்தான் கூடிலங்கைமாநகரப்
பூட்டழிக்கப்போனுனென்றும் புகலுமனுமானும்

உளவுசொல்லிராமனுக்கு யுத்தவலிமையினுல்
அளவற்றவானரத்தால் ஆனவலிராக்ஷதரைச்

சங்கரித்துச்சீதையெனுந் தையல்தனைமீட்டதென்றும்
நிந்தனைகளாகவுந்தான் நிகழ்த்துதுகாணுன்வேதம்

பலபத்ரராமனென்று பாரிலுருவாகவிஷ்ணு
நிலேயற்றரோகிணியாம் நீலிவயிற்றுதித்து

அலங்கோலஞ்செய்துநின்ற அகந்தையுள்ளகிருஷ்ணனுக்குத்
துலங்குகின்றசோதரனுய்த் தோன்றிப்பலபத்ரவிஷ்ணு

கலப்பையைத்தோளில்வைத்துக் கதித்தவ்விராக்ஷதனைப்
பெலத்தயுத்தஞ்செய்தானென்று பேசுதுகாணுன்வேதம்

திரிபுரத்திலேமிகுந்த செகராட்சசியொருத்தி
செறியும்பதிவிரதை செழுங்கற்பழிக்கவிஷ்ணு

அனேகஉபாயங்கள்செய்தும் அகப்படாதேயிருந்தாள்
சினேகமுற்றுமோகவெறி தீர்க்கஅவளைக்கெடுக்க

அரசமரமாகநின்று அவள்கற்பழித்தானென்றும்
தரையதனிலின்னமுந்தான் சாலவரசும்வேம்பும்

ஒன்றுகவைத்ததற்கு உபயமுகூர்த்தமென்று
மண்டலப்பூந்தோட்டமதில் வழங்குதுகாணுன்வேதம்

கற்கியவதாரமுந்தான் கருதுவிஷ்ணுவானவனும்
உற்றவினிமேலொருநாள் உலகிலின்னஞ்செய்வனென்றும்

அந்தவவதாரமதில் அனேகயுத்தமுமழிவும்
வந்திடுமென்றோதி வருகுதுகாணுன்வேதம்

தேவேந்திரன்புரிந்த செயலிதனைக்கேளரசே
மேவுங்கவுதமுனி மெல்லியகலிகையைக்

கற்பழிக்கச்சேவலைப்போல் காணவொருவேஷமுற்று
பற்பினையாய்வந்துநடுச் சாமத்திற்சேவலைப்போல

கூவரிஷியித்தரையிற் கோழியென்றுதான்விழித்து
சீவநதியிற்குளிக்கத் தெரிந்துரிஷிபோனதன்பின்

கவுதமுனிபெண்டீரைக் கற்பழித்தபின்புரிஷி
துவிதநதிதூங்குதென்று துடர்ந்தோடிவீட்டில்வர

இருவரையுங்கண்டுரிஷி இட்டான்கொடுஞ்சாபம்
அருமைமிகுந்தவசி அருள்சாபமென்னவெனில்

பெண்டீரைக்கல்லாக்கிப் பிறர்பெண்டீர்க்கிச்சைவைத்த
வண்டன்தேவேந்திரனின் மானமற்றுவீழ்ந்திடவும்

ஒருயோனிக்கிச்சைவைத்த உன்சடலமேமுழுதும்
பெரும்யோனியாய்விளங்கப் பேசிவிட்டான்சாபமென்று

விரிவாய்த்தெளிவாக விலாசமதாய்த்தேர்ந்தினிதாய்
ஒருவாய்ப்பட்டாற்போல் ஓதுதுகாணுன்வேதம்

விக்கினேசுவரன்கதையை விள்ளுகிறேன்கேளரசே
மிக்கபுகழோங்கும் வேந்தர்சிரோமணியே

பார்வதிஊத்தைதனிற் பாங்காயுருவெடுத்து
நேர்விக்கினேசுரன்றான் நின்றுபிறந்தானெனவே

சிவன்தேவிபார்வதியும் தேடித்தன்வாசலுக்கு
உவந்தபெருங்காவலதாய் உற்றவனைவைத்ததென்றும்

சிவன்தனையனுங்குமரன் சிறியவன்தலையைத்
தவழ்ந்துவிழவேவலுவாய்ச் சங்கரித்தானென்றுமதைச்

சாம்பசிவனறிந்து சலித்தங்கலாய்த்தவனைத்
தாம்பின்னெழுப்பவெண்ணித் தலைவடக்கேவைத்தமிர்கம்

என்னவென்றுதேடிடும்போ தியானையென்றுதானுணர்ந்து
அன்னதையேகொண்டுவந்து யானைமுகமானதுவை

வெட்டிமுண்டமாய்க்கிடக்கும் விக்கினேசுரனுடலில்
ஒட்டவுயிர்த்ததென்றும் ஓங்குவிக்கினேசுரனை

அரவணிந்தமூர்த்தியென அறையுமரனுனவனும்
தரைதனிலுந்தனக்குத் தையலொன்றுவேணுமென்றால்

எப்படிக்கொத்தபெண்தான் ஏற்குமுனக்கென்றுரைக்க
அப்பொழுதுசொல்வான் அரியவிக்கினேசுரன்றான்

தாயைப்போலேயழகாய்ச் சமானமுள்ளபெண்ணெனக்கு
நேயமுடன்வேண்டுமென்றான் நினைத்தபடிபெண்ணுனக்கே

கிடைக்குமட்டுந்தேடெனவே கிணறுகுளமேரிகளில்
நடக்கும்வழிவீதிகளில் நாட்டமுடன்பார்த்திடவே

ஆற்றங்கரைசாலை ஆனவழிநடப்பில்
காத்திருந்துதேடிக் கலியாணஞ்செய்யெனவே

வைத்தனரென்றன்றுமுதல் வணங்கிவிக்கினேசுரனை
இத்தரையிற்கண்டுதுதித் தேவழங்குதுன்வேதம்

அத்தொகையிற்றேவர் அநியாயமானதெல்லாம்
முற்றுமுரைக்க முடியாததிற்சிலதை

உற்றுரைக்கக்கேளுமின்னம் உன்தேவரின்னிலையைப்
பற்றுமுனதுசிவன் பண்ணுமநியாயமதை

அரவைக்கழுத்தில் அணிந்துமிகுதீதாகப்
பரவைக்குத்தூது பகர்ந்ததெனுமுன்வேதம்

அபாயமுடனேபல் லரிவையர்கள்தங்களுக்கு
உபாயமதுசொல்லி உரைத்ததுகாணுன்வேதம்

புரவியெனநரியைப் போய்ப்பிடித்துமானிடரை
உருவழிக்கத்தந்திரங்கள் ஓதினகாணுன்வேதம்

பூவுலகிலுள்ளவர்க்குப் புத்திமயக்கமுற்றுப்
பாவையர்மேலாசைவைக்கப் பயிற்றினர்காணுன்தேவர்

உண்ணுமுலையாளை ஒருத்தியிடமாகவைத்து
வண்ணாப்பெண்மீது மயங்கினர்காணுன்தேவர்

கூளியொருபெண்வடிவு கொண்டுசபையில்வந்து
காளியுடனாடிக் கலந்தனர்காணுன்தேவர்

வெண்ணீறணிந்து வெறுங்கபாலம்பிடித்து
எண்ணுமற்பிச்சை யெடுத்தனர்காணுன்தேவர்

அடலைத்தரித்து அமர்ந்ததலைத்தான்விரித்து
சுடலைதனிலாடிச் சுழன்றனர்காணுன்தேவர்

ஒருபாதிமாலும் உமையவளோர்பாதியுமாய்
இருபாதியாக இருந்தனர்காணுன்தேவர்

சடைமுடியிற்கங்கை தனையுமணிந்துவெள்ளை
இடபந்தனிலேறி இழிந்தனர்காணுன்தேவர்

பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிகள்பட்டு
வெட்டிவிறகுதனை விற்றனர்காணுன்தேவர்

மாணிக்கம்விற்று வளையல்சுமந்துவிற்று
மீனுக்குப்பாகற்காய் விற்றனர்காணுன்தேவர்

திருக்கல்யாணங்கள்செய்து தேவடியாளேவல்செய்து
எருக்கமலர்எலும்பை இட்டனர்காணுன்தேவர்

பல்லக்கிலேறிவந்து பள்ளியறைபுகுந்து
சொல்லுக்கடங்காத துரோகமுற்றுருன்தேவர்

இரணியனைக்கொல்ல இசைந்தவொருதூண்மீதில்
நரசிங்கவேஷமதாய் நலிந்தனர்காணுன்தேவர்

ஆமைமீன்பன்றி அதின்வடிவுதானெடுத்துப்
பூமிதனிலுழன்று புரண்டனர்காணுன்தேவர்

மோகினியென்றேபாரில் மூபன்றுவடிவெடுத்து
மேகநிறம்போலே விளங்கினர்காணுன்தேவர்

மாடுகன்றுக்காக மலையைக்குடைபிடித்துத்
தேடிவெண்ணெயானதைத்தான் திருடினர்காணுன்தேவர்

உரலிலேகட்டுண் டடலிலடிகள்பட்டுத்
தெருவீதியோர்நகைக்கத் திரிந்தனர்காணுன்தேவர்

சங்குஒருகரமும் சக்கரத்தைஒர்கரமும்
அங்கமுறவேந்தி அலைந்தனர்காணுன்தேவர்

களவுடனேபொய்கள் கபடமிகச்செய்வதற்கு
உளவுமிகச்சொல்லி உவப்பவர்காணுன்தேவர்

தப்பறைப்பொய்ச்சாட்சி தாணிமனுவோர்படிக்க
ஒப்புடனேநின்றவர்க்கு உதவுவர்காணுன்தேவர்

ஊராருடமைதனை உற்றுசைவைப்பதெல்லாம்
நேரானபுத்தியென்று நினைத்தனர்காணுன்தேவர்

மனுஷரைத்தேவனென்று வையகத்திலேதுதிக்க
அனுசரிக்கப்புத்திசொல்லி அமைத்தனர்காணுன்தேவர்

என்றுமரிகருதாள் இத்தொகையைச்சொல்லிவர
மன்றல்செறிதிண்புயத்தான் மன்னெலிவோர்கோபமுற்றுச்

சொல்லுவானப்போது துடித்திவளைத்தான்பார்த்துக்
கல்லாதகல்வியெல்லாங் கற்றெங்கேகண்டறிந்தாய்

வில்லாலோரம்பெய்து மேனுருகிப்பட்டதல்ல
சொல்லாலேஅம்பாகத் துளைத்தாயோவென்மனத்தை

ஆனாலும்பெண்ணே அறிந்தின்னங்கேளுமென்று
மானார்நினைக்கரிய வஞ்சியரேயெங்தேவர்

நானாவிதத்தீமை நானிலத்திற்செய்தாரென்று
தானாகப்பேசுகிறாய் சற்பனைகள் தேவரைநீ

சொல்லுகிறாய்தேவருக்குத் தோன்றியகூறெல்லவர்க்கும்
எல்லையில்லாப்பூவுலகி லெங்கும்நடப்பதுதான்

பெண்ணாசையற்றவனார் பேறுலகப்பற்றுதலால்
மண்ணாசையற்றவனார் வையகத்திலேவழங்கும்

பொன்னாசையற்றவனார் புறபரஸ்திரீகமனத்
தன்னாசையற்றவனார் சாரூபமோக்ஷமதைக்

கண்டவனார்தீநரகைக் கண்டுபயந்தவ்வழியைக்
கொண்டவனார்வீணாய்க் கொலைவருத்திக்கொள்ளுகிறாய்

தத்துவச்சொரூபமதாய்த் தான்வணங்குமீசரனை
உற்றறிந்துகாண்பதற்கு உன்னாலியன்றிடுமோ

கண்டாலும்நல்வழியைக் காசினியின்மக்களெல்லாம்
கொண்டியற்றவல்லவரோ கூடாதகாரியந்தான்

ஆனதினாற்பெண்ணரசே அம்புவியிலுள்ளளவும்
மானமதையெண்ணி மதிப்புள்ளகாட்சிபெற்றுச்

சுகசெல்வத்தோடிருந்து சுகித்துடலைப்பூஷணித்துச்
செகமகிழக்கீர்த்திகொண்டு தேனுலகில்வாழ்தல்முறை

செத்தபின்புகண்டவனார் செல்வசுகபோகமதை
உற்றறிந்துபாராமல் ஓதுகிறாய்வேதவிதி

என்றுமன்னன்சொல்லிடவே ஏந்திழையங்கேதுரைப்பாள்
மன்றலமர்திண்புயனும் மன்னவனேகேட்டருளும்

தத்துவசொரூபமென்ற தார்பதியேயுன்மனத்தில்
சற்றுமதியில்லாமல் சாற்றுகிறீர்பீற்றலதாய்

தொண்ணூற்றாறென்றுரைக்குந் தோற்றமுங்கள்தத்துவத்தில்
கண்ணுற்றுச்சோதி கலந்திருக்குமீசரனைச்

சொல்லவினிக்கேளரசே துலங்குமுங்கள்தத்துவத்தில்
எல்லாமறிந்துணர்வீர் இனியில்லாஈசுரனைக்

கண்டறிவீர்மெய்ஞ்ஞானக் கர்த்தனசரீரியனைக்
கொண்டறிவீரென்றுரைக்கக் கொற்றவனுந்தத்துவத்தை

விண்டுநீசொல்லெனவே மெல்லியரைத்தான்கேட்க
பண்டுரகம்போலப் பகரலுற்ருள்மாதவத்தாள்

தொண்ணூற்றுறென்றிணங்கிச் சொல்லுகிறேன்தத்துவங்கள்
மண்ணுலுருவெடுத்த மனுஷருடலானதுதான்

அளவுதொண்ணூற்றுறுவிரல் அணிநீளமெண்சாணும்
உளபருமம்நாற்சாணு முள்ளமயிரானதுவும்

மூன்றுஅரைகோடி முதிர்நாடிபின்னரம்பு
தோன்றுமெண்பதாயிரமும் துடித்தகுடலானதுவும்

முப்பத்திரண்டுமுழும் முன்னுபன்ருறுசந்து
செப்புகின்றபேரெலும்பு திறமானவெண்பதுடன்

எட்டுப்பலமீரல் ஈரிரண்டுநாழிரத்தம்
முட்டுமாங்ஷம்பலந்தான் முன்னூற்றிருபதுடன்

உழக்குபித்தம்ஆழாக்கு உள்ளவலுசேத்துமமும்
முழக்குகின்றதித்தனேயும் முற்றுடலிலேசெழித்து

ஒன்பதுவாசலுடன் உள்ளபொறிகள்பத்தும்
தென்புலன்பத்துச் செறியாதாரமாறு

மண்டலமூன்று வளர்நாடிபத்துடனே
விண்டகலும்வாய்வுபத்து மேவிநின்றதாறேழும்

விகாரமெட்டுக் கோசமைந்து விரிவாங்குணமூன்று
வகாரவவஸ்தைஐந்து மலிரணம்நான்குடனே

மலமூன்றுடன்நோய் வால்மூன்றுதத்துவங்கள்
நிலையில்லாதிந்தவுடல் நிமிஷத்தழியுமென்றும்

கணக்கறியத்தத்துவங்கள் கட்டினதைவேதமென்றும்
இணக்கமுள்ளசாஸ்த்ரமென்றும் இதில்தேவர்வாதமென்றும்

தத்துவக்கியானமென்றும் தண்டுறபிரமவிஷ்ணு
ருத்திரமகேசுரனும் உலவுஞ்சதாசிவனும்

நிரைத்தசொரூபமென்று நிலைத்தபஞ்சாட்சரமாய்
உரைத்தஎழுத்துவித்தாய் உகாரத்தில்வேரோடி

அவ்வெழுத்திலேமுளைத்து ஐந்துகப்பாயவ்வெழுத்து
வவ்வாகப்பூத்ததென்று வான்புவனம்பன்னுலும்

காய்த்ததென்றுமிவ்விதமே கழறிமனுவோரை
ஏய்த்திருகண்தான்குருடாய் இருப்பதுவுங்கண்டுணராய்

என்னென்றுசொல்வேனுன் ஏந்தல்சிகாமணியே
அன்னவையுள்நாதன் அமருவதையார்அறிவார்

தோலுமெலும்புந் தொடுத்தசடந்தனிலே
ஞாலமதிற்ருனடங்கா நாதனிருப்பாரோ

நரம்பீரல்பிச்சுகுடல் நாடுசடலந்தனிலே
வரம்பில்லாநீதிநிறை வஸ்துமிருப்பதுவோ

நீர்நெருப்புக்காற்று நிறைந்தபஞ்சபூதியத்தைச்
சீர்சிறநதவிண்ஞான தேவனெனவுந்தகுமோ

ஆதியந்தமில்லாத அனுதிகர்த்தனுங்கடவுள்
நீதிநிறைஞான நிறைந்ததனிமுதலாய்

நின்றுசருவேசுரனுர் நெறிமுறைகளான வெல்லாம்
ஒன்றுபடச்சொன்னதைநீர் உற்றறிந்தீர்முன்தானே

நன்றுபடக்கேளுமின்னம் நாதாந்தப்பேரொளியை
இன்றுரைக்கக்கேளினிதாய் ஏந்தல்சிரோமணியே

ஆறுலட்சணமுடையோன் அளவற்றநீதிதயை
கூறுபாடானவெல்லாங் கொண்டதிருமெய்க்கடவுள்

அளவில்லாநற்கிருபை ஆதியந்தமில்லாதோன்
அளவில்லாவல்லமைசேர் அண்ணல்சருவேசுரனுர்

அளவில்லாநன்மைநிறை ஆதியிற்ருனுனபிரான்
அளவில்லாநல்லிரக்க மானதயைக்கடவுள்

இப்படிக்கொத்த இணையில்லாமெய்ப்பரத்தை
எப்படித்தானென்னுவால் ஏற்றியுமக்குரைப்பேன்

சாகரமுமற்றுஞ் சராசரமுமன்னுயிரும்
லோகமெல்லாவுயிரும் ஓர்நொடியிலேயியற்றிப்

படைத்தோன்றனையறிந்து பாரில்வணங்காதோர்
சடத்துடனேதீநரகைச் சார்வார்கள்மன்னவனே

இந்தடைவாய்ப்பைந்தொடியும் எடுத்துரைக்கக்கேட்டுமன்னன்
சிந்தைகலங்கித் திடுக்கிட்டிருவிழியும்

பொறிபறக்கக்கண்சிவந்து பொங்கிவெகுநாணமதாய்
வெறிகொண்டெழுந்து வெடுவெடென்றுமெய்நடுங்கி

ஆர்த்துமுழங்கி அமர்புலிபோலேசீறி
வேர்த்துநறநறெனவெண்பற்கடித்துரைப்பான்

என்சமுகத்தேயிருக்கும் என்னருமையூகிகளே
அன்புள்ளவித்தைகற்று ஆர்ப்பரிப்பாய்ப்பேசுகின்ருள்

தர்க்கந்தனக்கெதிராய்த் தானின்றுசொல்பவர்கள்
வர்க்கமெனத்தப்பாமல் வந்துபடித்தவள்போல்

பேசுகிருளையையோ பேதமறியாதிவளை
நேசித்தேன்வீணுச்சே நீலிகொடுஞ்சூரியிவள்

அரகராவுந்தன் அபயமபயமென்று
இருதாடையிலடித்து எனதுகுலத்தேவர்களே

பொறுத்தருளுங்குற்றமென்று பூவேந்தனுமொலிவோர்
வெறுத்தான்மரிகருதை வெஞ்சினத்தையுள்ளொளித்து

### விருத்தம்.

கொற்றவனெலிவோர் மிகவகம்வெகுண்டு
கொடும்வினை நிகழ்ந்திழிவாகப்
பற்றுதலுடனே அகத்தினிலெதிர்த்துப்
பகரொணுத்தர்க்கமேபுரிந்து
வெற்றிகொண்டவள் போல் நிற்கிருளெதிரே
வெஞ்சிறைவிலங்கிலிட்டிவளைச்
சுற்றுமேகாவல் வைத்திவள்மடியாச்
சோர்ந்திடச்செய்யுமென்றுரைத்தான்.

## மரிகருதாளை மறியலில்வைத்தலும் மனவுறுதியும்.

### அம்மானை.

மகுடமுடிதரித்த மன்னனெலிவோரும்
வெகுகடினமான விசாரம்படைந்தவனுய்

வேற்றுமனங்கொண்டு வெந்துமனம்நொந்துருகிச்
சீற்றமுகங்கொண்டு சீறிச்சினப்புலிபோல்

ஆற்றமுடியாத அகங்காரங்கொண்டுமன்னன்
மாற்றலரைத்தானழைத்து வஞ்சியிவளைக்கொடுபோய்

இருட்சிறைச்சாலைதனில் இட்டுவிலங்கைப்பூட்டி
வெருட்டிவதைசெய்து விடாமலிவளைச்சூழ்ந்து

காவல்வைத்துக்காத்திருங்கள் கன்னிமனமடிந்து
தாவியவென்சொற்பேச்சைத் தான்கேட்பாளென்றுசொல்லிக்

கட்டளைதானிட்டுக் கவினுரரண்மனைக்குத்
திட்டமுடனேயெழுந்து செல்லலுற்ருன்மன்னவனும்

மன்னனரண்மனைக்கு வாகுபெறச்சென்றதற்பின்
அன்னமின்னுரென்னும் அணிசேர்மரிகருதைப்

புல்லரெனுஞ்சேவகர்தாம் பொங்கியேபோய்நெருங்கி
மெல்லியரேஉந்தனையும் வேந்தனெலிவோரும்

சிறையிலடைத்திருகால் சிறைவிலங்கைப்பூட்டுமென்றே
அறைந்தார்மடக்கொடியே அஞ்சுகமேவாருமென்னச்

சொன்னமொழிகேட்டுத் தோகையருஞ்சேவகரோ
டுன்னுஞ்சிறைச்சாலைக் கோகையுடன்போனதற்பின்

பாரவிலங்கையிரு பாதமதிலேபூட்டி
நேருஞ்சிறையிலிட்டு நீங்காமல்சூழ்ந்திவளைக்

காத்திருந்தார்சேவகருங் கன்னிமரிகருதாள்
தோத்திரங்கள்செய்யவெண்ணிச் சோதியசரீரிதனை

வேண்டல்செய்துகொண்டிருந்த மெய்ம்முறையில்நல்லொழுங்கைத்
தூண்டல்செய்தன்பாகச் சொல்லுகிறேனம்மானை

சகலபொருளும்படைத்த சருவவியாபகனே
புகலரியநின்தயைக்கே புகழ்ச்சிபுகழ்ச்சியையா

அகல்புவியுமம்பரமும் அண்டபிண்டமுங்கடந்து
பகலெரியுஞ்சூரியன்போற் பரந்தென்றும்நின்றோனே

ஞானசொரூபப்பொருளே நன்மைமட்டில்லாக்கடலே
ஈனமிகும்நானடியாளெந்தனுக்குன்றன்பெலந்தான்

தானுட்பரமாய்த் தனிச்சுயமாய்நின்றோனே
வானவர்களுக்கிறையே மனத்துறுதிதந்தருளும்

தருவீரெனக்குநல்ல தயிரியத்தோடேயிருக்கக்
கருவிகள்கொண்டென்னுடலைக் கண்டதுண்டஞ்செய்தாலும்

உரமுடையநெஞ்சகத்தான் ஓங்கலொலிவோர்கையால்
பெரிதானதுன்பமுற்றுப் பேருலகிற்பாடுபட

வரந்தருவீரெந்தனுக்கு வஞ்சனைவிவோரைவெல்ல
உரந்தருவீரெந்தனுக்கு உறுதிதரும்பாடுபடப்

பரந்தவுலகம்பேயும் பாவமுறுஞ்சீயுடலும்
புரிந்துவரும்பாசமதைப் போக்கிவெல்லவெந்தனுக்குப்

பத்திவிசுவாசமொடு பகருநம்பிக்கையுடன்
உற்றிந்தமூன்றுமென துள்ளமதிலேபதிப்பீர்

என்கற்பையுந்தனுக்கே ஏற்றகாணிக்கைவைத்தேன்
அன்புடனென்கற்பினுக் கவமானம்வாராமல்

காத்திரங்கியாளுங் கருணைக்கடலேயுனது
நேத்திரக்கடாக்ஷிலே நீர்கொண்டெனைப்பாரும்

இத்ததியுன்சித்தமல்லால் என்னாலொன்றாகாது
சத்தியநீதிக்கிறையே சருவாதிகாரணனே

என்று மரிகருதாள் ஏகபரனைப்பார்த்து
நின்றுதியானமுற்றாள் நீண்டசிறைச்சாலைதனில்

அன்றிரவுபோனதின்பின் அண்ணலொலிவோரும்
கன்றிவஞ்சநெஞ்சகத்தான் கன்னியரைத்தன்னிடத்தில்

அழைத்துவரச்சேவகரை அன்றழைத்துவிட்டதன்பின்
செழித்ததவக்கன்னியரைச் சேவகரும்போய்ச்சிறையை

விட்டவர்கள்கூட்டிவந்து மின்னார்சிரோமணியைத்
துட்டனொலிவோரின் தோன்றநிறுத்திவிட்டார்

வந்தகன்னிமாதவத்தை மன்னனொலிவோர்பார்த்து
உந்தன்சருவேசுரனை உன்னுமல்நீமறந்து

நான்வணங்குந்தேவர்களை நாடிவெகுபத்திகொண்டு
தான்வணங்காதேயிருந்தால் சற்றுநேரப்பொழுதில்

கண்டதுண்டமாயுடலைக் கருவிசெறிசக்கரத்தில்
விண்டேசிரசுருள மிக்கவதைசெய்திடுவேன்

வாய்மதங்கள்பேசியுநான் வணங்குகின்றதேவர்களைத்
தீநரகப்பேய்களெனச் செப்புகின்றநீலியும்நீ

என்னைமணம்புணராதே யிருந்தாலின்றுமுதல்
உன்னையெங்கள்தேவர்கட்கு உற்றபெலியாய்க்கொடுப்பேன்

சொன்னபடிகேளுந் தோகைமயிலேயுனக்கு
என்னென்னபாக்கியங்க ளெல்லாமிருக்குதுண்மை

ஆடலுண்டுசங்கீதம் ஆனதம்பூர்வீணையுண்டு
பாடலுண்டாமென்கொலுவில் பாக்கியங்கள்மெத்தவுண்டு

என்கொலுவின்பாக்கியத்தை எண்ணுமற்பேசுகின்றாய்
பொன்கொண்டபூமேனிப் பூவையிளங்கிளியே

என்றொலிவோரன்றினிதாய் இப்படித்தான்சொன்னதன்பின்
நின்றுகன்னியச்சமுற்று நேசமுடன்பார்த்துரைப்பாள்

மண்ணுலகும்விண்ணுலகும் வாருதியிற்சூரியனும்
ஒண்மையாயொன்றுமில்லா தொருநொடியிலேபடைத்த

சருவேசுரன்பதத்தைச் சார்ந்துதுதிப்பதல்லால்
பிரியேனவரருளைப் பேருலகவாழ்வதனை

நம்பினல்மோட்சமுண்டோ நரகமல்லால்நன்மையில்லை
கும்பிவளர்ப்பதற்குக் கொற்றவனேநின்வாழ்வு

வாழ்வுதனையெண்ணிநிதம் வாழ்நாளைப்போக்கடித்தோர்
தாழ்வுபட்டுத்தீநரகில் தாழ்ந்தவர்கள்மெத்தவுண்டு

காசினியிலைஸ்வரியர் காரணனைக்கண்டடைதல்
ஊசித்துவாரமதி னுட்புகுதற்கொப்பாமே

ஆகம்பிரியமுற்றே ஆதிசருவேசுவரர்க்காய்ச்
சாகத்துணிந்தேன்நீர் தானறிவீரென்றுரைத்தாள்

அப்போதேசொல்வான் அழற்சினத்தோடேயொலிவோர்
இப்படியேசக்கரத்தில் இனியுன்னிடும்பதற்காய்

வைத்தரைப்பேன்சக்கரத்தால் வடிந்துதிரஞ்சிந்திடவே
பிய்த்தெறிந்துபோடுதற்குப் பெண்ணணங்கேசெய்திடுவேன்

என்றுசொல்லிச்சேவகரை யேந்தலொலிவோரழைத்து
அன்றுசிறைசெய்திருந்த அரிவையிவளைக்கொடுபோய்ச்

சக்கரத்தில்வைத்தரைக்கச் சாற்றுமுறைகேட்டவர்கள்
அக்கணத்தில்வந்து அரிவையைக்கைப்பற்றினரே

## சக்கரத்தில்வைத்தல்.

### அம்மானை.

கூட்டியழைத்துப்போய்க் கொடுமைசெய்யுஞ்சக்கரத்தில்
நீட்டிடமாதவத்தாள் நெற்றிதனிலேசிலுவை

அடையாளமேவரைந்து ஆற்றரியசக்கரத்தில்
உடையோனைநெஞ்சில்வைத்து உட்புகுந்தாள்மாதவத்தாள்

சக்கரத்தில்சேவகருந் தையலரைவைத்தரைக்க
மிக்கதசைகள்பியந்து மேலுதிரமோடிடவே

நின்றாள்மரிகருதாள் நிட்டூரச்சக்கரத்தில்
குன்றுமல்வாதையெல்லாங் கூடிவருத்திடவே

பூரணசந்தோஷமுடன் பொன்னுலகைத்தானோக்கிச்
சீரணியும்பூங்குழலாள் தேவாதிகாரணனை

வேண்டியிரந்தோதிநின்ற விபரமதைத்தேர்ந்தினிதாய்
நீண்டபுவிமானிடரே நேசமுடனேகேளும்

## வேண்டுதல்

### மிருதுவிருத்தம்:

சத்யமெத்திடுவித்தகாபரி வுற்றசுத்ததிரித்துவா
தஞ்சமஞ்சல்செய்விஞ்சவுஞ்சொய செஞ்சரண்கதியேபெறச்
செத்திறக்கவருத்துசக்கர மெத்தவுற்றுவதைக்கினும்
சிந்தைநொந்துமலிந்தசிந்தையி லெந்தனுருயிர்நாளுமே

இத்தரைத்துயருற்றுமேநிலை பெற்றுநித்தமுறுத்தினும்
இங்குமங்கியுறங்கிவெம்பிய நம்புபாதகிபாதுநீ
முத்திரக்கமுருத்துவைத்திடு தத்துவத்தையளித்திடும்
முந்துமெந்தையுவந்துதந்திட வந்தநாயகயேசுவே.

## வேண்டுதல் தோணுபத்து.

கருணைவாருதி பரமசோபன கடவுளேசருவேசுவரா
கருதியுனதருள் விரதமுடியவே கமலபதசரணருளுவாய்
கிரணசுடரொளிர் பரமபதிபெற எனதுமனதினிலுறுதியாய்க்
கிருபைபுரியுறு சிறுமியடியவள் கெடிபடாதுமதடிமையாய்த்
தரணிதனிலுறுகொடியர்வினையினல் சதைகள்பொடிபடவரை
தமருமருகினிலுளருமுருகவே தற்பராவுயாற்புதா (யினும்
திரணமதிலுயர் கருணையருள்கொடு ஒலிவோரிடுபழியுடலையே
செறியுமெனதுட லுயிருமுமதடி சேரவருளுமிந்நேரமே

வெறியரிடுகொடுகடியவாதையில் மிண்டமாய்சதைதுண்டமாய்
விழினுமெனதுட லழியினுமழல் மேவிடாதுமதாவலாய்ப்
பிரியமொடுவர வடியாளருகுறப் பெலனையருள்தனிமுதலவா
பெற்றிமுற்றியே வெற்றியாகவே வுற்றசுத்தமனத்துடன்
அறிவுநெறியில் வாசனிமட ரரியபிழைபொறுமண்ணலே
அன்பரடிதொழுசிறுவையதிலிறந்தாண்டவாயெனை மீண்டவா
கிருபைசெய்தெளி யாளையாட்கொளு கிரணசோபிதகடவுளே
கீர்த்திவானவர் தோத்திரம்புரி காத்ரமேவிடுகர்த்தனே

கெஞ்சவேயுல கஞ்சவேயுடல் மிஞ்சுபேய்களுமஞ்சவே
கிரணவொளியெனுமரணளித் தென்றன்மரணவேளையிலருளு
அஞ்சலஞ்சலுன் தஞ்சமேகதி ஆதியேபரஞ்சோதியே (வாய்
அமுதகலையெனும்பரமசோதியே ஆண்டவாதயைபூண்டவா
தஞ்சமாக வெனக்கிரங்கியே சதியரிடுகொடும்வினையதில்
தவறியென்மெய் தயங்கிடாமலே தாதையேயருள்நீதியே
மிஞ்சுவான்பிறை மஞ்சுலாவிய வேதனேசுருதிபோதனே
விமலனேயென தமலனேசரு வேசனேதிருயேசுவே.

## அம்மானை.

இந்தடைவாய்ச் சக்கரத்தில் இனியில்லாவாதையுற்று
முந்துமரிகருதாள் முன்னவனைவேண்டல்செய்து

கொண்டிருக்குமப்பொழுது சோமானெலிவோரும்
அண்டிநேசங்காட்ட அவனினைவிலேயெழுந்து

சேவகரைத்தானழைத்துச் செப்புகிறானிப்பவும்நீர்
பூவையரைச்சக்கரத்தால் போக்கியென தருகில்

புக்கவழையுமெனப் புல்லரெனுஞ்சேவகரும்
சிக்கெனவேசக்கரத்தால் செல்விமரிகருதை

இறக்கியுனைப்புவியா ளேந்தல்வரவழைத்தார்
நறைக்குழல்சேர்கன்னியரே நரபதிதன்சொல்லதனைக்

கேட்டாலவராகில் கீர்த்திபெற்றாராக்கினியாய்த்
தேட்டமுடன்வாழ்ந்திருப்பாய் செல்வியரேயுந்தனுக்கு

இந்தமதிவந்ததென்ன ஏந்தலெழில்ஆசனமுன்
வந்திடெனவேவீரர் மாதுமரிகருதைக்

கொண்டுவந்தார்மன்னவனுங் கோதையரைப்பார்த்துநின்று
வண்டிநீயென்பேச்சை மறுத்ததினாலிக்கேடு

வந்தடுத்ததுந்தனுக்கு மாறுபடமேனியெல்லாம்
பிய்ந்துதிரம்ஆறாய்ப் பிரளச்சதைதெறிக்க

ஆச்சுதல்லோவீணாய் அநியாயக்காரியும்நீ
பேச்சுரையைக்கேட்டுப் பிரபலமாயென்னையுந்தான்

கலியாணஞ்செய்திருந்தால் காரிகையேயிக்கொடிய
நலிவானஆக்கினைகள் நாடிவரமாட்டாது

என்றுரைக்கச்சொல்வாள் இனியமரிகருதாள்
நன்றியற்றமன்னவனே நானுரைக்கவேகேளும்

இன்னம்வலுவாய்நீ என்னுடலைப்பின்னமதாய்ச்
சின்னமிகச்செய்தாலும் சித்ரவதையாகவும்நீ

கண்டதுண்டமாக்கிடினுங் காசினியெல்லாம்நகைக்க
விண்டேசிரசுருள மேவியென்னைச்செய்திடினும்

நின்சொற்கிணங்கவும்நான் நீதியுண்டோவுன்தேவர்
தன்சொற்கிணங்கியதைத் தான்துதிக்கவுந்தகுமோ

சத்தியசொரூபியெனும் சருவேசனைமறந்துன்
புத்திதனைக்கேட்பேனோ பொங்கியெரிதீநரகில்

கூளியெனுந்தேவர்களைக் கும்பிடவோநித்தமெனை
ஆளும்பரப்பொருளை ஆசரிக்காமலுந்தன்

எத்துமொழிகேட்பேனோ என்னமொழிபேசுகிறாய்
செத்தொழியஉட்டுணிந்தேன் சீரரசேயென்றுரைத்தாள்

உரைத்தமொழிகேட்டு ஓலிவோருள்ளம்பதைக்கப்
பெருத்தபழிகாரியிவள் பெண்நீலியென்றுமுன்னோர்

149045
சென்னை-600 008.

சொன்னதுமெய்யானதினல் சூழ்ந்தவலிச்சேவகரே
கன்னிமனமுரண்டைக் கண்டறிவோமென்றவளை

தாவிக்கசைமாறுகொண்டு சதைதெறிக்கச்சோர்ந்துவிழ
மேவிப்பிரம்புகொண்டு மெல்லியர்மேல் வீசுமென்றான்

வாருங்கசைகளொடு வன்பிரம்புமாறுகொண்டு
பாரச்சினமிகுத்துப் பதைபதைக்கவேயடித்து

வேறுருவங்கொண்டு மெலிந்துசலித்தயா
மாறிக்கையாலே வலுவாயடித்தபின்னும்

பிடித்திவளைக்கீறிடுங்கள் பித்தம்பிடித்தவளை
அடித்திடுங்கள் கூர்மையுள்ள அடரிருப்புச்சீப்பாலே

என்றொலிவோர்கோபமதாய் இட்டகொடுந்தீர்வையதை
ஒன்றுவயவீரருங்கேட் டோதிமம் போலேயிலங்கும்

மங்கைமரிகருதை வஞ்சரெனுஞ்சேவகர்தாம்
சங்கைகெடவேயிகழ்ந்து தள்ளியேதுள்ளிவிழ

அடிமேலடியடித்தார் அண்ணலொலிவோர்பார்க்க
இடிமேலிடியிடித்தார் இரத்தமெல்லாங்கொப்பளிக்க

துடித்துவிழமேனி துவளச்சதைபறக்க
அடித்தார்கசைகள்கொண்டு அன்றொலிவோர்தான்பார்க்க

அடித்திரத்தமோடுகின்ற அங்கமெல்லாஞ்சீப்பாலே
தொடுத்திரத்தமாக்குகின்றார் சோரியுடனேநரம்பும்

தோலுமறுந்தேதசையுந் துண்டுதுண்டாய்த்தொங்கிடவே
சாலவேசீப்பாலே தையல்சடலமெல்லாம்

வேறுபடக்கீறுகின்ற வேளையதில்வேண்டல்செய்து
கூறுகின்றதெல்லாங் குணமுடனேகேட்டருளும்

என்பாவத்துக்காக எனைப்படைத்ததேவேநீர்
துன்பமுறவேயுலகில் சூதர்கையில்சிக்கிவெகு

நிந்தைகளுக்குள்ளாகி நின்னுடலில்சோரிசிந்த
நொந்துகனவாதையுற்றீர் நுவலுந்திருத்தோளிற்

சிலுவைதனைச்சுமந்தீர் சிறியாள்பவந்துடைக்க
வலுகாயமைந்துடனே மாண்டெழுந்தீர்நானடியாள்

இந்தத்துயர்பொறுக்கா தேயிருந்தாலும்முடைய
பந்திவிருந்தென்னும் பரலோகமோக்ஷமதை

எப்படித்தான்நான்சுகிப்பேன் எம்பிரானேயெனக்கு
வெப்பமுள்ளமன்னனிடம் வெகுகடின ஆக்கினையை

துப்பறவேநான்சகிக்கத் தாரீர்மனத்துறுதி
கற்பழியாதேயிருக்கக் காத்தருளுங்கர்த்தாவே

என்றிரந்துவேண்டுகின்ற ஏந்திழைமுன்மன்னவனும்
கன்றிமுகங்குன்றிநின்று கடுஞ்சினத்தோடேயுரைப்பான்

என்னடிபிள்ளாயுனக்கு ஏற்ருப்போல்பேசுகிருய்
மன்னனென்றுமென்னை மதிக்காமற்றாற்றுகின்ருய்

பொன்மேனியாயிருந்த பூவையேயுன்மேனியெல்லாம்
சின்மேனியாக்கிவெகு செங்குருதிஆருேடப்

புண்படுத்திக்கொண்டாயே பூண்டபிடிவாதமதால்
கண்கொண்டுனைப்பார்க்கக் கரந்துதையோவென்மனது

நிஷ்டூரிபொல்லாத நீலிகொடுஞ்சூரியென்று
வட்டக்கலையதனல் மறைத்துமன்னன்தன்முகத்தை

நன்னயத்தைக்காட்டி நவிலலுற்ருன்மன்னவனும்
உன்னுடையதேவர்களை உற்றபராஞ்சோதியென்ருய்

என்னுடையதேவர்களை எரிநரகப்பேய்களென்ருய்
சொன்னமொழிகளினல் தோகையேயான்கோபமுற்றேன்

ஆனதினலிக்கொடிய ஆக்கினைகளானவெல்லாம்
மானேயுனக்கு வரலாச்சுதென்றுசொல்லித்

தன்மனையில்வீற்றிருக்குந் தாதிபலபேர்களைத்தான்
மன்னனழைத்தேயிவளும் மயங்கித்தயங்குகின்ருள்.

கன்னிமின்னுள்தன்மனது கலங்காதெனக்கிணங்க
இன்னிலமேற்புத்திசொல்லும் என்ருெலிவோர்தானுரைத்தான்

## தாதியர் புத்திகூறல்.

அம்மானே.

தாதியர்கள்கூட்டமதாய்த் தையல்மரிகருதை
மாதயவாய்ப்புத்திசொல்ல வந்துநின்றங்கேதுரைப்பார்

வச்சிரமேநல்ல மாகதமேமாவயிரக்
கச்சணியுங்கோதையரே கன்னியரேநாங்கள்சொன்ன

புத்திதனைக்கேளும் புகழ்சேரும்பொற்கொடியே
சித்திரரூபக்குயிலே தேன்மொழியேமான்விழியே

பொன்னிலங்குமுன்னுடலைப் புண்படுத்தவேண்டாம்நீ
நன்னலங்கள்செய்வதற்கு நாங்கள்சொல்லும்புத்தியைக்கேள்

வயிரமுற்றஉன்றனுடல் வாதைபடக்காரியமேன்
துயரமுற்றுன்னுகமதைத் துண்டகண்டம்பண்ணுவதேன்

விரதம்பிடிப்பதென்ன வீணில்நீசாவதென்ன
உறுதிகொண்டுகற்பினுக்காய் உன்னுடலைமாய்ப்பதென்ன

வடுக்கள்மறுவில்லாத வளர்ந்ததிருமேனியெல்லாம்
நடுக்கமுறப்புண்கள்பட்டு நலிந்தேமெலிவதென்ன

கற்புடமைகாக்கவென்று காரிகையேநீநினைத்து
அற்புதமாமுன்னுடலை அநியாயம்பண்ணுகிறாய்

தவத்துநெறிக்கற்பணிந்து தாரணியிற்சாவதென்ன
அவத்தநினைவெண்ணுகிறாய் அரசனொலிவோருனக்கு

உரைத்தமொழியைக்கேளும் உன்னுயிரைமாய்க்காதே
கருத்திலுன்னுமுன்னினைவைக் காரிகையேவிட்டுவிட்டு

எங்களொலிவோராம் இராசாதிராசனுடன்
மங்கையரேநீகூடி மகிழ்வாகவாழ்ந்திடுவாய்

விண்ணுலகமோட்சமென்ற வீறுப்பைவிட்டுவிட்டு
மண்ணுலகிலேயிருந்து வாழ்வதுவேநல்லசுகம்

யாருனக்குச்சொன்னபுத்தி அரசனொலிவோருடனே
வீரமனங்கொள்ளாமல் விரைந்துமணம்புணரும்

தன்னுகமந்தபசு தானுனக்கேன்பெண்ணரசே
என்னநினைவுகொண்டு இவ்வேஷமாயுடலைப்

புண்ணாக்கவேதுணிந்தாய் பூவையரேநீமுரண்டு
பண்ணாதேயுன்குருதி பாருலகிற்சிந்தாதே

சரீரந்தனையொறுத்துத் தபசுபண்ணக்காரணமேன்
வரிசைசெறிவேந்துடனே வாழ்ந்துசுகித்திருப்பாய்

பொன்னுலகமோட்சமதைப் பூதலத்திற்கண்டவரார்
இன்னிலத்தில்வாழ்வுதனை எல்லோருங்கண்டதுண்டு

வஞ்சகநிஷ்டூரமெனும் மாயகுருக்களுன்னைப்
பிஞ்சுவிழவேசதைகள் பிதற்றுகின்றபுத்திதனைக்

கேட்டதினுலிப்பாடு கிடைத்துதிந்தப்புத்தியெல்லாம்
தேட்டமுறவிட்டுவிட்டுத் தெரிவையரேஉற்றுணர்வாய்

ஆகாதபுத்தியிது யாருனக்குச்சொன்னவர்கள்
சாகாதசாவுனக்குச் சாகவுந்தான்நீதியுண்டோ

நரகமதும்மோட்சமதும் நானிலத்திற்கண்டவரார்
துரோகமுறுமுன்குருக்கள் சொன்னமொழியைக்கேட்டு

மெய்யென்றுநம்பியிப்போ வீணுகவுன்னுடலில்
ஐயோசதைதெறிக்க அடிபடவுங்காரியமேன்

பூரணகன்னிமின்னே பூண்டபிடிவாதமற்றுப்
பேரணிசேர்மன்னனுடன் பெருமையுடனேயிருப்பாய்

யானைபடைசேனையுண்டு அந்தியோக்கியாநகரின்
தானைபெருஞ்செல்வமுண்டு தார்பதியின்சொற்கிணங்கில்

உன்கையில்தானடக்கி உன்வார்த்தையாவருந்தான்
இன்பமுடன்கேட்டிருக்க ஏந்தல்செய்வர்தப்பாது

சாந்துசவ்வாதுபன்னீர் சந்தனமுங்குங்குமமும்
போந்தகலவைகளும் புனுகுசட்டமானவெல்லாம்

கலந்தணிந்துமுன்னுடலில் கன்னியரேமன்னனுடன்
அலர்ந்தசெம்பொற்கட்டிலிலே அங்கிருந்துவாழ்ந்திருப்பாய்

மல்லிகையுமுல்லை மணங்கமழுமெத்தையின்மேல்
நல்லசம்போகத்துடனே நாரியரேவாழ்ந்திருப்பாய்

எத்தனையின்பமதாய் ஏந்திழைமாருங்கூடி
இத்தனைபுத்திகளு மெடுத்துரைக்கநீமகளே

சற்றுமனதிரங்கித் தளிர்வாய்த்திறவாமல்
உற்றமவுனமதா யுன்னலென்னேநன்மகளே

என்றுரைக்கத்தாதியர்கள் இனியமரிகருதாள்
வென்றிமறுமொழிதான் விள்ளலுற்றாளுள்ளவெல்லாம்

அறிவுசற்றுமில்லாத அநியாயக்காரிகளே
நெறிகள்சற்றுமில்லாத நீலிப்பசாசுகளே

உங்கள்புத்தியெந்தனுக்கு ஒருக்காலுமொவ்வாது
மங்கியெழுந்தீநரகில் வாழும்பசாசுகளே

கற்பழிக்கப்புத்திசொல்லும் கசடத்துரோகிகளே
தற்பரனுக்கேற்காத தாதிப்பரப்பிகளே

மண்ணுலகவாழ்வை வகித்தமடையர்களே
விண்ணுலகமோட்சமதை விரும்பாதமூடர்களே

இந்தவுலகந்தனிலே இருந்துபல்நாட்சுகித்து
மந்தமுறும்புத்திகொண்டு மருளடைந்தபித்தர்களே

உங்களுடலழிந்து ஒருநொடியிற்சீவனுந்தான்
வெங்கொடியதீநரகில் வேகுமென்றுகண்டறிவீர்

பொய்களவினேடுகொலை புத்தியென்றுதான்விரும்பிச்
செய்கின்றபாதகரே தீநரகிலேவிழுவீர்

விண்ணாசைதேடாத விரகக்குணத்தோரே
பெண்ணாசைமண்ணாசை பேருலகப்பொன்னாசை

கொண்டுமதிகெட்டவரே குருடர்களாய்நீங்களெல்லாம்
மண்டியெழுந்தீநரகில் மாண்டுயிரைத்தான்கொடுப்பீர்

மண்ணுலகந்தான்முடிந்தால் வானவர்கள்கோனான
அண்ணல்சருவேசுவரனார் அரியநடுத்தீர்வையிலே

என்னையுமுங்களையும் எதிரெதிராய்த்தானிருத்தி
உன்னிக்கணக்குரைப்பார் ஒருத்தர்தப்பிப்போகறியார்

தர்க்கமெடுத்துரைக்கத் தைரியங்களுண்டோசொல்
வெட்கமுற்றுநீங்களப்போ வேறேநிறப்பிழையாய்

நின்றிடுவீருங்களுடை நிஷ்டூரப்பேய்களெல்லாம்
ஒன்றுபடஉங்களைத்தான் ஒக்கவேதான்சூழ்ந்து

கணக்குரைக்குமவ்வேளை கடவுள்சருவேசுவரனார்
இணக்கமறவெங்களுக்கு இப்புவியிற்பூசைபண்ணி

வந்தவர்களேநீங்கள் வாருங்காள்தீநரகில்
அந்தமில்லாத்தீநரகை அடையவுங்கள்பங்கலவோ

என்றுஉங்கள்தேவர்கள்தான் எல்லோருஞ்சொல்வார்கள்
ஒன்றுபடத்தீநரகில் உங்களைத்தான்தள்ளுவார்கள்

அப்போதறிவீர்கள் ஆனதொருதேவர்களை
இப்போதுபுத்தியெனக் கெண்ணாமற்சொல்லுகிறீர்

நட்டமிட்டதேவரென்று நானிலத்திலேநீங்கள்
கட்டினீர்கோபுரங்கள் கனமாகத்தேருடனே

நிஷ்டைநெறியானதெவலாம் நீள்தபசுபுண்ணியமும்
இஷ்டமுடன்கண்டறிவீர் ஏகன்நடுத்தீர்வையிலே

பில்லியாய்மோகினியாய்ப் பேருருக்கொள்தேவர்களை
வல்லநடுத்தீர்வையிலே வந்திருக்கக்கண்டிடுவீர்

வெறிபயித்தியங்கொண்ட வீணாட்டப்பாதகரே
நெறியற்றநீதிகொண்ட நிலையில்லாப்பாதகரே

சத்தியவேதத்துரோகச் சண்டாளப்பாதகரே
எத்தனைதுர்ப்புத்திகளை எண்ணாமற்சொல்லுகிறீர்

யாரென்றெனைநீர் அதட்டிப்பகட்டுகிறீர்
சீர்கொண்டவேகன் திருமகள்யான்கண்டறிவீர்

சர்வசங்காரநடுத் தான்கேட்கும்நாயகர்க்காய்த்
துறவுகொண்டுபாடுபட்டுச் சோரியையான்சிந்திடுவேன்

உன்னிச்சகலபொரு ளொருநொடியிலாக்குபிரான்
என்னைப்பரம்பதியில் ஏற்றிமுடிகொடுப்பார்

என்றுமரிகருதாள் எதிர்நின்றதாதிகள்முன்
நின்றுதர்க்கமேபுரிந்த நீதிமுறையானவெல்லாம்

தாதிகளுங்கேட்டுச் சலித்துமனவெட்கமுற்றுத்
தீதனெவிவோர்க்குரைப்பார் தேர்வேந்தேநாங்கள்சொன்ன

புத்தியாற்றிற்கரைத்த புளிபோலஆச்சுதையா
மெத்தவேநீதிமுறை விபரமெல்லாஞ்சொல்லுகிறுள்

வித்தாரக்கள்ளியிவள் மெல்லியிவள்மாநீலி
கற்றவித்தைபேசுகிறுள் காவலனேஎன்றுசொல்லத்

தாங்கரியகோபமுற்றுத் தார்பதிக்குமிஞ்சுமிவள்
ஆங்கொடியநீலி அழிந்தொழியக்காலமின்றே

வந்தடுத்ததாலிவளும் வைராக்கியம்பிடித்தாள்
எந்தவிதஞ்செய்வேனென் றேந்தல்மனமடிந்து

சிந்தையுசாவித் தெளியுமுன்னர்ப்பைந்தொடியும்
நிந்தனையாய்மன்னவன்முன் நிகழ்த்துமொழிகேளீர்

நித்தமுமக்கேன்காணும் நிருபனேயிந்தமதி
பித்தம்பிடித்தலைந்த பேய்நாய்போலநினைவேன்

சங்கைகெட்டபாதகனே சண்டாளர்வென்மீதில்
சிங்கமுகங்காட்டுகிறுய் சினப்புலிபோலநீயும்

மண்டியெழுந்துன்னுடைய வயிறுபசிகொண்டிருந்தால்
கண்டதுண்டமாயறுத்துக் கடும்பசியைஆற்றிடுவாய்

தின்னவுந்தான்கூடாது தீதுசெய்யவும்மாட்டாய்
என்னதாமெனன்சடத்தை எண்ணுமலாசைவைத்தாய்

நரம்பெலும்பைப்பூட்டி நசையடாத்தோல்போர்த்த
குரம்பையிதென்றெண்ணுமல் கொண்டாயோஆசையென்மேல்

ஒன்பதுவாசலுடன் ஊன்வழிந்தேயொழுகும்
சென்மமிதென்றெண்ணுமல் தேடுவையோஆசையென்மேல்

மலம்பீளைசீழ்நாற்றம் மன்னுஞ்சடந்தனில்நீ
நலமானவிச்சைகொண்டு நாடுவதேன்மன்னவனே

வீணுசைகொண்டு மெலிவானேனுன்னுடைய
தோணுதபுத்தியல்லோ தோன்றலேநீநினைத்தாய்

என்றுகன்னிசொல்லிடவே ஏந்தலொலிவோர்வெகுண்டு
கன்றிமனங்கோபமுற்றுக் கன்னியசைப்பார்த்துரைப்பான்

என்ஆண்மைச்செங்கோற்கு எதிரொருவரில்லாது
மன்னுண்மைகொண்டிருந்தேன் மாற்றலரென்பேர்கேட்டால்

சிந்தைகலங்கி திடுக்கிடுவார்மீயுலவும்
செந்துபலபட்சிகளும் தின்னுதிரைமுதலாய்

பிறக்குங்குழந்தையெந்தன் பேர்கேட்டாலேபயந்து
கறக்குமுலையுண்ணுது கன்னிகையேநீயொருத்தி

என்மொழிக்குவேறு யெதிர்மொழிகள்பேசுகிருய்
கன்முதலாயென்மொழியாற் கரையும்இரும்புருகும்

உன்மனதுசற்றும் உருகாவைரமதாய்ச்
சென்மமெடுத்தேபிறந்தாய் தெரிவையரேதாதியர்கள்

நல்லோர்கள்சொன்னபுத்தி நம்பாமலேநகைத்தாய்
எல்லாமறிந்தவள்போல் எடுத்தெறிந்துபேசிவந்தாய்

பித்தரென்றுமெங்களைநீ பேயரென்றும்பேசிவந்தாய்
பற்றுதலாயின்னும் பயமின்றிப்பேசுகிருய்

ஆகாதகள்ளியிவள் யார்காணுஞ்சேவகரே
வாகாயிவள்பிடித்த வைராக்கியங்குறைய

இவளைச்சிறையிலடைத் தின்னமொருஆக்கினைகள்
நவமாகநான்தேடும் நாள்மட்டுமேசிறையில்

வையுமெனச்சேவகரும் மங்கைமடக்கிளியை
வெய்யசிறைச்சாலைதனில் விட்டடைத்தாரம்மானை.

## மரிகருதாளின் வேண்டுதல்.

வெண்ணிலா தரு

தேவதிரித்துவ மாகியுருக்கொளும் யேசுநாதனே—நித்தம்
தேடியபாதகி மீதருள்கூருமென் யேசுநாதனே

தஞ்சமுமதரு ளஞ்சலிசெய்கிறேன் யேசுநாதனே—இந்தத்
தாருலகத்தவர் சார்பெனக்கில்லையென் யேசுநாதனே

கஷ்டச்சிறையில் கலங்கிமெய்சோர்கிறேன் யேசுநாதனே—என்னை
நிஷ்டூரஞ்செய்தொலி வோருமடைத்தனன் யேசுநாதனே

என்கற்பழிக்கவே எண்ணியேமன்னனும் யேசுநாதனே—இன்னம்
தன்பலத்தாலென்செய்தாலுமுன்பாதுநான் யேசுநாதனே

வன்னியலகையை என்னைவணங்கவே யேசுநாதனே—பொல்லா
மன்னனுரைக்கிருன் என்னையிரட்சைசெய் யேசுநாதனே

வஞ்சலகை மயக்கத்தில்சிக்காமல் யேசுநாதனே—உந்தன்
வல்லபத்தாலதை வெல்லஅருள்செய்யும் யேசுநாதனே

அன்னையுந்தந்தையும் உன்னையல்லாலெவர் யேசுநாதனே—எந்தன்
ஆவிக்கருந்துணை நாயகனுனவென் யேசுநாதனே
வஞ்சவுலகத்தின் மாய்கையிற்சிக்காமல் யேசுநாதனே—உந்தன்
மகிமைசெறிமோட்ச வாழ்வையெனக்கருள் யேசுநாதனே.

அம்மானை.

இந்தடைவாய்மங்கையரும் இருண்டசிறைச்சாலைதனில்
தந்தைசருவேசுவரனைத் தான்வேண்டிக்கொண்டிருந்தாள்

சிறைபடைத்தவேந்தனெனுஞ் செல்வனேவிவோரும்
வெறிகொண்டுமங்கையின்மேல் மேவிவெகுபித்தேறி

அரிவையிவளையும் ஆகாத்தியங்கள்பண்ணி
விரகவெள்ளமிஞ்சவைத்து வீணுகவேமடுத்தாள்

பிறைநுதலாள்ஆசையென்னைப் பேயாக்கிவிட்டதென்று
குறைமிகுத்துமங்கையின்மேல் கொடியவிசனமுற்று

அடங்காத்துயரமதை ஆற்றமுடியாமல்
கொடும்பாவிமன்னன் குறித்தொன்றைத்தேறினனும்

தீராக்குறைகளுக்குத் தெய்வந்துணையெனவே
ஆராய்ந்துமுன்னோர்கள் அன்றுரைத்தசொற்படியே

மங்கைதனையிணக்க வகையொன்றுமில்லையென்று
தங்கள்குலத்தேவர்களால் தையலரைக்கைவசமாய்க்

கொள்ளலாமென்றுசொல்லிக் கொற்றவன்றன்கோயிலெல்லாம்
தெள்ளுஞ்சிறப்பாக்கச் செய்யக்குருக்களுக்கு

மன்னனுரைத்தேயனுப்ப வாழ்குருக்களானவர்கள்
உன்னதமாங்கோயிலெல்லாம் ஒழுங்காயலங்கரித்து

சிவாலயமாலயங்கள் செய்யபலஆலயமும்
பவாலயங்கள்உள்ளதெல்லாம் பாங்காயலங்கரித்து

வேந்தற்கறிக்கையிட்டார் மேவிமன்னன்கோயில்களைச்
சேர்ந்தணுகிஆடுபன்றி செழுங்கோழிமற்றுளதும்

பெலியிட்டுப்பூசைபண்ணிப் பிரபலமாய்த்தேவருக்கு
கொலுவைத்துத்தேவரைத்தான் கூவியழைக்கலுற்றான்

அத்திமுகனேயென் அரியின்மருமகனே
சத்திமகனேநீ தயவென்மேல்வையுமையா

மரிகருதாளென்னும் மடக்கிளியாளென்னுடனே
திருமணமேசெய்யஅவள் சிந்தைதனைக்கலைப்பீர்

சங்கரனேஐங்கரனே சதாசிவனேசாம்பவனே
எங்கள்குலத்தேவர்களே யெழுந்திங்கேவந்திடுவீர்

அரவணிந்தமூர்த்தியானே அலகையோடாடினனே
புரமெரிமயேசுரனே பூதநாதாவாரும்

கங்கைமணவாளா கங்காளாசெங்காவி
மங்கையொருபாகமுற்ற வாமனேவந்துதவும்

சூலகண்டதேவா சூழ்சுடலையாடியவா
ஆலவிஷமுண்டவனே ஐம்முகனேவந்துதவும்

அழலாடுகின்றவனே அந்திவண்ணமுக்கணனே
கொழுஞ்சுடலையாடியவா கோதறவேவந்துதவும்

ஓம்நமசிவாயா உயர்சூலபாணியனே
ஆம்நமசிவாயா ஐந்தெழுத்தாய்வந்துதவும்

ஓங்கிரீசுவாயா ஓம்நமசிவாயாநீ
ஈங்கிரீசுவாயாநீ எழுந்திங்கேவந்துதவும்

ஆறெழுத்தாயெட்டெழுத்தாயைந்தெழுத்தாய்மூன்றெழுத்தாய்
கூறெழுத்தாந்தேவர்களை கூண்டின்றுவந்துதவும்

விண்டுகடற்றுயின்ற விஷ்ணுவேசக்கிரியே
கொண்டல்வண்ணனென்றுரைக்கும் கோவிந்தாவந்துதவும்

அம்பிகையேசாம்பவியே அரியசத்திப்பார்வதியே
நம்பும்பவானிநீ நயந்திங்கேவந்துதவும்

வீரிகௌரீ விறற்சம்ரிசண்டிகையே
சூரியெண்டோளியெனும் துர்க்கையேவந்துதவும்

பயிரவிதேவி பதுமைசாமுண்டிகையே
உயிர்பறிக்குங்கௌமாரி ஓங்காரிவந்துதவும்

என்றேவிவோர்கூவ எரிநரகத்தேவரங்கே
ஒன்றும்வராதிருக்க ஓங்காரித்தேயுரைப்பான்

எனதுகுலத்தேவர்களே என்மேற்பராமுகமோ
மனதுரிமைகொண்டெனக்கு வாக்கருளவேணுமென்று

தேவர்களைமன்னவனுஞ் சினந்தாக்ரமித்தழைப்பான்
மூவர்திரிமூர்த்திகளே முனையழிந்ததேவேந்திரா

கங்கைதனைச்சுமந்த காலகோலச்சிவனே
பங்கமடைந்தகொடும் பாதகனேவாருமென்று

கதறியபயமிட்டுக் கடுகிவரவேணுமென்றான்
பதறியேதேவர்களைப் பணிவாகக்கூறலுற்றான்

ஓடிவரவேணும் ஒருவாக்குத்தான்கொடுக்க
வாடிபராசத்திசித்தி வண்டிசண்டிமுண்டிதிரி

சூலிமகமாயி துர்க்கையெனுமூதேவி
வாலசரஸ்வதியே வந்தெனக்குவாக்கருள்வாய்

காளிபிடாரிரத்தக் காட்டேரிவல்வீரி
கூழிசடாமுனிகாள் கூட்டமுடன்வந்துதவீர்

முப்பத்துமுக்கோடி முராரியுடைதேவர்களே
ஒப்புடனேவந்தெனக்கு ஒருவாக்குத்தந்துதவும்

அறுபத்துமூவர்களே ஆழ்வாரென்தேவர்களே
திறமிகுத்துவந்தெனக்குத் திருவாக்குத்தந்துதவும்

என்றுதியானமுற்று இனியில்லாமந்திரத்தால்
நின்றுவுருவேற்றி நினைத்துருகியேசெபித்தான்

## பேய்கள் வருதல்.

### அம்மானை.

அன்பத்தோர்அட்சரத்தால் அண்ணலொலிவோரும்
இன்புற்றுப்பூசைசெய்த இனிமைகண்டுபேய்க்கூட்டம்

முன்னின்றுவந்தொருபேய் முடிமகுடவேந்தனுக்கு
சொன்னமொழியைக்கேளும் தூயவரேமாய்கையுடன்

மன்னவனேநீநினைத்த மடக்கொடிமங்கையராங்
கன்னியரையுந்தனுக்குக் கலியாணஞ்செய்வதற்கு

உன்னிமுடிப்பேனென் றொருவாக்களித்தருளச்
சென்னிதனைவணங்கிச் செய்பூசையாலதிக

சந்தோஷத்தோடுமன்னன் தன்மனைக்குப்போனதன்பின்
அந்தியென்னுமாலையிருள் ஆய்ந்திரவுமொய்த்ததுவே

அன்றிரவிற்கூளியுந்தான் அரசனிடுமேவலினல்
மன்றியெரிதீநரகில் வாய்பிளந்துபோயதுவே

அட்சலகுசூழ்ச்சம் ஆனதுடனெயெழுந்து
நச்சுவிஷம்போல்வெகுண்டு நங்கையரைத்தான்மருட்ட

ஈனப்பசாசதுதான் இடும்பனெலிவோர்தனக்காய்
ஞானத்தபசளிக்க நன்மையுள்ளகன்னியரை

வேணுமென்றேநினைத்து வெஞ்சினத்தையுள்ளொளித்து
தோணவெகுபுத்திசொல்லித் தோகைமனதைக்கலைக்க

கண்ணிவைக்கவேணுமென்றுகருத்திலெண்ணிப்பேய்களுந்தான்
நண்ணிவெகுயோசனையாய் நாரியர்தன்பாலணுகி

வந்தவகையானதைத்தான் மாண்புடையோர்கேட்டருளும்
அந்தமழிந்துகெட்ட அலகையெனுங்கூளிகள்தான்

நீண்டசடைகள்தொங்க நெருப்பொழுகியேவடிந்து
கூண்டிருகண்கள்சிவந்து கொதித்தனல்கொப்பளிக்க

உச்சந்தலைபாதம் ஒன்றுபடத்தியெரிய
துற்செவிகள்யானையைப்போல் துர்நாற்றமேகிளம்ப

வாயும்பொறிபறக்க மரணவிஷமேசொரிய
தீயுமதின்வழியே சீறிச்சினந்தெரிய

வாரணத்தின்கோம்பதுபோல் வலியபல்லுமத்தகமும்
நேரொத்தநாக்கும் நிறுவித்தரைதுருவ

கொதித்தசுடுமுகமும் கொம்புந்தணல்வீச
உதித்தசடையதுதான் ஓங்காரமேயுதிக்க

பல்லும்நறநறெனப் பகைபழிகள்சூழ்ந்துநிற்க
அல்லும்பகலும் அதர்மமிகத்தான்கொடுக்க

பனைப்போல்கருங்கழுத்தும் பார்மலைபோல்தோள்மார்பும்
நினைத்ததெல்லாங்கைகூட்டும் நீள்குரங்குக்கையதுவும்

கொப்பறையைப்போல்வயிறும் கொடுமைக்கினியதுமாய்
ஒப்பரியயானைமதத் துள்ளபெரும்மதமும்

நீதங்குறைந்து நிலைகலைந்துநேசமற்று
பாதகத்தைச்சூழ்ந்து பணிவிடைக்குத்தானுவந்து

தாளுமதற்கிசைந்து' தத்துவமுங்குத்திரமும்
கோளும்கொடுவினையும் குண்டுணியுங்கோபமுமாய்

திரிசூலமோர்கரமும் திகிரியொருகையுமுற்று
அறிவுநினைவைக்கலைக்க ஆயிழைமார்தன்வலையும்

நாதர்நமக்குரைத்த நாலாறுகற்பனையை
தீதென்றகற்றுதற்குச் சிங்காரக்கண்ணிகளும்

பொய்யானஆசைகளும் பொல்லாதமாய்கைகளும்
செய்யாததீவினையும் சீர்குலைந்தழுவினையும்

வைராக்கியம்பகையும் வஞ்சமுறுநெஞ்சுடனே
செயிராச்சியங்களுக்குச் சிறுவிருதுகின்றாத

காய்மகாரங்கொடுமை கருங்கடல்போல்நின்றிலங்க
மாய்கைநிலைக்கவெகு மண்ணுசைக்கொம்பூத

கோபமுற்றுச்சோம்பல் கொடுமைமிகும்வேட்கையுடன்
பாவவெரிச்சல்களும் பாரப்புகைச்சல்களும்

கட்டாண்மைவாறுகளும் கனமோகத்தின்சுழலும்
துட்டரிடும்வம்புகளும் துயர்பூண்டவாதைகளும்

பெருகும்விரகமதும் பேசாதஊமைகளும்
இருகாதுமேசெவிடும் இரண்டுகண்ணுமேகுருடும்

போவதற்குத்தானேற்ற பொல்லாததீமைகளும்
சாவானபாவமிகும் சதிநரகிலேமூழ்கி

ஆவனுறவன்புவைக்கும் அக்கியானக்கடிகள்
மேவியடைந்தவரை வேட்டைமிகக்சூழ்ந்துநிற்கும்

வாய்நாற்றம்புண்ணாற்றம் மானமறுநாற்றமுமாய்
பேய்நாற்றந்தன்னோடே பேணுபவர்க்கக்களிப்புப்

பகிர்ந்துகொடுத்துவந்த பஞ்சமாபாதகப்பேய்
அகந்தைசிதைந்தழுது அதிர்ந்துபகைத்தலறி

நாணிழந்தமோட்சமதை நரரடையப்போவர்களோ
ஈனமுறும்நானவரை என்றும்விடுவேனோ

ஆமோவெனப்பதறி அதிர்ந்துவிடுவிடென்று
போவோமெனத்தியங்கிப் புத்திமருண்டேமாறி

தெறிகெட்டதுகலங்கித் தீப்பறியவேவிழியில்
வெறிகொண்டதுபோல மெல்விநல்லாள்தானிருக்கும்

சிறைக்கூடவாசலிலே சென்றுகுருவேஷமதாய்
நறைக்குழலேநற்றவமே நாதர்மணிவிளக்கே

செகத்துநவமணியே சித்திரரூபக்கனியே
அகத்தில்வெகுஞானமுற்று அறிவிலங்குமென்மகளே

ஒலிவோரெனுங்கோமான் உன்னைவெகுவாய்ச்சினந்து
மெலிவாகஉன்னுடலை வேற்றுருவாய்ப்பாடுசெய்தான்

அந்தவிசேஷமதில் ஆகமிகத்தளர்ந்து
உந்தனுக்குப்புத்திசொல்ல உன்னையிங்கேதேடிவந்தேன்

பொல்லாதமாபாவி புத்திகெட்டநிஷ்டூரன்
வல்லபெருஞ்சக்கரத்தில் வாதைசெய்தானேவுனைத்தான்

அடித்தானேசிப்புகளால் அருஞ்சதையைப்பிய்த்தெறிந்து
வடித்தானேமேனியெல்லாம் வாதைபடவென்மகளே

உன்னைஒலிவோர் உறும்வினைகள்செய்யாமல்
கன்னியரேமன்னன் கடுங்கோபமாறுதற்கு

என்னவகைசெய்வோம்யாம் என்மகளேபொன்மகளே
கன்னல்மொழிக்கன்னியரே கண்மணியேகாரிகையே

ஒலிவோரெனுந்திறையான் ஒக்கமனதிளகில்
கலியாணஞ்செய்துகொள்நீ கடுங்கோபமாறிவிடும்

அந்தியோக்கியநகரில் அன்பாய்நானுன்றனக்குத்
தந்துபதேசங்கள்செய்த தவறில்லாப்புத்தியைத்தான்

விட்டுவிடச்சொன்னாலும் விட்டுவிடுகுற்றமில்லை
தட்டாதேவிட்டுவிடு சமயம்வந்தாலென்னசெய்வம்

சருவேசுவரனுடைய சத்தியவேதப்பொருளை
அறியார்கள்நன்றாய் அரசர்பிறப்புக்கள்தான்

செய்யதிருமேனியெல்லாஞ் சீரழியக்காரியமேன்
ஐயகோவென்மகளே அலக்கழிந்துபோனாயோ

மன்னனெனிவோர் மணக்கோலந்தன்னோடே
கன்னிமின்னேநீயுங் கலியாணஞ்செய்துகொள்வாய்

பாவமில்லையுன்னிடத்தில் பார்த்திபனோடேயிணங்கு
தேவசருவேசுவரனார் சித்தமிரங்கிப்பொறுப்பார்

என்றுபசாசுரைத்து இப்படியேநிற்பளவில்
குன்றிமனமுருகிக் கொதித்துமனமயர்ந்து

கன்னிமனம்பேதலித்துக் கருமமறியாமல்
உன்னியுசாவி ஒருவகையுந்தோன்றாமல்

சந்தேகமுற்றுவெகு தாறுமாறானபுத்தி
எந்தனுக்குவந்துசொன்ன இவராரோவென்றுசொல்லி

தந்தையேயெவ்வுயிர்க்கும் தாதாவேநீதாவே
வந்தவகைநானறியேன் வானவனேயென்மனது

தேறமனமிரங்கிச் சேர்ந்தவரைநானறியக்
கூறுமுமதருளைக் கொற்றவனேநித்தாவென்

றன்னேரம்பூங்கொடியும் ஆதியந்தமில்லாத
முன்னவனேவேண்டலுற்றாள் மூதுரைபோற்றாணங்காள்

என்னவனெமுன்னவனே எல்லாமறிந்தோனே
தன்னவனேயெப்போதுந் தானாயிருப்போனே

அம்பரனேயெம்பரனே அனைத்துயிர்க்குந்தற்பரனே
உம்பரனேஞாலத் துயிர்க்குயிராய்நின்றோனே

நாதனேதூய நவமிலங்கும்மெய்ப்பொருளே
போதனேஞானப் பொருள்நிறையுஞ்சீமானே

நிறைபூரணப்பொருளே நேசகனேவாசகனே
மறைஞானமுற்றவனே மாசுமறுவில்லானே

அன்புசெறிந்தோனே அளவில்லாவற்புதனே
இன்பம்நிறைந்தோனே ஏதமறவந்தோனே

ஊணுறக்கமில்லானே உறுவினைகளில்லானே
காணரிதாய்நின்றோனே கடும்பகையைவென்றோனே
பாதகிநான்செய்பவத்தால் பாதத்திலாணிதைத்தோய்
தீதுபுரிந்தவென்னைத் தேடியன்பாய்வந்திரே

நிறைஞானபூரணமாய் நிகழ்த்துமெனவேண்டிடவே
பிரகாசமானதுவும் பெருந்தவத்தாள்முன்வீசி
ஆகாசமீதினிலே அரியவசரீரி
வாகாகவேதான் வசனித்தாரம்மானை

கலங்காதேகன்னிமின்னே கற்பதுற்றநற்றவமே
நலங்காதேநல்மொழியை நம்பாஃதவெம்பாதே

வந்துசிறைச்சாலை வாசலருகுதனில்
சிந்தையுறநிற்பதுதான் தீநகரப்பேயெனவே

மாவலுவாய்த்தோன்றிடநல் வாக்கையசரீரிசொலத்
தேவபரன்சித்தமென்று தேறிமனமாறிக்
கொண்டுமரிகருதாள் கொடுங்கூளிப்பேயதனை
அண்டிவலுவாய்ப்பிடித்த தறைகிறேன்மாந்தர்களே

சிங்கமதுயானைதனைச் சீரிப்பிடித்ததுபோல்
மங்கைபசாசைப்பிடித்து வானவர்கள்தன்பலத்தால்

அண்ணல்சருவேசுவரர்க்கு ஆகாதநிஷ்டூரா
கண்ணியிடும்பேயேயென் காலின்கீழேகிடப்பாய்

என்றுகன்னிகோபமற்று ஈனப்பசாசுதன்னைக்
கன்றிமனதுபொங்கிக் கலங்காமலேபிடித்தாள்
தீயெரியுஞ்செஞ்சடையைச் சிக்கெனவேதான்பிடித்து
மாயப்பிசாசுதன்னை மண்புரளவேயுதைத்து

நெஞ்சுதனிலேறிநின்றுள் நேரிழையாள்தான்வலுவாய்
வஞ்சப்பேயஞ்சி வகைமோசம்வந்ததென்று
குன்றியபயமிட்டுக் கொடுஞ்சூலம்விட்டெறிந்து
கிண்டிநிலஞ்சுரண்டிக் கிழட்டோரிபோலழுது

கன்னிகையேயென்சடையைக் கலங்காமலேபிடித்துச்
சென்னிதரையில்விழச் செய்தனையோஐயோகோ
மண்ணில்விழத்தள்ளியெனை மார்பிலேதானுதைத்து
பெண்ணேயென்நெஞ்சில்நின்று பேதலிக்கச்செய்தாயே

காலால்மிதித்துஎன்னைக் கடினமெத்தப்பண்ணுகிறாய்
மாலோகமாமனுவோர் மதியாரேயென்னையினி
உன்னைவெல்லநானுமின்று உன்னியெண்ணிவந்தேனே
என்னையும்நீவென்றுவிட்டாய் இறைவனின்தன்னருளால்

மந்திரிமார்சாஸ்திரிகள் மன்னர்துரைமார்களுக்கும்
தந்திரத்தில்வல்லவர்க்குந் தாரணியில்கண்ணி -வத்தேன்

அப்படிப்போலேயுனக்கு ஆனவுபாயங்கொண்டு
செப்பரியகண்ணிவைக்கச் சேயிழையேதேடிவந்தேன்

ஆகாதுபோச்சுதிப்போ அண்ணல்சருவேசுவரனார்
வாகாகவுந்தன் வசத்திலிருந்துவிட்டார்

என்றுபசாசொடுங்கி இப்படியேசொன்னதன்பின்
வென்றிசெறிகன்னி விரத்திபின்னுமேதுரைப்பாள்

பொன்னுலகமோட்சமதைப் போக்கடித்துப்பொல்லாத
வன்னிநரகில்நின்று மயங்கும்பசாசேநீ

எந்தனைநீகெடுத்து இப்போதுபுத்திசொல்ல
வந்தவகையானதெல்லாம் வகைப்படியேயிப்போது

செப்பமுடனெந்தனுக்குத் திறந்துசொல்லவேணுமென்று
ஒப்புடன்கேட்டதற்கு ஓங்கிப்பசாசுசொல்லும்

சருவேசுவரனுடைய சத்தியமறையைக்கெடுத்து
உறுபாவிமன்னன் ஒலிவோருந்தன்னுடனே

கலியாணஞ்செய்தந்தன் கற்பழித்துமோகமதில்
மலிவாகவேமயங்கி மகாவீனம்வருத்தில்

இத்தரையிலுங்கள் இருவரையும்பிற்காலம்
செத்தபின்புநான்முடிவில் தீநரகிலேயிழுப்பேன்

தப்பாதுஇவ்வார்த்தை சத்தியமாய்ச்சொன்னேன்நான்
இப்புவியிலெந்தனுக்கு எந்நாளுமேயொலிவோர்

தேரோட்டிக்கோயில் சிறப்பித்துப்பூசைகள்தான்
பாராட்டிமோகசங்கப் பரஸ்திரீகள்தான்மிகவும்

கூத்தாடக்கோயிலெல்லாம் கொம்புதவில்வாத்தியமுடன்
பார்த்தாடச்சோறுகறி படைத்தெனக்குப்பூசைசெய்வான்

உன்மனதைத்தான்மயக்கி ஓங்கலவனோடிணைக்க
என்னைவரவழைத்து ஏவிவிட்டானிப்போது

மாதேநானுன்னிடத்தில் வந்தவகையிதுதான்
நீதான்மனமிரங்கி நெகிழ்ந்தென்னைவிட்டுவிடு

என்றுபசாசுரைத்து இப்படியேகெஞ்சிநிற்க
வென்றகன்னியாளதனை விடாமற்பிடித்திழுத்து

இந்தவுலகில்நடக்கும் எண்ணவொண்ணாச்சமயம்
வந்தவகையெந்தனுக்கு வகுப்பாகச்சொல்லுமென்றாள்

ஆனவினிக்கேளும் அடைவாகச்சொல்லுகின்றேன்
மானேநான்கட்டிவைத்த மறுசமயமானதெல்லாம்

பலவகையாமதெல்லாம் பாவமெல்லாம்புண்ணியமாய்
நலமாகக்கட்டிவைத்தேன் நரகமதிலேவரவே

சந்திரனைச்சூரியனைத் தரணிமனுவோர்வணங்க
மந்தமதியுற்றழிய மனதறிந்துபண்ணிவைத்தேன்

மண்ணோடுதண்ணீரை வாய்வோடுதீயதனை
விண்ணோடொளிவெளியும் மிருகபட்சியானதெல்லாம்

கல்லுமரஞ்செம்பொடுபொன் கடலாமைமீன்பாம்பு
நல்லதெய்வமென்றுசொல்லி நான்வணங்கச்செய்திடுவேன்

என்னுடனேமோட்சமதை எல்லோரும்விட்டிழந்து
வன்னரகிலேவீழ்ந்து மயங்குகின்றபேய்த்திரளை

அனுப்பியேநான்விடுவேன் அந்தந்தத்தேசமெல்லாம்
வினைக்கொடியகண்ணிவைத்து மேதினியின்மானிடரைப்

படித்தலத்திற்கண்மயக்கிப் பலசமயசாஸ்திரத்தைக்
கெடுத்திடுவேனிப்படிக்குக் கெதியடையாமற்படிக்குத்

தாறுமாறாய்க்குழறிச் சாஸ்திரிமார்வாயினிலே
ஏறியவர்வாக்கினின்று இனியில்லாவித்தைசெய்வேன்

ஆனைகரடிபன்றி ஆளிசிங்கம்பாம்புமயில்
ஈனமுறுநாய்குரங்கு எலிபூனையானதுபோல்

மாடுகழுதைக்குதிரை மான்மரைகள்போலவுமே
நீடுகடுவாய்புலிபோல் நெறியில்கிழட்டோரி

போல்வேஷங்கொண்டிடுவேன் புத்தியற்றமானிடரில்
மால்வேஷங்கொண்டு மயக்கிடுவேன்மாதரைத்தான்

தாலமெல்லாமோர்நொடியில் சாடிவலம்வந்திடுவேன்
கோலமதுகொண்டுவந்து குவலயத்திலாடிடுவேன்

செத்தமனுஷரைப்போல் செகத்துவந்துநித்திரையில்
உற்றகனவில்வந்து உருக்கொண்டுநின்றிடுவேன்

சன்னதங்கள்வந்ததென்று தலைசுற்றிஆடிடுவேன்
உன்னிமனுவோருடைய உள்ளமதிலேபுகுந்து

கோயிலுடன்கோபுரங்கள் குவலயத்தில்கட்டிவைத்து
ஆவலுடனேயதற்கு ஆனசக்திசெய்திடுவேன்

காடுமலைசெடிகள் கண்டகண்டவீதியெல்லாம்
ஓடியுலாவித்திரிந்து உறுபலிகள்கொண்டிடுவேன்

பலவேஷங்கொண்டிடுவேன் பாரின்மனுவோர்தமக்கு
நலமாகச்சர்ப்பனைகள் நாடியேசெய்திடுவேன்

பில்லிகுறளியொடு பெருத்தசித்துவித்தைகட்கு
எல்லையில்லாத்தந்திரங்கள் எதிர்நின்றுசெய்திடுவேன்

இந்நிலத்திலிப்படியே எய்த்தேபிறந்தவரை
வன்னரகிலேகொடுபோய் வாதைபுரிந்திடுவேன்

கண்கட்டிவித்தையெல்லாங் கட்டிவைத்தேன்மாந்தருக்கு
எண்ணரியசூட்சமுண்டு எல்லோரையுங்கெடுக்க

அரசர்துரைமன்னவர்கள் அருந்தவத்தோர்போல்வடிவம்
தெரிவையர்கள்போல்வடிவந் தேடிவுருவெடுப்பேன்

மலைவிருக்ஷம்போல மதித்துருவம்நானெடுப்பேன்
துலைவருந்திடப்போரைத் தொடர்ந்துதலைமீதிருப்பேன்

இந்திரசாலவித்தை ஈனமயேந்திரசாலம்
எந்தவித்தையுமெடுப்பேன் இதற்குதவியாயிருப்பேன்

கெஜகாணங்கோகாணம் கம்பீரவித்தைகட்டு
நிஜரூபமாகவேநான் நின்றுதவிசெய்திடுவேன்

அழைப்புமறைப்புடனே ஆரூடமஞ்சனமாம்
பிழைப்புள்ளவித்தைகட்குப் பின்சென்றுநின்றிடுவேன்

அங்கங்கேபூதலத்தில் அவரவர்கள்பாஷையிலே
இங்கிதமாய்க்கட்டிவைத்தேன் என்னுடையபேய்க்கூட்டம்

எங்குமிருந்தெனக்கே ஏவல்செய்துகாரியத்தை
பங்குவிதம்போலப் பார்ப்பார்கள்நிச்சயமே

சந்தேகமில்லையிது தப்பாதுசத்தியந்தான்
எந்தனைத்தான்விட்டுவிடு எரிநரகிற்புக்கிடவே

என்றுபசாசுசொல்ல ஏந்திழையாங்கன்னியின்னும்
நின்றுமிதித்தேகேட்பாள் நேருடனேபின்னமொன்று

சருவேசுவரனுடைய சத்தியவேதத்தோரின்
துறவறத்தையேகுலைத்துச் சூதுவினைசெய்வானேன்

பாவந்தனைவருத்திப் பரம்பொருளுக்காகாமல்
சாவானபாவமதில் தான்வருத்தும்வாறேது

என்றுபசாசைக்கேட்க இசைந்துரைக்கும்பேயதுதான்
ஒன்றுமில்லாக்காலம் உலகந்தனைப்படைத்த

ஏகசருவேசுவரனார் என்னுடனேமற்றவரை
வாகுபெறவேபடைத்து வைத்தார்பாகதியில்

ஆண்டவருக்காகாத ஆங்காரந்தானினைந்தேன்
நீண்டபெருந்தீநரகை நீள்புவியிலுண்டாக்கி

தள்ளிவிட்டாரெந்தனைத்தான் தற்பரனுக்காகாமல்
ஒள்ளியதோர்மோட்சமதில் உயர்ந்ததலம்விட்டிழுந்து

விழுந்தபடியால்நரகில் வேகமானமுற்றெழுந்து
இழந்தபதிமோட்சமதி லேறவொட்டாதபடி

சகலமனுவோர்களையுந் தணியாமற்கண்ணிவைப்பேன்
புகலரியசத்தியத்தைப் புறக்கணித்துப்போனவர்க்கும்
எல்லார்க்குங்கண்ணிவைத்து எந்தனுடனேநரகில்
வல்லகொடும்பாடுபட வைத்தவரைத்தான்வதைப்பேன்
மட்டில்லாத்தீநரகின் வளர்பெரியஆக்கினைகள்
தொட்டறியவென்வாக்கால் தொடுத்துரைக்கக்கூடாது
ஆனந்தமோட்சமதை அடைவோர்கள்கொஞ்சம்தாம்
ஈனமுறுந்தீநரகில் எல்லவருமேவருவார்
இனிவேறொன்றில்லையம்மா யானுனக்குச்சொல்வதுதான்
கனிசேர்மொழியாளே கன்னியேமின்னொளியே
மண்டியெழுந்தீநரகில் மருண்டுருண்டேவிழவே
புண்டரீகப்பொற்பதத்தைப் பூங்கொடியேவிட்டிடென்று
அழுதேயலகை அபயம் அபயமென்று
தொழுதுநமஸ்கரித்துத் தோகையரேநானினிமேல்
உன்பேரைக்கேட்டால் ஒருக்காலும்மானிடரைத்
துன்மார்க்கமாய்த்தொடரேன் சொல்லரியதீமைசெய்யேன்
பொழுதுவிடியுதம்மா பொங்கழலில்யான்போக
எழுதரியபொற்பதத்தை யேந்திழையேவாங்குமென
பூங்கொடியுந்தன்பதத்தைப் பூதமதைவிட்டெடுக்க
வேங்கையெனவேந்தன் வீணுயெனக்கெடுத்தான்
என்றுசொல்லிச்சீறி யெழுந்துதுள்ளிமெய்நடுங்கி •
அன்றுசிறையைவிடுத்து அழல்மேனிமீதே
கெந்தகநாற்றங்கிளம்பக் கீழ்நெருப்புகள்புகைய
அந்தரத்தின்மாட்டெழும்பி அழல்நரகில்வீழ்ந்ததுவே
சூரத்தனமுடைய தூயகன்னிமாதவத்தாள்
வீரத்தனத்துடனே வென்றுள்பசாசுதனை
சிலுவைவரைந்துகொண்டு திருச்சிலுவைநாயகனைப்
பலமுடனேதான்துதித்துப் பரமகிருபையதை
வேண்டல்செய்துகொண்டுநின்ற விதிமுறையைப்போது
நீண்டசத்தியவேதமதில் நிலைத்தோரேகேட்டருளும்

## போற்றிமாலை.

### விருத்தம்

நித்தியபொருளேபோற்றி நீதிகாரணனேபோற்றி
சத்தியபரமவேதத் தந்தையேபோற்றிபோற்றி
கத்தனாய்த்தானாய்நின்ற கருணைவாருதியேபோற்றி
முத்தியாய்நிறைந்தஞான முதல்வனேபோற்றிபோற்றி

அற்புதப்பொருளேபோற்றி அனாதியாய்நின்றாய்போற்றி
சிற்பரவடிவாய்வந்த தேவசற்குருவேபோற்றி
சொற்பெருந்தவத்தோர்தேடித் துதித்திடும்பரனேபோற்றி
கற்பருந்தவத்தைக்காக்கும் கடவுளேபோற்றிபோற்றி

சடமுடற்கைகாலில்லாச் சத்தியசொரூபாபோற்றி
அடியொடுமுடிவில்லாத அரூபமானவனேபோற்றி
வடிவில்லாஞானரூப வஸ்துவாய்நின்றாய்போற்றி
படிமிசைவந்தேயெம்மைப் பாதுகாத்தவனேபோற்றி

வெளியொளிகடந்தஞான வேதபோதகனேபோற்றி
அளவிலாச்சகலவஸ்தும் அருளுமுன்னிருந்தாய்போற்றி
பழமையாய்ச்சராசரங்கள் படைத்தவாசருளேபோற்றி
ஒழிவில்லாவொளியேபோற்றி உடையவாபோற்றிபோற்றி

எங்குமாய்நிறைந்தஞானம் இலங்கியவிமலாபோற்றி
மங்குமாபுவியோர்க்காக மனுவுருவெடுத்தாய்போற்றி
தங்கியமோட்சவாசல் தன்னையேதிறந்தாய்போற்றி
இங்கெனையிரங்கிக்காத்த இறையவாபோற்றிபோற்றி

அனைத்துயிரமைத்ததேவ ஆதிகாரணனேபோற்றி
எனைத்தெரிந்தடிமையாய்க்கொண் டிரட்சைசெய்இறைவாபோற்றி
உனைத்தெரிந்துணர்ந்துபோற்று முறவுள்ளோர்க்குறவேபோற்றி
மனத்திடம்பெலன்கள்தந்த வஸ்துவேபோற்றிபோற்றி

திறித்துவமொன்றாய்நின்ற தெய்வீகபொருளேபோற்றி
நிறத்தொடுங்குணங்களில்லா நின்றதற்பரனேபோற்றி
குறித்தெனைத்தெரிந்துமோட்சங் கொடுங்குஞ்செங்கோலாபோற்றி
அறத்துடன்வளரவென்னை ஆண்டவாபோற்றிபோற்றி

பாவியாம்மனுவோர்க்காகப் பரகதிதனிலேநின்று
ஆவியைமனுவோர்கோல வகத்தினிலணிந்தசட்டை
மேவியவுடுப்பைநாடி மேதினிதனிலேயியத்
தேவசற்குருவாய்வந்த தேவனேபோற்றிபோற்றி

எந்தனைத்தெரிந்துமோட்ச எல்லைதந்திடுவாய்போற்றி
உந்தனுள்ளுருகிப்பாடு உவந்துபட்டிட்டாய்போற்றி
தந்தையேசருவலோகந் தாங்கியகரனேபோற்றி
அந்தமுமுடிவுமில்லா அமலனேபோற்றிபோற்றி

வரவணைத்திலங்குநன்மை வானமுதருள்வாய்போற்றி
திரமுறுபசாசைவெல்லத் திறமருளிறைவாபோற்றி
மரணத்திலெனைக்கைதூக்கி வான்கதிதருவாய்போற்றி
சரணத்தைத்தருவாய்போற்றி தயாபராபோற்றிபோற்றி

பத்தருக்குறவேபோற்றி பரகதிவாழ்வேபோற்றி
நத்தினர்துணையேபோற்றி நன்மையின்கடலேபோற்றி
உத்தமப்பொருளேபோற்றி உம்பர்நாயகனேபோற்றி
செத்துமீண்டுயிர்த்தவல்ல தேவனேபோற்றிபோற்றி

## மரிகருதைத் தீயால்சுடல்.

### அம்மானை.

வெய்யசிறைச்சாலைதன்னில் மெல்லிமரிகருதாள்
செய்யசருவேசுவரனைத் தியானமதிலுணர்ந்து
வேண்டல்செய்துகொண்டிருக்கும் வேளைதனில்விண்திறந்து
ஆண்டவர்தம்ஏவலினுல் அழகியதோர்வானவனும்
சிறைக்கூடமானதிலே சீராகவேபுகுந்து
நறைக்குழல்சேர்கன்னியர்க்கு நயமானதேறுதலைச்
சொல்லியவள்மேனியெங்குஞ் சோரிரத்தக்காயமதை
எல்லாங்குணமாக்கி இலங்கவெகுநேர்த்தியதாய்த்
தழும்புசற்றுமில்லாமல் தையல்நல்லாள்மேனிமுற்றும்
வளந்திகழவேயாற்றி வானப்பிரகாசமது
எங்குஞ்சிறந்தே இலங்கிடவேவானேன்
துங்கபரமோட்சமதில் துலங்கவெழுந்தனரே
பொழுதுவிடிந்தபின்பு பூவைகன்னிமாதவத்தை
முழுதுமதிகெட்டவஞ்சன் மூடனெலிவோரும்
சேவகரைத்தானழைத்துச் சிறைக்கூடமானதிலே
தாவிப்பிடித்திழுத்துத் தான்கூட்டிவாருமெனச்
சொன்னமொழிகேட்டுத் துட்டரெனுஞ்சேவகரும்
கன்னிமடக்கொடியைக் கலங்கமலங்கவைது
பிடரியிலேகைகொடுத்துப் பேதமுறவேவலுவாய்
அடிமேலடியடித்து அண்ணலொலிவோரின்முன்னே
கொண்டுபோய்விட்டார்கள் கொற்றவனுங்கண்சிவந்து
தண்டுமிண்டுபேசுகின்ற சண்டாளக்கள்ளியிவள்
நிஷ்டூரிகட்டுமெட்டாய் நிற்குநிலையைப்பாரும்
நட்டணைகள்பேசுகின்ற நாகரிகக்கள்ளியிவள்
பாரீரிவள்தனைப்போல் பாருலகிற்பெண்களுண்டோ
பூராயக்கள்ளியிவள் பொல்லாக்கொடுஞ்சூரி
என்றேயொலிவோரும் ஏந்திழையாளைப்பார்த்துத்
துன்றிவெகுவாய்ச்சினந்து தொனியெழவேயுரைப்பான்
கெலிப்பேதுஉந்தனுக்குக் கீர்த்திகெட்டபாதகிநீ
சலிப்பாகவேயுடலைத் தான்வதைப்பதேதென்றான்

அப்போதுகன்னிமின்னாள் அவனைமுகம்பார்த்துரைப்பாள்
ஒப்பரியமன்னா உனக்குவெட்கந்தானிலையோ
சனியன்பிடித்ததுமெய் சாற்றுமுங்கள்தேவரைத்தான்
இனியுன்னையுஞ்சனியன் எய்திப்பிடித்ததுண்டு
புத்திமயங்கிமன்னா போதவெறியெடுத்து
தத்திப்பிதற்றுகிறீர் தப்பறைகளாயெனக்கு
எத்தனையோ ஆக்கினைகள் இட்டாலுமுள்ளாவேன்
புத்தியில்லாமலென்னைப் பொருந்தாதமாற்றமதாய்க்
குத்திரங்கள்பேசுகிறாய் கொற்றவனேயெண்ணாமல்
மெத்தமனம்நோகுதுந்தன் வேந்தாண்மைமாபெரிதோ
துறவிக்குவேந்தன் துரும்பென்றறியாயோ
நெறியற்றபேச்சுனக்கேன் நீதிநிரையில்லாமல்
பெண்டுபிடிக்கின்ற பிறக்கணிக்குந்தேவர்களை
கண்டறியாத்தேவரென்று கைகூப்பித்தெண்டனிட்டு
பூசைநைவேத்தியங்கள் புகழ்ச்சியுடன்செய்ததற்கு
நேசபக்தனாகவும்நீ நின்றுதொழுவதென்ன
ஆறுநெருப்பில் அழியாதகட்டைகளாய்
நீறாகவெந்து நிலைக்கும்பசாசுகளால்
பேருளியாகவும்நீ பேருலகிலேயுமன்று
தூறாகவென்னையும் ,துணிந்துகற்பைத்தான்கெடுக்க
நினைத்தாயென்கற்பை நெகிழவிடுவேனென்று
மனதிலெண்ணவேண்டாங்காண் மன்னவனேயுன்வாழ்வை
அரைச்சணத்திலேயழித்து அலகைகளுக்குள்ளாக்கி
வருத்தமுறத்தீநரகில் வளர்த்துவர்கள்திட்டமிது
வீறானதேவர்கள்செய் விநோதமுள்ளலீலைகளால்
மாறாதுநாற்றம் மலிநரகிலெஞ்ஞான்றும்
கூறானபேய்களுக்குக் கொடுப்பருனைத்திட்டமிது
ஆறுநெருப்பி லமுழ்ந்தவைப்பார்தப்பாது
பலஸ்திரிகள்கூத்தாடப் பார்த்தஉன்னையென்னமலன்
அலக்கழியத்தீநரகில் அமிழ்த்திடுவார்திட்டமிது
கோபுரங்கள்கட்டிக் குருக்கள்நம்பியார்பிழைக்க
மாபலிகள்பூசைபண்ணி வணங்குகிறாயென்னமலன்
உன்னைப்பலிகொடுப்பார் ஊழிநரகமதில்
சின்னபின்னமாயறுக்கச் செய்திடுவார்திட்டமிது
சொன்னேனறிந்துகொள்வாய் தொல்புவியிலெந்நாளும்
மன்னாநீசெய்ததவம் மாதவமோபாதகமாம்

நட்டாற்றிலேபயிரை நட்டுவிதைத்ததொக்கும்
கெட்டவழிநீபுரிந்த கேடுடையசெய்கைகள்தான்

நிமையிலழிந்துவிடும் நிலைநிற்கமாட்டாது
சுமைசுமக்கவேபாராய் தோன்றுமினிமேற்றான்

ஐயோஉனக்குவரும் ஆக்கினைகளானதுதான்
பொய்யெனவேயெண்ணுகிறாய் புத்திதனில்தேர்ந்தறிவாய்

அரசர்துரைநீதிமுறை ஆனவழிப்பாடுடனே
வரிசைபெறவேநடத்தி வந்ததுண்டோமன்னவனே

தெய்வநெறிபோற்கோல் செலுத்தியரசாண்டவனே
வையமெங்குங்காப்பாற்றி வளர்க்கின்றதாதாவாம்

நீநடந்துவாழு நிலையுமுன்தேவர்களாம்
பேய்கள்நடந்துவரும் பெருங்கதையுங்கேளுமன்னா

ஆதிகர்த்தன்தானமைத்த அவனிமனுவோர்களைத்தான்
தீதுசெய்துபேய்களென்னுந் தீங்கடைந்ததேவதைகள்

கெடுத்துணையேதந்திரத்தால் கெதியேயடையாமல்
தொடுத்துவலைகட்டிவெகு சூழ்ச்சியுடன்யாவருக்கும்

ஆவேசமேறவைத்து அருமதியைத்தான்கெடுத்து
தேவாதிதேவனென்று செய்கிரிகையானவெல்லாம்

செய்விக்கப்பண்ணிவெகு தித்திப்புந்தில்லுமுல்லும்
கைவல்யமானபல கட்டுரையுந்தானுரைத்து

நடக்குதுகாணுன்தேவர் நஞ்சுண்ணுங்கூடலென்ற
அடக்கமுள்ளவூர்தனிலே அறிவிலான்கோவிலுண்டு

அந்தப்பெருங்கோவி லருகிலோர்வாய்க்காலாம்
அந்திசந்திதப்பாமல் அவரவர்கழித்துவிடும்

மலத்தைச்சிறுவரில்லா மலடிவெகுபேர்கள்வந்து
பெலத்தபுழுவோடருந்திற் பிள்ளையுண் டென்றெண்ணியவர்

நம்பியந்தக்கோயில்தனை நமஸ்கரித்துப்பூசைபலி
தம்பமறவேபுரிந்து சத்திமயமென்றுசொல்வர்

இந்தவிதமாக எத்திப்பிழைக்குமந்த
நிந்தைப்பசாசுகளை நீதொழுதுபோற்றுவகை

என்னமதிகாணும் யார்செய்வாரிந்தமுறை
மன்னவனேயுன்தேவர் வன்னரகப்பேய்களென்று

சாற்றுதற்குவேறுமொரு சாட்சிசொல்லவேண்டிடுமோ
ஏற்றுமுன்தேவரெல்லா மெரிநரகக்கூளிகளே

உற்றகுருமார்களென்றே ஓதுகிறீருன்குருக்கள்
சித்துவித்துக்காரரென்று தெரியாமல்உண்மையென்று

பாதங்கழுவிப் பறித்தபுட்பமேசாத்தி
நீதமிதுவென்று நினைத்தவரைத்தெண்டனிட்டு

தண்டிகையிலேற்றிச் சரணஞ்சரணமென்று
கொண்டுவலஞ்சுற்றிக் கும்பிடுவீர்நம்பிநிதம்

தவத்தோர்களென்றுசொல்லுஞ் சந்நியாசியாயிருந்தும்
அவத்தமுறுஞ்சூனியத்தால் ஆனசித்துவித்தைபல

குறளிபில்லிவேள்விமுதல் குத்துவெட்டுநாக்கறுப்பு
பிரளயம்போற்செய்திடுவார் பேருலகிலுன்குருக்கள்

அரியகடுக்காய்களுண்டு ஆகாரம்வாய்வையுண்டு
திரிவோரைத்தெண்டனிட்டுச் செகத்தில்பெரியரென்பீர்

நஞ்சுகள்ளுச்சாராயம் நாடியுண்ணுமூடரெனும்
வஞ்சநிஷ்டூரர்தம்மை மாபெரியோரென்றேத்தி

அறிவுபுத்திநன்மனதும் அன்றளித்ததேவரென்பீர்
சருவேசநிர்ணயத்தைத் தானறியமாட்டாய்நீ

என்றுசொன்னபோதொலிவோர் எரிந்துசினம்பொங்கியவன்
நின்றுகொண்டுநம்மையிந்த நிஷ்டூரியெண்ணாமல்

சொல்லாமற்சொல்லுகிறாள் சூதுகொண்டியாவரையும்
வெல்லாமல்வெல்லுகிறாள் வேதமதமானதெல்லாம்

கிண்டிக்கிளறிவிட்டாள் கர்வமுள்ளகன்னியிவள்
விண்டுரையாயெல்லவர்க்கும் வெளிப்படுத்திச்சொல்லுகிறாள்

என்றொலிவோர்கோபமுற்று ஏந்திழையாங்கன்னிகையைத்
துன்றிவெகுவாய்ச்சீறிச் சொல்லுவானப்பொழுது

இப்படியேயெங்கள்மதத் திருக்குமிரகசியத்தைச்
செப்பமுடனெல்லவர்க்குந் தெரிந்துசொல்லவேயிவளே

என்சமுகத்தேயழைத்து ஏழைமதியானேனே
வன்மவயிராக்யமுள்ள மாநீலிகாணுமிவள்

கள்ளிக்கொடுஞ்சூரி கதித்தவித்தைக்காரியிவள்
விள்ளரியநிஷ்டூரி விருனவாய்மதத்தி

சமயமதசாஸ்திரங்கள் தத்துவமும்பேசுகிறாள்
நிமையில்குடிகெடுப்பாள் நீலியிவளாகாது

என்றொலிவோர்சொல்லவுந்தான் ஏந்திழையாள்தானவனை
நன்றுபடப்பார்த்துரைப்பாள் நானுரைக்கக்கேளுமன்னா

கரைகாணாதேயிருக்குங் கடல்நீர்தனைத்துரும்பால்
உரமாகவேகலக்க உண்டோஒருவனுந்தான்

பசப்பிமொழிபேசாதே பாருலகிலுங்கள்மதம்
நிசப்பேச்சோதேவநிலை நிலையோவதுகளுந்தான்

ஒழுங்குமுறைச்சற்றுமில்லை ஊழியெரிநரகுள்
அழுந்தியிருக்கும் அவையென்றறிந்துகொள்ளும்

பகட்டாதேயென்னைப் பருவமற்றபெண்ணெனவே
புகட்டாதேயுன்பேச்சைப் புத்தியென்றுநான்கேட்க

அதட்டாதேயென்னையும்நீ ஆக்கினைக்குள்ளாயிருப்பேன்
பதட்டமனங்கொண்டெனைநீ பகர்கொடுமையென்னசெயும்

இரும்பையடித்தொடித்தால் இளகிப்பொருந்துமது
தரும்வருத்தத்தாலே தைரியமுண்டாங்காண்

இப்படியேகன்னிசொல்ல ஏந்தமெலாலிவோரும்
வெப்பமுடனெழுந்து வெகுண்டுறுக்கிப்பற்கடித்து

ஆகங்கொதித்ததட்டி அன்னமின்னாரைப்பார்த்துச்
சாகத்துணிந்தபொல்லாச் சண்டாளக்கள்ளியென்று

வேகத்துடனருகில் மேவுகின்றோரைப்பார்த்து
காவல்மதியூகிபடைக் கர்த்தருடன்சேர்ந்தவரே

பாரீரிவள்தனைப்போல் பாருலகில்பெண்ணுமுண்டோ
பூராயக்கள்ளியிவள் பொல்லாதுசிஷ்டேரி

வடித்தெடுத்தஅட்சரத்தின் வார்த்தைகற்றவிஸ்தாரி
முடிந்தமுடிச்சவிழ்க்க முடியாதொருவருக்கும்
கல்லையுருக்கிக் கரைத்துவடிகொண்டாலும்
மெல்லியிவள்மனதை விழைத்துருக்கக்கூடாது

தாடாண்மையோடுநின்று சகலரையும்வெற்றிகொண்டு
கூடாதொருவருக்குங் குவலயத்தில்மாண்டிடுவேன்
என்றுதுணிந்தாளெனவே ஏந்திழையைப்பார்த்துரைப்பான்
மன்றுலகிலுன்னைவெட்டி மாறுபடக்கூறுசெய்து

பருந்துநரிநாய்களுக்கும் பசிதீரவேகொடுத்து
விருந்திடுவேனிப்பொழுது வெட்டியிருதுண்டமதாய்
செய்வேனிதையறிந்து தேறிமனமீறாமல்
மொய்குழலேமைவிழியே முற்றணியேபற்றுதலாய்

நீவணங்குந்தேவனையும் நின்கற்புறுதவசாம்
மாவிரதமுந்நீக்கி மனதுடனேநீயிணங்கி
மையலுடனேவாழ்ந்து வளமையுடனேயிருக்க
துய்யகுயிலேநான் சொன்னேன்மறுத்துவிடு

என்னுடையதேவர்களை இப்போதுபூசைபண்ணு
அன்னமேமின்னே அழகேஅழகுருவே

என்றுரைலிவோரிப்படியே யேந்திழைக்குத்தாழ்ந்துரைக்க
நின்றுகன்னியேதுசொல்வாள் நெறித்துவெறித்துப்பார்த்து

ஆகொடியபாதகனே அசடனெலிவோரேகேள்
மாகடிதாய்நின்றுமிக வம்புகள்நீபேசுகிறாய்

மண்ணுலகையாளுகின்ற மன்னவனாய்நீயிருந்தும்
என்னுவெனோநானுனைத்தான் என்றனக்குநீதிகனம்

உன்னுடையாசாங்கம் உனக்குப்பெரியதுவே
என்னுடையாசாங்கம் என்தபசுகற்புநிலை

உன்னுடையராச்சியந்தான் ஊழிநரகத்தலந்தான்
என்னுடையராச்சியந்தான் ஈறில்லாமோக்ஷமதே

அருந்தவத்தோரானவர்க்கும் அரசனெருதிரணம்
சிறந்தகற்பைவிட்டுவிடச் செப்புவையோவிப்பொழுது

என்னைவணங்கென்றாயே யேகசருவேசுவரனார்
உன்னையழற்றள்ளிடுவார் உண்மையிதுதப்பாது

அறியாமற்சொல்லிவிட்டாய் ஆகாத்திரமாய்நீ
வெறியேறிப்பித்தமுற்று மிஞ்சுமொழிசொல்லிவிட்டாய்

ஐயோஓலிவோரே அழல்நரகப்பேய்களுடன்
மெய்யாகச்சொல்லுகிறேன் வேவாயடிநரகில்

உன்மரணவேளையிலே உன்னுயிரைத்தானெடுத்து
வன்னரகிலேகொடுபோய் வாதைசெய்யும்போதறிவாய்

நீசப்பசாசென்னும் நீவணங்குந்தேவனுக்குப்
பூசைபலியிட்டிடுவாய் புத்தியில்லையோஉனக்கு

என்றுகன்னிசொன்னவுடன் இடும்பனெலிவோருரைப்பான்
கன்றிமனம்வெட்கமுறக் கன்னிமின்னாரைப்பார்த்து

எந்தவிதஞ்சொன்னாலும் இவளைவெல்லக்கூடாது
நந்தம்பதியிலுள்ளோர் நாடிநன்றாய்ப்பார்த்திருக்க

நிஷ்டூரக்கள்ளிவஞ்ச நீலியிவள்தானுடுத்தும்
சட்டையெல்லாந்தான்கழற்றிச் சகலமனுவோர்காண

துந்துமிகள்கட்டிநன்றாய்ச் சுடுங்கோவெனச்சீறி
சிந்தைவெகுகோபமுற்றுச் சேவகரின்கையளித்தான்

சேவகர்கூடிச்சினந்து தேன்மொழியாள்சட்டையெல்லாம்
தாவியவர்பிய்த்தெறிந்து சரீரமுழுதுந்தெரிய

கன்னித்திருவுடலைக் கயிற்றால்வரிந்துகட்டி
துன்னுஞ்சதைதெறிக்கத் துந்துமியைக்கட்டியபின்

பந்தந்தனைக்கொளுத்திப் பாவைதிருமேனியெல்லாம்
நொந்தெரியப்புண்ணாக நோக்கியவர்சுட்டனர்காண்

பொன்னரியமேனியெல்லாம் புகைந்துபற்றித்தீயெரிய
உன்னரியமாதவத்தாள் உடல்முழுதுந்தீயதனை

நிஷ்டூரரிட்டெரிக்க நெருப்பிடையில்நின்றுகன்னி
இட்டமுடன்விண்ணுலகை யேந்திழையாள்தான்பார்த்து
தாழ்ச்சியுடனேபுகழ்ந்து சருவேசுவரன்தனையே
காட்சியாற்கண்டு கருணைதனையிரந்து
வேண்டல்செய்துகொண்டுநின்ற விரதநிலையானதைத்தான்
நீண்டபுவிமாந்தர்களே நெறிமுறையைக்கேட்டருளும்

## வேண்டுதல் மயங்கிசைக்கொச்சகம்.

### கொச்சகம்.

தானுயிருக்குந்தற்பரனே சகலவுயிர்க்குந்தாபரனே
மானோர்பவத்தை யறுத்தொழிக்கும் மரிபாலகனுபுதித்தோனே
வன்னிநரகப்பேய்மதத்தை வணங்கஒலிவோர் தனக்கிணங்க
என்னை வலிமைசெய்துகன இழிவுசெய்ததறிவீரே
தேகமுழுதும்புண்ணாகச் சிதைந்து நலிந்துமெலிந்தாலும்
தாகமுடைய கற்புநிலை தவறாதிருக்கவரந்தருவீர்
அடிமேலடித்து உடல்நாண அங்கம்பதைக்கவெங்கனலாற்
சுடவே ஒலிவோரிடுந்தீர்வை துணிந்துசெய்ததறிவீரே
முன்னாள்நபுக்கன் சூளைதனில் மூன்றுவாலர்தமைக்காத்தீர்
இன்னாள் ஒலிவோர்பந்தமதால் இடுந்தீக்கனலாலெனைக்காரும்
பாரிற்சுகிக்குஞ்சுகபோகம் பகலோன்முன்பனிபோலொழியும்
நேருமுமதுபதவிசுகம் நிலைக்குமெனக்குமுயிர்த்துணையே
நிமையிலழியு முலகசெல்வம் நிலையென்றதைநானனுகாமல்
இமையவொளிசே ருமதுபதம் என்றுமறவாதருள்புரியும்
சகலவுயிர்க்குந் தாபரமே தமியாளுமதுபதஞ்சேர
மிகவுமனதிலவாவுற்றேன் மீண்டேயழையென்னாண்டவனே

## மரிகருதாளின் போதனையாற் பலர் வேதசாட்சிகளாய் மரித்தல்.

### அம்மானை:

இம்முறையாய் வேண்டல்செய்து ஏந்திழையுமந்நேரம்
அம்முறையாத்தீக்கனலில் ஆழ்ந்துநின்றமாதவத்தை
கண்டுநின்றேயெல்லோரும் கன்னிகையைப் பார்த்துரைப்பார்
வண்டாருமைவிழியே மடந்தாய்மடக்கிளியே
வயிராக்கியம்பிடித்து வன்னெருப்பில்நின்றெரிந்து
துயர்மிகுத்துவெந்துருகிச் சோர்வுபடக்காரியமேன்.
அறியாதபுத்தியிது ஆக்கினையில் நிற்பதுதான்
எரியழலில்மேனிதனை ஏனோதான்சுட்டெரித்து

ஒளிசெறியுமேனியெல்லாம் உறுசொரூபமாறிடவே
எழுதரியஉன்வடிவை இப்படிநீபோக்குவையோ

மாயக்காரக்குருக்கள் வன்னெருப்பிலிட்டுன்னைக்
காயப்படுத்துதற்கோ கற்றவித்தையோதிவைத்தார்

வேகத்துணிவதற்கோ வினயபுத்திசொல்லிவைத்தார்
சாகத்துணிவதற்கோ தவறுரைகள்சொல்லிவைத்தார்

நெஞ்சுதுணிவோவுனக்கு நெருப்புதனில்நின்றுகொண்டு
வஞ்சியரேயுன்னுடலை வாதைசெய்யக்காரியமேன்

மன்னனெலிவோருடனே மணம்புணரமாட்டேனென்று
கன்னியரே நீ நெருப்பில் கண்கலங்கிநிற்பானேன்

பரகதியின்நன்மைபெறப் பாடுபட்டுநீயிறக்க
துரோகமிகுமுன்குருக்கள் சொன்னபுத்திதானிதுவோ

என்றங்கிருந்தவர்கள் எல்லோருஞ்சொல்லிநிற்க
வென்றிமிகும் பூங்குழலாள் மேவுமுரையேதுசொல்வாள்

ஆகாதபாதகரே அற்பபுத்தியீனர்களே
சாகாமற்சாகுந் தழல்நரகப்பாதகரே

வஞ்சகரேமோக்ஷ வழியறியாதேமயங்கி
நஞ்சுமனங்கொண்டவரே நானிலத்தின் ஆசையெல்லாம்

கொண்டுமயங்கித்திரியும் குருட்டுமனிதர்களே
சண்டிமுண்டியுங்கள்புத்தி தானெங்குமேற்காது

என்றுமரிகருதாள் இப்படியேசொன்னதைக்கேட்
டன்றெலிவோர்கோபமுற்று அன்னமின்னாரைப்பார்த்து

இன்னமுந்தான் ஆங்காரம் இறுந்திலையேயென்றுசொல்லி
துன்னுகின்றசேவகரைச் சொல்லியழைத்தேதுரைப்பான்

மாறுபடவெங்கனலில் வளர்மேனிவெந்தவளை
கூறுகொடுங்கொப்பறையில் குளிர்ந்தஜலத்தைநிரப்பி

வெப்பமுடனவளை விரைவாகவேயெடுத்து
தப்பறவேநீர்போடும் தையலுடலானதுவும்

ஈடுபடத்தாளெடுங்கி எலும்புதசைவேறாய்க்
கூடுவிட்டேஆவி குலையுந்தனையுமென்றான்

சேவகருமன்னனன்று செப்புமொழிக்கொப்பிவந்து
பூவையரைத்தான்பிடித்துப் புன்மனத்தோடேயிழுத்துக்
குளிர்ந்ததண்ணீர்கொப்பறையில் கோதையரைப்போட்டனர்காண்
அழுந்திநடுநடுங்கி அரியதவமாதவத்தாள்

சருவேசுவரனுடைய தன்னருளினல்மேனி
மருவதொன்றுமில்லா மாதவஞ்சேர்கன்னியரும்

தண்ணீரிலேமூழ்கித் தானெழுந்தவாறதுபோல்
பெண்ணாளெழுந்திருந்தாள் பேரின்பச்சோதியுடன்

அன்னவத்தையத்தலத்தில் அனைவோருங்கண்டதினால்
இன்னவம்போல்பூதலத்தில் எவ்விடத்துங்காணோமென்று

கண்டவரும்பார்த்தவரும் காட்சியிதுவென்றுசொல்லி
பண்டுடையநீதி பரன்வேதமுண்மையென்று

உண்ணினைந்துவேத வுறுதிகொண்டுதாங்களெல்லாம்
வண்மையுள்ளதேவபரன் வஸ்துநிலைதாமறிந்து

சாகத்துணிந்துகர்த்தன் தன்னருளைத்தான்பெறவே
ஆகமுறுதிகொண்டு அண்ணல்சருவேசுவரர்க்காய்

இகல்புரியும்பூவுலக இன்பசுகம்விட்டொழிய
சகலவிதவாக்கினைக்கும் தான்துணிந்துதேறியவர்

மரிகருதாள்தான்வணங்கும் வல்லசருவேசுவரனை
பிரியமுடனேவணங்கிப் பேறுபலனடைவோம்

நம்முடையதேவர்கள்தான் நரகத்தின்பேயெனவே
செம்மைவழிகாட்டும் திரஞ்சேர்மரிகருதாள்

வேதவழியேநடந்து மேலானபாக்கியத்தின்
நாதனைநாமெல்லோரும் நமஸ்கரிப்போமென்றுசொல்லி

உன்னியனைவோரும் உவந்தொருமித்தோர்மனதாய்
மன்னுமரிகருதாள் மறைநெறியையுள்ளிருத்தி

வல்லமரிகருதாள் வார்த்தைதனைக்கேட்டுறுதி
நல்லமனதோடிருந்து நாதனுக்காய்ப்பாடுபட

சொன்னார்காணப்பொழுது துணிந்தொலிவோர்தன்னுடனே
மன்னனொலிவோரை மண்டலாதீசுரனே

ஞானவுபதேசமதில் நாதனருள்மோக்ஷமதற்
கானமறையதிலே அனைவோரும்உள்ளானோம்

என்றுசொல்லவெல்லோரும் ஏந்தலொலிவோர்சினந்து
இன்றெங்தேவைப்பழித்து இவர்களுமவ்வேதமதில்

போனார்களையோகோ பொல்லாதவர்களென்றும்
மாறுய்வருகுதென்றும் மன்னனொலிவோர்சலித்து

மாயப்பொடிக்காரி மருந்துகள்ளியுங்களுக்கு
காயக்கவித்தையெல்லாம் காட்டினளோவென்செய்வேன்

தான்கெட்டதல்லாமல் சார்ந்தவரையுங்கெடுத்து
கூன்படுத்திப்போட்டாளோ கொலைக்கஞ்சாவித்தையெல்லாம்

படித்துக்கொடுத்தாளோ பாதகரேநீங்களுந்தான்
முடித்தவலைக்குள்ளாய் முடிந்தீரோதத்தளித்து

மாண்டிறக்கப்போறீரென்று மன்னனொலிவோரும்
பூண்டவலுவீரர்களில் புலிபோன்றவீரரெனும்
தலையானசேவகரைத் தானழைத்தங்கேதுசொல்வான்
கலைஞானக்கன்னிகள்ளி கற்பனைக்குள்ளாயினர்காண்
ஆனதினாலிக்கொடிய ஆகடியக்காரர்களை
ஈனமுறவேகொடுபோய் என்சமுகத்தில்லாமல்
எல்லார்தலைகளையும் இப்பொழுதேவெட்டிடுவீர்
பொல்லாப்புடையவர்கள் பூமியினிலாகாது
என்றொலிவோர்தான்புகன்று ஏவிவிட்டான்சேவகரை
நன்றெனவேகேட்டவுடன் நவிலரியசேவகரும்
தள்ளிக்கொடுபோனார் சகலரையுமக்கணத்தில்
உள்ளம்பிரியமுற்று ஒளிசெறியும்வானுலகை
பார்த்துநம்பிக்கைபய பத்திவிசுவாசமுடன்
பூர்த்திசொல்லித்தோத்திரங்கள் புகன்றுநடந்தனரே

வேண்டுதல்—கட்டளைக்கலிப்பா.

திங்கள்வானுலகும்புவியும்பல செந்துமாந்தரையும்படைத்தாண்டவா
பங்கமாகியபாவவிருட்டினில்பட்டுழன்றறிவற்றிருந்தோமினி
துங்கவான்கதிபெற்றுநின்பாதமே தோத்திரித்துநமஸ்கரித்தேத்துவோம்
எங்கண்மீதில் அருந்தயைகாட்டியே இன்றிரக்ஷியும்யேசுதெய்வீகனே.

ஞானமின்றியஞ்ஞானமதானதை நாளுநம்பிநடந்தோமினிப்பிர
தானமென்றுமைத்தாசர்களெண்ணியே தஞ்சமென்றடைந்தோமெ
மையாண்டருள்
பானமுண்டதிநன்னயமேபெறப் பத்தியுற்றமனதைவருத்தியே
வானராச்சியபொக்கிஷமானதில் வைத்துரக்ஷியும்யேசுதெய்வீகனே.

அம்மானை.

இப்படியேயெல்லவரும் ஏற்றரியபக்திகொண்டு
செப்பமுடன்தோத்திரங்கள் செய்துபுகழ்ந்தேவாழ்த்தி
மங்களங்கள்சொல்லி மனதிற்பிரியமுற்று
எங்கள்உயிர்க்கிறையாம் ஏகாதிகாரணனே
வானாதிநாயகனே மனத்துறுதிதாருமென்று
போனார்கள்மங்களங்கள் புகழ்ந்துபுகழ்ந்தேவாழ்த்தி
துறந்தவர்களெல்லவரும் சோதியேநின்றனக்காய்
இறந்துகதியுற் றிருப்போஞ்சரணமதில்
ஐயோவின்னாள்வரைக்கும் அரசனுடனேகூடி
மெய்யாகவேநாங்கள் விழிகுருடாயிருந்தோம்
எம்மைத்தெரிந்துகொண்டீர் எம்யேசுநாயகரே
உம்முடையராச்சியத்தில் உமைத்தெரிசித்தேயிருப்போம்

என்றிரந்துமன்றுடி இனியில்லாத்தோத்திரங்கள்
ஒன்றுபடவேயுரைத்து ஒளிர்ஞானக்கண் திறந்து

மாட்சிநிலைகொண்டதிரு வானுலகமோட்சமதில்
ஆட்சியுடன்போவோமென் றனைவோருமுண்மகிழ்ந்து

தாழ்ச்சியுடனே தலைகுனிந்துபாடுபட்டு
காட்சிபெறுமோக்ஷதலங் காணமிகஆசையுற்று

போனார்கள்வீரருடன் பொலிகளத்திலங்நேரம்
தானனநீதிச் சருவாதிகாரணனை

வேண்டல்செய்தெழுந்தாள் மீதிருந்துவானேனை
நீண்டவெகுதோத்திரங்கள் நினைத்துருகிவேண்டலுற்றார்

புலம்பல்

தேவதிரீத்துவமேபுகழ் செறிஞானசத்தியமே
சிறியோர்சடத்ததிவாதைகள் சேர்ந்தாலுமுட்டேறி
சீவன்றனிற்பற்றற்றிந்தச் செகத்தாசைகடவிர்த்தே
திடமாகியெம்மனதானவை தேறவருள்கூராய்
பாவலகைசோதனைக்குட் பட்டிட்டாமறகாத்தே
பரனேதயாகரனேமிக்க வரனேசர்வேசுரனே
மாவலுவுற்றுன்றயவை மாபாவிகள்மேல்வைப்பாய்
வையாவிடிலுய்யோமேயே சையாவருட்செய்யே

அம்மானை

இத்தொகையோடேபிருந்து ஏகசருவேசுவரனை
முற்றுமவர்வேண்டி முடிந்தபின்னர்எல்லோரும்

தலைகுனிந்துநின்றார்கள் சத்தியவேதந்தனக்காய்
ஒலிவோரனுப்புகின்ற உற்றகொலைக்காரர்கள்தாம்

சிங்கஞ்சினந்தெழுந்து செம்மறிகள்மேல்விழும்போல்
அங்கம்புரண்டுருள அனைவோர்தலைகளையும்

வெட்டினார்செங்குருதி வெள்ளம்பரந்தோட
மட்டில்லாமோக்ஷமதில் மடிந்தோரின்ஆத்துமங்கள்

நீங்கிப்புவியைவிட்டு நேயமுடன்செல்லுமுன்னம்
தாங்கியெடுத்தேகரத்தால் தயவுடனேந்திக்கொடுபோய்

வான்தூதரெல்லோரும் மாக்ஷிபெற்றோராத்துமத்தை
தேன்றூங்கும்பூங்குழலார் சேர்த்தணைத்துச்சோபனங்கள்

பாடிப்பரன்கதியில் பாங்குடனேகொண்டுசென்று
நீடூழிகாலமட்டும் நீர்வாழ்வீரென்றுரைத்தார்

ஊழிமுடிவில்லாத ஒப்பரியநற்கதியில்
வாழியமுதுண்டுநிதம் வாழ்வீர்களென்றுரைத்தார்

ஆதியந்தமில்லாத ஆனந்தமோக்ஷமதில்
சோதிப்பிரமையுடன் சொல்லரியஆத்துமங்கள்

பத்திவைத்துமோக்ஷப் பதவிபெறவேணுமென்று
புத்தியுற்றுப்பாடுபட்டீர் பொன்னுலகிலேவாரும்

கன்னிமரிகருதாள் சுற்பனையின்சொற்படியே
இன்னிலத்திற்பாடுபட்டீர் ஏகனருகில்வாரும்

சங்கைவெகுமானமற்றுத் தாய்தமரும்ஊருமற்று
மங்கையர்கள்தங்கள்தங்கள் மனிதர்மேலோசைவிட்டுத்

துணிந்தீர்தலைகொடுக்கச் சோதிப்பராபரற்காய்
அணிந்தபத்திகொண்டநல்ல ஆத்துமங்களேவாரும்

வருகவருகநல்ல வானகத்தின்செல்வமுற
வருகவருகவொளிர் மதிசெறியுமோக்ஷமதில்

வருகசருவேசுவரனை வந்துமுகாமுகமாய்
தரிசனைசெய்யிற்பானுர் தம்முடையதேவநன்மை

பெற்றிடுவீர்மோட்சமதில் பேரின்பநன்மைதனை
உற்றிடுவீர்மேல்முடியும் ஊழியுள்ளகாலமட்டும்

என்றுசொல்லிவான்தூதர் இயல்பாகவேபாடி
நன்றுபெறவேவாழ்த்தி நற்றவத்தோராத்துமத்தை

சேர்த்தார்கள்மோக்ஷமதில் சீர்சிறந்தோருக்களித்துப்
போற்றரியதேவபரன் பொற்கழற்கீழ்வைத்தனரே

## மரிகருதாளின் சிரசைக்கொய்தலும்
## மோக்ஷமுடி பெறலும்

### அம்மானை

இத்தகையானவெல்லாம் இன்பாய்நடந்ததன்பின்
கொற்றவொலிவோரரசன் கோதைமரிகருதை

எண்ணிமனஞ்சலித்து யேறிடிபோலேதுரைப்பான்
கன்னிமனம்நொந்தயாக் காணுதகாட்சிசெய்வேன்

என்னுடையபட்டணத்தில் இன்னமிவள்தானிருந்தால்
உன்னிச்சகலருக்கும் உபதேசஞ்செய்திடுவாள்

சருவேசுவரனுடைய சத்தியமாம்வேதமொழி
திறமாகவேநடக்கச் செய்திடுவாள்தப்பாது

நம்முடையதேவர்களை நகைத்துமிகத்தூஷணித்து
எம்மையுந்தான்கதிப்பா ளிவளிருந்தாலென்றழன்றான்

இவள்புரியுந்தந்திரத்தில் என்னகரின்மக்களெல்லாம்
தவறியிவள்சொல்பேச்சைத் தான்கேட்பாருண்மையிது

சத்திவித்தைசூத்திரங்கள் சகலவிதமுங்கேட்டு
மெத்தவெகுவாய்ப்பயந்து விறைத்துநடுநடுங்கிப்

பயங்கரங்கொண்டென்னுடைய பட்டணத்தைவிட்டகன்று
நயங்களில்லாமற்சிதறி நாடுவிட்டுக்காடுறைவார்

பூருவகாறந்துவக்கிப் பூசைகொண்டதேவர்கள்தாம்
ஊருறவுவிட்டு ஒளித்தோடிப்போவார்கள்

இப்படியேமன்னனொலிவோர் எண்ணியெண்ணியேபார்த்து
எப்படியுங்கன்னியிவள் இங்காகாதென்றுமன்னன்

சேவகரைத்தானழைத்துத் தீங்குடையகன்னியிவள்
ஆவிபிரிந்தேயழிய அருந்தலையைவெட்டுமென்றான்

மடந்தையரைச்சேவகரும் வலுசினத்தோடேயழைத்து
நடந்தார்கொலைக்களத்தே நல்லகன்னிமாதவஞ்சேர்

மாதுமரிகருதாள் மங்கைகொலைக்களத்தில்
நீதமுடன்தவத்தில் நின்றுகொண்டங்கேதுரைப்பாள்

கொலைக்காரச்சேவகரே கோமன்னன்தூதர்களே
நலமுடையோரானோரே நற்பிறவியானோரே

உங்கள்தமக்குநன்மை உண்டாகவேகேளும்
மங்காதசங்கைபெற்று வான்சிறப்புப்பெற்றிடுவீர்

சிந்தைமகிழ்ந்துங்கள்மனச் சித்தமிரங்கியன்பாய்
இந்தநேரந்தனிலே ஏற்றசெபஞ்செய்வதற்கு

ஒருநாழிகைதருவீர் உங்களுக்குநன்மையுண்டு
திருநாதனுங்களுடை தீமைபொறுப்பரென்று

மாதுமரிகருதாள் வஞ்சரெனுஞ்சேவகரை
சாதுகுணத்தோடிதமாய்த் தானிரந்துகொண்டதினால்

வன்கொடியசேவகரும் மாதவஞ்சேர்கன்னியற்கு
அன்பாய்விடைகொடுத்து அருகில்நின்றுபார்த்திருந்தார்

கும்பிட்டுத்தெண்டனிட்டுத் குனிந்துநமஸ்கரித்து
அம்பரனைத்தானோக்கி அரியபரலோகமதைப்

பார்த்துமுழங்காலில்நின்று பத்தியுற்றுமெய்த்தவத்தாள்
ஏற்றரியமெய்ப்பரத்துக் கிருகரங்களுக்கூப்பி

அஞ்சுபஞ்சபூதியமும் அடக்கிப்பயந்தொடுங்கி
எஞ்சலுரையால் இறைவர்சருவேசுவரனைத்

றஞ்சமெனமன்றாடித் தாய்மரியசிஷ்டரையும்
நெஞ்சுதனிலேதரித்து நேசமுடன்வேண்டல்செய்தான்

## வேண்டுதல் புகழ்ச்சி.

### கழிநெடில் விருத்தம்.

ஆரணனே பூரணனே யங்குமெங்கும்
அகண்டபரி பூரணமாய் நிறைந்ததேவா
தாரணியி லென்னையுநீ ரிந்நாள்மட்டுந்
தயைக்கருணைக் கண்பார்த்தீர் தமியாள்யான்செய்
கோரமுறுங் கொடும்பவத்தைப் பொறுத்தாட்கொண்டு
குறையற்ற வுமதுதிருப் பதியிற்சேர்க்க
நேரமீ தருள்புரியும் ஞானனந்த
நிரந்தரனே மனதிரங்கி அழைத்தாட்கொள்ளே.

பாரமெனுந் திருச்சிலுவை சுமந்தெனக்காய்ப்
பாடுபட்டீர் கரங்காலில் பகரொண்ணாத
கோரமுறுங் கூரிரும்பா லுருவரத்தங்
கொப்பளிக்க விலாவதனிற் குத்துமீட்டி
சோரவிடுந் தீர்வைதனக் குள்ளாய்நின்றீர்
தொல்புவியி லெனதுபவந் துடைக்கவென்னைச்
சூரனெலி வோரிடுமித் தீர்வைக்கஞ்சாத்
துணிந்ததற்குள் ளாயிறக்கத் துணைசெய்வாயே.

பேறுடைய மரியகனித் தாயேசேயாம்
பெருமானோ டென்னைவந்து தரிசிப்பாயே
ஊறுபடும் புழுநெளிந்து நாறுங்கும்பி
உடைந்துபொங்கி வடிந்தொழுகு மூனத்தோடு
நாறுகின்ற சீயுடலும் உலகங்கூட
நாங்கலங்கி மலங்கிடஞ்செய் பேயுங்கூட
மாறுபட வேனைத்தியக்கி மயக்கிடாமல்
மதிசேருஞ் சிலுவையுடன் வரவேவேணும்.

### அம்மானை.

வேண்டல்செய்துகொண்டதைத்தான் விரித்தேயுரைப்பதற்கு
பூண்டபத்தியோடேற்றுப் பூதலத்தோர்கேட்டருளும்

### விருத்தம்.

சீர்பொருந்தி யருள்விளைந்து திரியேகாதி
திருஞானக் கொழுந்தாய்மெய் படருந்தேவா
பார்பொருந்தும் பெருஞ்சிலுவை மீதிலேறிப்
பரமெழும்பித் திருவுறைந்து படர்வானுற்ற

ஏர்பொருந்தும் பராபரா சுரூபமேநீ
இரக்கமுள்ள திருத்தாயா லெழுந்தகோவே
பேர்பொருந்தும் படியெனக்குன் பெரியதீர்க்கம்
பெற்றுனது முத்திபெறப் பெற்றேனையா.

மண்ணாசை பொன்னாசை மக்களாசை
வந்தெனைத்தா னிவ்வேளை மறியாவண்ணம்
நண்ணியே யெனக்குதவும் மரணவேளை
நன்மைமட்டில் லாதபரப் பிரமசோதி
எண்ணும லென்னுடலைக் கீழ்ப்படுத்தி
இரையாய்மண் மீதிறந்து பாத்திலேற
விண்ணுடர் தொழுதிறைஞ்சுஞ் சிலுவையோடு
மேவியே மோட்சத்தின் வெளிச்சங்காட்டே

## உலா.

ஒன்றுமில்லாக்காலத் தொருநொடியிலேயமலன்
அன்றுலகும்வானும் அலைகடலும்—நன்றுபெறச்
சந்திரனுஞ்சூரியனுந் தாரகையும்வாயுபல
அந்தமுறுந்தீநெருப்பு மாறுகளுந்—தந்துலகில்
பக்ஷிசராசரமும் பல்லுயிருமூர்வனவும்
சிருஷ்டித்ததேவாதி தேவாநின்—நற்செயலை
ஆரோவளவிட் டளப்பார்விளக்கொளியே
பாரோர்க்கிரங்கிநின்ற பாக்கியமே—நேராக
நம்புமடியாளின் நானிலத்திலேயிருந்து
கும்பிவளர்த்துயிருங் கொண்டிருக்கா—தும்பதியில்
சேரமனதாசைகொண்டேன் தேடரியநின்சரணில்
ஆரவெனைத்தானழையும் அம்பரனே—கூருமருள்
என்னைநினைப்போர்க்குதவி எந்நாளுஞ்செய்வதற்கு
நன்னயமாய்நின்பதவி நாடுதனில்—மன்னுநிலை
கொண்டிருக்கச்செய்தருளுங் கூளியெந்தன்பேர்கேட்டால்
விண்டோடிப்போகவும்நின் வெற்றிபுரி—பண்டுலகில்
கர்ப்பஸ்திரீகள் களர்பிறவிநோக்கிடும்போ
துற்பனமாயென்னை யுருகிநொந்தால்—அற்புதமாய்ப்
பேறுதரச்செய்யும் பெரும்பிணியால்வாடுகின்றோர்க்
காறுதல்செய்தேயுதவும் ஐயாநீ—தேறுதலாய்
என்சிரத்தைவெட்டிடும்போ தென்னுயிரைக்கணத்தில்
பொன்னுலகத்தேயழையும் பொற்புடைய—துன்னுபரம்
சேர்த்தேமயல்புரியுந் தீவினையெல்லாம்போக்கிக்
காத்தெனக்குக்கைதந்து கா.

விருத்தம்.

அந்தியோக்கியாபதியில்சகலபேரும்
அம்புவியிலுள்ளமனுவோரெல்லாரும்
சிந்தைதிகழ்ரோமையெனும்நகரையாளும்
செப்பரியராயனெடுசேனையோரும்
உந்தன் துசத்தியவேதத்திற்சேர்ந்தே
ஓங்குபரமப்பதியாம்மோட்சஞ்சேரச்
சுந்தரவான்சிலுவையையெல்லோரும்போற்றச்
சுருதிமறைப்பூசைசெய்யத்துணைசெய்வாயே.

அம்மானை.

இப்படியேவேண்டல்செய்து இருக்குமந்தவேளையிலே
அப்படியேமோட்சபதி யானபரமண்டலத்தில்

நின்றேயொருபெரிய நேசமுள்ளசத்தமொன்று
நன்றுபெறவேகேட்க நவில்வானோர்தாமுரைத்தார்

மரிகருதாளென்னுநல்ல மாதவஞ்சேரும்விரத்தி
வரிசைதிகழ்மோட்ச வாழ்வடையவேவருக

அஞ்சாதேசற்றும் அகந்தடுமாறுதேநீ
மிஞ்சுபிரபைகள்சூழ விண்ணுலகந்தன்னில்வரத்

தேவபிரசாதமதால் திருக்கதியைத்தானடைந்து
ஏகப்பிரசாதநன்மை ஈறில்லாக்காலமெல்லாம்

உண்டாகப்பூதலத்தில் ஓங்கத்திருப்பதியில்
புண்டரிகப்பூமலரே பூணப்பதியடைவாய்

என்றுபரமசத்தம் இப்படியேசொல்லியபின்
நன்றெனவேநற்றவத்தாள் நளினசந்தோஷத்துடனே

வேண்டல்செய்துகொண்டுநின்றாள் விண்ணுலகத்தேயடைய
ஆண்டசருவேசுவரர்க்காய் அமர்ந்துசற்றேகேட்டருளும்

## வேண்டுதல் புகழ்ச்சி

கிருபைதங்கியதேவகடாட்சமே சருவலோகமுந்தாயானதற்பரா
ஆறுலக்ஷணனுனைவருபனே பூரணப்பொருளாகியபுண்ணியா
ஆதியந்தமில்லாதவனாதியே நீதியேதவறாதநிருமலா
முத்தியானமுழுமுதல்நன்மையே சத்தியப்பொருளாகியதந்தையே

அண்டபிண்டங்கடந்தவனாதியே என்றைக்குமுளதாகியதேவனே
பத்துநீதிபடித்தெனைவைத்தவா உத்தமர்களுயிர்த்துணையானவா
பேயையோட்டியேயென்றனைமீட்டவாதேவமோக்கிஷவிண்ணைத்தி
கற்புநீதிக்கருணையளித்தவாஉற்பனப்பொருளாகியவுத்தமா (றந்தவா

மட்டில்லாதமதுரமெய்வாசகா அட்டதிக்கும்அருளாய்நிறைந்தவா
ஏகஞானச்சொரூபவேகாந்தனே ஆகமங்கள்கடந்தவனாதியே
காரணக்கருவானகடாட்சமே தாரணிக்குருவாகியதந்தையே [வா
மரணவேளைமயங்குவோர்க்கன்பனே கிரணமோட்சகடாட்சமளித்த
உன்னதப்பொருளாகியேவந்தவா தன்னைமிஞ்சியொருபொருளற்றவா
தானதாகியிருந்திடுந்தாபரா ஆனதெய்வவனாதிபராபரா
சரீரமற்றதனிச்சுயமானவா வரிசைநித்தியமெய்ஞ்ஞானவல்லவா
களங்கமற்றகருணைப்ரகாசனே அளவில்லாதஅனந்தகாருண்ணியா
நன்றியேபரவுஞ்சர்வநாயகா என்றுமெங்கும்வியாபித்திருப்பவா
ஆதிகாரணமாகவிருந்தவா சோதிபூரணச்சுந்தரதிரித்துவா
நன்னயப்பொருளாகியதிவ்வியா தன்னையேதுதிப்போர்துணையானவா
என்னையாண்டடிமைகொளுமேகனே உன்னைநான்கண்டுள்ளங்களி
[கூரவே
ஆத்துமத்தையமைத்தவரூபனே சேர்த்தருள்பரமானந்ததிவ்வியா
மோக்ஷத்தின் முழுநன்மையைவீட்டிலே பாக்கியத்தின் பலனது
[பெற்றிடச்
சேர்த்திடுமெனதாத்துமந்தன்னையே காத்துக்கைக்கொள்ளும் காரண
யேசுவே

அம்மானை,

சருவேஸ்பரசோதி தம்முடையதூதர்களை
பிரபைத்திரளொளிகள் பேரின்பசோதிவிட

வரவிடுத்தார்மோட்சத்தின் வானோர்சபைகூடிப்
பரமசுடர்வீணை பலவாத்தியமுழங்க

இறங்கினார்விண்ணில்நின்று இன்னிசைகள்பாடிமண்ணில்
அறம்பொலிந்தகற்புடைய அரிவைதவக்கன்னிகையை

சம்மனசுமார்கூடித் தாங்கியெடுத்தேயுயர்த்தி
அம்மைகன்னிஆத்துமமே அம்புவியைவிட்டகன்று

வந்துபரகதியில் மகிழ்வாய்பராபரனின்
பந்திமிகுங்கதியைப் பார்பூரணவுறுதி

ஆனந்தநன்மைதனை யடைந்திடுவாய்தப்பாது
ஞானந்திகழ்பரம நாதசருவேசுவரனைக்

கண்டுமுகமுகமாய்க் கருணைத்தரிசனத்தை
உண்டுஅடைந்திருக்க உன்னதத்திலேவாராய்

சத்தியவேதந்தனக்காய்த் தாரணியில்பாடுபட்டு
வெற்றிகொண்டஆத்துமமே விண்ணுலகிலேவாராய்

உலகபசாசுஉட லொடுபொருதிவெற்றிபெற்ற
கலைசேர்மரிகருதாம் கன்னியுடைஆத்துமமே

அழியாதமோட்சமதில் அன்பாய்நீவாவெனவே
மொழிந்தேவானோர்கூடி மோட்சந்தனிற்போனார்

கொலைகாரச்சேவகரில் கொடியனொருவன்சினந்து
தலைகுனிந்துமன்றாடுந் தார்குழலைப்பார்த்துரைப்பான்

வெகுநேரமானதினால் வேந்தன்சினந்திடுவார்
தகுநேரமானதிப்போ தலையைக்குனிந்திடுவாய்

என்றுரைக்கக்கன்னி இருகரங்களுங்கூப்பி
வென்றியுடனேசிரசை வெட்டவிடைகொடுக்க

வீரரிருபுறமும் வெஞ்சினமுற்றேயோங்கிக்
கூரியவாளாலே குருதியெழவெட்டினரே

வான்தூதர்வந்து மரிகருதினாத்துமத்தைக்
கோன்சேர்கதிதனிலே கொண்டுசென்றாரம்மானை

இத்தலத்திலுள்ளவர்கள் இக்கதையைக்கேட்டவரும்
பத்தியுடன்பத்துநெறிப் பாதையைக்கைக்கொண்டவரும்

அந்தமுடன்மோக்ஷமதில் அனுதினமும்வாழ்ந்திருப்பீர்
இந்தப்படிநீங்கள் எந்நாளுமேவாழ்வீர்

வாழ்வீர்வளம்பெறுவீர் வான்மோட்சந்தான்பெறுவீர்
தாழ்வில்லாச்சத்யமறை தனிற்சேர்ந்துவாழ்வீரே

எந்தைபரனருளால் எல்லையற்றுவாழ்ந்திருப்பீர்
அந்தியோக்கியாபதியில் அரசனொலிவோர்கையால்

வெந்துயரம்பூண்டிறந்த மெல்லிமரிகருதாள்
சந்ததமும்மோட்சமதில் தன்னைநினைந்தோர்க்காய்

அம்பரனைமன்றாடி அனைவோர்க்குந்தன்னுதவி
தம்பமுறவேபுரிவாள் தப்பாதுசத்தியமே

நற்றவத்தாளென்னுமந்த நங்கைமரிகருதாள்
பெற்றகதைமுற்றும் விரித்துரைத்தேன்வாழியவே.

மரிகருதாள் அம்மானை

முற்றிற்று.

---

PRINTED AT T. S. M. PRESS, MADRAS.